# பட்டாபிஷேகம்

## 1

சூரியன் உச்சிக்கு வந்தபோதும், ஒரு பனை உயரத்திற்கு பனி அடர்த்தியாய் நின்றிருந்தது. குளிர் உடம்பைக் குடைந்தது. காடு முழுவதும் எப்போதும் ஈரமாக இருந்தன. எதிரே பத்து அடி நீளத்திற்கப்பால் எதுவும் தெரியவில்லை. தாவரங்கள் இந்தப் பனியில் கருகி வளர்ச்சியற்று கிடந்தன. காடு முழுவதும் உள்ள மிருகங்கள் மிக நிதானமாய் நகர்ந்தன. பூக்கள் மலராமல் மொட்டாகவே உதிர்ந்தன.

ஒரு காற்று வடக்கேயிருந்து நகர்ந்து வந்து இந்த பனிப் பொழிவை தெற்கே கொண்டு போனால்தான் காடு மறுபடியும் உயிர் பெறும். கடந்த பல தினங்களாய் காடு இயக்கமற்று, இரைச்சலற்று கும்மென்று குமைந்து கிடக்கிறது.

பெரிய பாம்புகள் சுருண்டு கிடக்கின்றன. நீர் முதலைகள் வெகு ஆழத்திற்குப் போய்விட்டன. ஆமைகள் தலையை வெளியே நீட்டவேயில்லை. வேங்கைப் புலிகளும், சிறுத்தைகளும் குகைகளுக்குள் சோம்பலாய் படுத்துக்கிடக்கின்றன. வேட்டையாடுதலை வெகு நாட்களாய் அவை செய்யவேயில்லை. எதிரே இருப்பது



தெரிந்தாலல்லவா வேட்டையாட முடியும். அதுவும் தவிர, இந்தக் குளிரில் பசியே எடுக்கவில்லை.

யானைகள் மணல் தூசை உடம்பெல்லாம் பூசிக் கொள்கின்றன. புற்களுக்குப் போகாது அருகேயுள்ள மரத்தின் கிளைகளை சிறிது சிறிதாய் ஒடித்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன. பெருங்கூட்டமாய் அதிகம் அசையாது தனது குட்டிகளை பெண்யானைகளுக்கு நடுவே வைத்து அந்த பெண்யானைகளை சுற்றி ஆண்யானைகள் காவல் காக்கின்றன. குடும்பம் என்பதன் அழகு யானை கூட்டத்தில்தான் தெரிகிறது.

சிங்கங்கள் இன்னோர் அட்டகாசம். ஆண் சிங்கத்திற்கெதிரே பெண்சிங்கங்கள் நிற்கக்கூடாது. ஆண் சிங்கம் வந்தால் பெண்சிங்கம் தரையோடு தரையாய் உட்கார்ந்து விடவேண்டும். கூடலுக்கு தயார் என்று வாலாட்ட வேண்டும். அல்லது மல்லாக்கப்படுத்து நான்கு கால்களையும் தூக்கி வரவேற்க வேண்டும். இல்லையெனில், பெருத்த சீறலோடு முகத்திலடி விழும். ஆண் சிங்கம் கோபத்தாலும் பசியாலும் இடைவிடாது கர்ஜித்துக் கொண்டிருக்கும். ஒரு சிங்கம் தன் எல்லைகளை மூத்திரம் பெய்து குறித்திருக்கும். வேறு சிங்கம் உள்ளே நுழைந்தால் கடும் சண்டை நிகழும். ஆனால், இந்த பனிக்காலத்தில் எல்லை சண்டைகள் இருக்காது. குடும்ப சண்டைதான் அடிக்கடி நிகழும்.

பகல் குளிரே தாங்க முடியவில்லை, இரவு குளிர் மிகமோசம். பற்களைக் கிட்ட வைக்கும் குளிர். உடம்பைச் சுருளவைக்கும் குளிர். மூச்சுவிட முடியாதபடியான குளிர்.

கடவுளே... வெயில் வராதா என்று ஏங்க வைக்கும் குளிர்.

அந்த குரங்கு இலவ மரத்தின் உச்சியில் நிதானமாக ஏறி காடு முழுவதும் சுற்றிப் பார்த்தது. வடக்கே வெகுதூரம் வரைக்கும் விழி இமைக்காமல் உற்றுப் பார்த்தது. நல்ல வெயில் இருக்கிறது ஆனால், உறைக்கவில்லை. வடக்கத்திக்காற்று இந்தப் பனியை முட்டி மோதி சிதற அடித்தாலொழிய இன்றும் உணவு உட்கொள்ள வழியில்லை. அந்த கருங்குரங்கு சரேலென்று சிலிர்ப்போடு எழுந்திருந்தது. வெகுதொலைவே காற்றின் அலையக் தெரிந்தது. பறவைகள் சுற்றி எழும்புவது பார்க்க முடிந்தது. அந்த குரங்கு தன் துணையைக் கூவி அழைத்தது.

பெண்குரங்கு மூச்சிரைக்க மரமேறி ஆண்குரங்கிற்கு அருகே நின்றது. இரண்டு குரங்குகளும் வடக்கு நோக்கி பார்த்ததை மற்ற மிருகங்கள் ஆவலாக பார்த்தன.

''என்ன காற்று வருமா. பனி கலையுமா. இன்றாவது வெயில் வருமா. என் இளவேனிற்காலம் தள்ளிவருகின்றது. கடவுளே... இந்தக் குளிர் எப்போது போகும்.'' விதம் விதமான குரல்களில் அலுத்துக் கொண்டன.

''காற்று வருகிறது, காற்று வருகிறது.'' பெண் குரங்கு உரக்கக் கூவியது.

எல்லா மிருகங்களும் ஆவலாகப் பார்த்தன. பறவைகள் சடசடத்து உயரப் பறந்தன. சிறிது தூரம் வடக்கு நோக்கிப் போய் காற்று கிளம்பிவிட்டதை தெரிந்து கொண்டு திரும்ப வந்தன. பெண்குரங்கின் கூச்சலை ஆமோதித்தன. பெண்குரங்கு தரையிறங்கி சருகு ஓசையெழ ஓடி இளசுகள் இருக்கும் குகையில் ஒண்டிக் கொண்டது. மிருகங்கள் புதர்களிலும், குகைகளிலும், மரநிழலிலும் ஒடுங்கிக் கொண்டன. பறவைகள் கிளைகளில் இறுக்கமாய் அமர்ந்து கொண்டன. பாம்புகள் இன்னும் சுருங்கின. அந்த



தன் குரங்கு மட்டும் காடு விட்டு பனி நகர்வதை வேடிக்கை பார்க்க தயாரானது.

இந்தக் கூதல் அல்லது குளிர்காற்று மிக மோசமான விஷயம். பறவைக் குஞ்சுகளை இந்தக் காற்று சேதப் படுத்தும்.

எத்தனை தடித்த தோல், அடர்த்தியான ரோமம் இருந்தாலும் இந்தக் காற்று கைகால்களை அசைய வொட்டாது செய்யும். மூச்சை ஸ்தம்பிக்கச் செய்யும். கூதக்காற்று அந்தக் கருங்குரகின் முகத்தில் வேகமாய் அடித்தது. காடு முழுக்க சூழ்ந்திருந்த பனிப் படலம் பெரிய தேர் போல காட்டை விட்டு நகரத் துவங்கியது.

காற்று தொடர்ந்து பலமாக வீச, பனி தெற்கு நோக்கி ஓடத் துவங்கியது. பனி நகர நகர காற்றில் வெளிச்சம் அதிகரித்தது. பறவைகள் உட்கார்ந்த இடத்திலிருந்து இடைவிடாது கத்தின. மிருகங்கள் ஆனந்தக் குரல் எழுப்பின. பனிப்படலம் நகர, கதிரவன் தன் ஆயிரக்கணக்கான கால்களை ஊன்றினான். வெளிச்சம் பரவியதால் சூடும் பரவியது. தேனீக்கள் வெளியே வந்தன. தும்பிகள் பறக்கத் துவங்கின. மறுபடி பனி வராது என்பதற்கு இதுவே சாட்சி. கூட்டுப் புழுக்கள் வெடித்து பல நிறத்து வண்ணத்துப் பூச்சிகள் வெளி உலகு பார்த்தன. தாவரங்கள் சோம்பல் முறித்தன. இலைகள் விரித்தன. ஒடுங்கியிருந்த எல்லா மிருகங்களும் தளர்ந்து சுற்ற ஆரம்பித்தன. பறவைகள் உயரப் பறப்பதும் தாழ்ந்து வருவதுமாய் வித்தை காட்டின.

அந்த ஆண் கருங்குரங்கு மரத்திற்கு கீழே வந்து மிருகங்களை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது. இந்த மிருகங்களின் உண்மையான இயல்பு நாளைக்குத்தான் தெரியும். எல்லா மிருகங்களும் பசியோடு இருக்கின்றன.

தங்களுக்கு வேண்டிய உணவு இந்த காடுகளில் இருக்கிறது. ஆனால், இந்த மிருகங்கள் அற்பத்தனமாய் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும். அடிதடி ரகளை நடத்தும். எல்லைகள் மீறும். அதற்காய் பெரும் சண்டைகள் மூளும். அத்துமீறல் காட்டுக்குள் நடந்தால் பரவாயில்லை. காடு தாண்டி மனிதர்கள் வசிக்கும் கிராமங்களை சேதப்படுத்தும் போதுதான் பிரச்சினை வந்து விடுகின்றது.

உடல் பலத்தால் மனிதனை மிரட்டி அவன் உணவை மிருகங்கள் பறிக்கும்.

மனித புத்தி பலம் உடையவனென்று இந்த காட்டு மிருகங்களுக்கு தெரிவதேயில்லை. சொன்னால் ஏற்றுக் கொள்வதில்லை. இந்த முறை யானைகள் அத்துமீறப் போகின்றன. எத்தனை அடிபட்டாலும் இந்த யானைகளுக்கு புத்தி வருவதேயில்லை.

யானைகள் தெற்கு நோக்கி நகரத் துவங்கின. தெற்கே தான் மிகப் பெரிய நகரமிருக்கிறது. அந்த நகரத்தை கோபமும், வலிவுமிக்க அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு கௌசிகன் என்று பெயர்.

ஆண்குரங்கு கவலையுடன் தரையிறங்கி குகை வாசலில் உட்கார்ந்து கொண்டது.

''வா. கிழங்குகள் பறித்து வரலாம்.''

பெண்குரங்கு அழைக்க, மௌனமாய் பின்னால் போயிற்று.

பனி நகர்ந்ததும், அந்த நகரத்து மக்கள் போகி கொண்டாட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அவர்கள் கிராமத்து வயல்கள் முடிந்து காடு ஆரம்பிக்கும் எல்லையில் பல ஆயிரமாயிரம் யானைகள் நின்றிருப்பதை உணராமல் போனார்கள்.



யானைகள் கதிர் முற்றிய கோதுமை வயல்களை ஆவலோடு பார்த்தான். ஒரு குட்டியானை முட்டாள் தனமாய் வயலிறங்கியது. இருள் சரியும் நேரத்தில் பல நூறு யானைகள் வயலில் இறங்கின. காவல் காப்பவன் அலறிக் கொண்டு கிராம அதிகாரியிடம் தெரிவித்தான். கிராம அதிகாரி குதிரையிலேறி அரண்மனை நோக்கிப் போனான்.

''அவசரம், அவசரம், அரசனை எழுப்புங்கள்'' என்று கூக்குரலிட்டான்.

அரசன் காதில் அந்த கூச்சல் விழுந்தது. யாரும் எழுப்பாமல் கிராம அதிகாரி நோக்கி அவன் நடந்து வந்தான்.

''என்ன... மிருகங்கள் கிராமத்தில் புகுந்துவிட்டனவா?'' தானாகவே கேட்டான்.

''ஆமாம் மன்னவா. யானைகள். ஆயிரமாயிரம் யானைகள், வயல்வெளியை சேதப்படுத்திவிட்டன. விரட்டினால் எதிர்க்கின்றன. என்ன செய்வது என்று தெரியவில்லை மன்னா!'' கிராம அதிகாரி கைகூப்பி அழுதான்.

''யானைகளா?'' கௌசிகன் புருவம் தூக்கினான்.

''உடனே வருகிறேன்'' என்று உத்தரவாதம் கொடுத்தான். கௌசிகனின் மந்திரிகள் கிராமத்தில் போகும்வழி, மக்கள் தொகை, வயல்வெளி, சொத்துமதிப்பு எல்லாம் விசாரித்தார்கள். வரி பாக்கி உண்டா என்று சோதித்தார்கள்.

கிராம அதிகாரியை தனியே அழைத்துப்போய் உண்ண உணவும், குடிக்க மதுவும் கொடுத்தார்கள். அதிகாரி சாப்பிடத் துவங்கிய நேரத்தில் கௌசிகன் வேட்டைக்கான உடைகளோடும், ஆயுதங்களோடும் தயாராகி விட்டான்.

படையைத் திரட்டி பின்னால் வரச் சொல்லிவிட்டு தன் மெய்க்காவல் குழுவோடு குதிரையேறி கிராமம் நோக்கி விரைந்தான்.

பல நாட்கள் உழுது பயிரிட்ட கோதுமைக் கதிர்களை ஒரே இரவில் யானைகள் நாசம் செய்வது எவ்வளவு பெரிய வேதனை. கூட்டமாய் உள்ள யானைகளுக்கு திமிர் அதிகம். விரட்டினால் யானைகள் முன்னேறிப் பாயும். இன்னும் ஆத்திரத்துடன் அழிவு செய்யும். யானைக் கூட்டம் பெருத்து விட்டதென்றால் மற்ற மிருகங்களும் காட்டில் அதிகம் இருக்கின்றன என்றுதான் அர்த்தம். யானைக் கூட்டம் நாட்டிற்கு வந்திருக்கிறது என்றால், மிருகங்களுக்கு மனிதர் பற்றிய பயம் போய்விட்டதென்று அர்த்தம்.

அங்கங்கே யுத்தத்திற்கு போனதால் வேட்டைக்குப் போய் பல வருடங்கள் ஆகிவிட்டன. இந்த முறை கடுமையாக வேட்டையில் இறங்க வேண்டும். நடுக்காடு வரை உள்ளே புகுந்து வேட்டையாடி வரவேண்டும்.

ஆனால், யானை வேட்டை மறந்துவிட்டது. புலிகளோடு போரிட்டும் நாளாயிற்று, கிராமத்தில் போய் இறங்கி எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொண்டு பேசி, பிறகு வேட்டைக்கு இறங்க வேண்டும்.

அரசன் கௌசிகன் வெகுசீக்கிரமே கிராமத்தை அடைந்தான். அரசன் வருவது தெரியாத குடிமக்கள் யாரோ போர்வீரர்கள் என்று அலட்சியமாய் உட்கார்ந்திருந்தார்கள். அவன் கிராமத்தை சுற்றி வந்தான்.

''என்ன, என்ன வேண்டும் உமக்கு?'' கிராம மக்கள் அதட்டினார்கள்.

அரசன் கிராமத்தின் நடுவே குதிரையிலிருந்து இறங்கினான். அரசன் வந்ததைக் குறித்தும் எக்காளம் ஊதப்பட்டது. கிராம மக்கள் பதறி எழுந்தார்கள்.



''மன்னிக்க வேண்டும் மன்னா. உங்களைப் பார்த்து நாளாயிற்று. அடையாளம் தெரியவில்லை'' என்று காலில் விழுந்தார்கள்.

''அப்படியானால் தவறு என்னுடையது. உங்களை நான் சந்திக்க வரவில்லையென்று அர்த்தம். அதனால்தான் இந்தப் பகுதியில் பிரச்சினை உருவாகி விட்டது. எனக்கு அக்கறையில்லாதபோது என் அதிகாரிகளும் அக்கறையற்று இருப்பது இயற்கை. இனி கவலை வேண்டாம். காட்டு மிருகங்களின் தொல்லையை ஒரு முடிவுக்கு கொண்டு வருகிறேன். உண்ண என்ன வைத்திருக்கிறீர்கள்?''

மக்கள் வெட்கத்தோடு அரசனுக்கு கோதுமை உணவு கொடுத்தார்கள். அரசனுக்கு பின்னால் வந்த சிறு தேரில் சுவையான உணவுகள் கொண்டுவரப்பட்டன. அவை மக்களுக்கு வழங்கப்பட்டன. அரசன் இரவு ஒரு கிராமத்து குடிசையில் ஓய்வெடுத்துக் கொண்டான். வெளிச்சம் வந்ததும் கிளம்பினான்.

விடிந்ததும் சுற்றுப்புறத்திலுள்ள கிராம மக்களெல்லாம் அந்த கிராமத்திற்கு அரசனை தேடி ஓடிவந்தார்கள். கையில் அகப்பட்டதை பரிசுப்பொருட்கள் என்று அப்பாவித்தனமாய் கொண்டு வந்தார்கள். மயில்தோகை, புலித்தோல், எருமையின் தோலில் செய்யப்பட்ட வார், காட்டு மிருகங்களின் நரம்புகளிலிருந்து முறுக்கப்பட்ட நாண், தேன், பழங்கள், மண்பாண்டங்கள், மரக்குடுவைகள் என்று எளிமையான பொருட்களை அரசனுக்குப் பரிசாக அளிக்க ஓடிவந்தார்கள்.

கௌசிகருடைய அமைச்சர்கள் திறமைமிக்கவர்கள். அப்படி கூட்டம் அரசன் எங்கு போனாலும் கூட்டம் சேரும். அப்படி கூட்டம்

சேரும் மக்களுக்கு உணவு தேவைப்படும் என்று நன்கு அறிந்தவர்கள். பல முறை அரசனோடு திக்விஜயம் செய்தவர்கள். அப்படி கூட்டம் சேரும் இடங்களில் எல்லாம், கௌசிகன் மந்திரிமார்களை நோக்கித் திரும்பி, உணவுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யலாகாதா என்று கேட்பான். அவன் கேட்குமுன்னரே உணவு பரிமாறல் நடந்து கொண்டிருப்பதை அவனுக்குத் தெரிவிப்பார்கள்.

இப்பொழுது கிராம மக்கள் வருவார்கள் என்று தெரிந்து அமைச்சர்கள் அறுசுவை உணவுக்கு வேகமாக ஏற்பாடு செய்தார்கள். தானிய மூட்டைகளை அவிழ்த்து, பெரிய பாத்திரங்களில் கொட்டி கதம்ப உணவாய் தீமூட்டி வேகமாக தயாரித்தார்கள்.

அறுசுவை உணவு வாசனை கிராமம் எங்கும் பரவியது. அரசன் வருகையால் மிக நல்ல சுவையான ஒரு உணவு, இதுவரை அதிகம் ருசித்திராத ஒரு உணவு சாப்பிடப் போகிறோம் என்கிற சந்தோஷம் வெளியானது அந்த மக்கள் முகத்தில் தெரிந்தது.

குழந்தைகளும் பெண்களும் தாங்க முடியாத சந்தோஷத்தில், கூச்சலிட்டும் பாட்டுப் பாடியும் ஒருவரையொருவர் அடித்துக் கிள்ளிக்கொண்டும் வலம் வந்தார்கள்.

கௌசிகர் மக்களின் எளிமையையும் வெகுளித்தனத்தையும் உற்றுப் பார்த்தார். அதில் அதிகம் வெகுளியாய் இருந்தவர்களை அருகே அழைத்து, அவர்கள் கையைப் பிடித்து, தலையைத் தடவி, கேள்வி கேட்டு வாய் குழற வைத்தார்.

அவர்கள் வாய் குழறுவது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. அவர்கள் தடுமாறுவது அவர்களுக்கே சிரிப்பாக இருந்தது. தாங்களே தடுமாறிவிட்டு தாங்களே



வாய்விட்டுச் சிரித்து, பதிலொன்றும் சொல்லாமல் அரசனை வணங்கிவிட்டுப் போனார்கள்.

எல்லையில்லாத ஆனந்தம் அரசன் வருகையால் அந்த கிராமம் முழுவதும், சில்லென்று பூத்துக்கிடந்தது.

சட்டென்று அரசன் கூர்மையானான். கிராம அதிகாரிகளை அழைத்தான். என்னென்ன வகையான மிருகங்கள், என்னென்ன வகையான தொந்தரவுகள்... உரக்க விசாரித்தான்.

பசி பொறுக்காத யானைகள்தான் முதலில் வந்தன. யானைகளுக்கு விதவிதமான தாவரங்களை தின்ன ஆசை குறிப்பாய் கோதுமை வயல்களில் மேய யானைகளுக்கு மிகவும் விருப்பம். அவை ருசிக்கு அலைந்து கூட்டம் கூட்டமாய் கோதுமை வயல்களின் எல்லைகளில் நின்று கொண்டு வெகுநாள் உற்றுப்பார்த்து ஒரு நாள் திடீரென்று இறங்கின. யானைகள் கிராமங்களின் பக்கம் போவதைப் பார்த்து காண்டாமிருகங்களும், காண்டாமிருகங்கள் போவதைப் பார்த்து ஒட்டகச்சிவிங்கிகளும், ஒட்டகச் சிவிங்கிகள் போவதைப் பார்த்து புலிகளும், சிங்கங்களும் கிராமங்களின் பக்கம் வந்துவிட்டன.

யானைகளால் வயல்சேதம் ஏற்பட்டன. ஒட்டகச் சிவிங்கியால் பெரும் மரம் உட்பட மொட்டையடிக்கப் பட்டன. சிங்கங்களும், புலிகளும், ஆடுகளையும் மாடுகளையும் அடித்துத் தின்றன. இதில் மிக மோசமானது ஓநாய்கள்தான். மனிதரத்தம் ருசி தெரிந்துவிட்ட ஓநாய்கள், குழந்தைகளை குறிவைத்தன. பெண்களைத் துரத்தின. கிராமத்தில் எந்நேரமும் இடைவிடாத நடுக்கம் இருந்தது.

யார் சலசலப்பு கேட்டாலும் கையில் ஈட்டியையோ வாளையோ, உரக்கப்பிடித்து கத்துவதுதான் வழக்கமாக

இருக்கிறது. அடிக்கடி கூச்சலும் பயமும் கிராமத்தில் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்று சில கெட்டிக்கார இளைஞர்கள் கூறினார்கள்.

'எந்தப் பக்கம் வேட்டையைத் துவக்க வேண்டும், எதை முதலில் வேட்டையாட வேண்டும்?' அரசன் மக்களையே விசாரித்தான்.

'யானைகளை விரட்டி விட்டால் போதும். ஆனால், ஓநாய்களையும் வேங்கைப் புலிகளையும் நீங்கள் அடித்துக் கொன்றாக வேண்டும். ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக வருகின்றன. ஒரு நேரம், கிட்டத்தட்ட இருநூறு முந்நூறு ஓநாய்கள் கிராமத்தை சுற்றிக்கொண்டன. நெருப்பு வைத்துக் கொண்டு அவைகளைத் தடுத்து தற்காத்துக் கொண்டோம்'' என்று இளைஞர்கள் சொன்னார்கள்.

அரசன் மெல்லிதாய் கோபமானான். தன் அமைச்சர்களை அழைத்தான். ஆலோசனை செய்தான். அவர்கள் குழுக்களாகப் பிரிந்தார்கள். மூன்று திக்கில் நகர்ந்தார்கள். ஒவ்வொரு திக்கிற்கும் மிகப் பலமான திறமையுள்ள தலைவனை முன்னே அனுப்பி வைத்து, அரசன் தென்திசை நோக்கிப் பயணப்பட்டான்.

தெற்கில்தான் காடு அடர்த்தியாகிறது. தெற்கு நோக்கி அரசன் நடக்க, அவனுக்குப் பின்னே ஒரு நல்ல படையும் கிராமமக்களும் பின்தொடர்ந்தார்கள்.

பேரிகைகள் முழங்கின. எக்காளங்கள் ஊதப்பட்டன. கிராமத்து இளைஞர்கள் மெல்லிய பிரம்பாலும், வாட்களாலும் புதர்களை அடித்து வழி ஏற்படுத்திக் கொண்டு முன்னே போக, அரசன் குதிரையில் பின்னே போனான். சலசலப்பு ஏற்படுத்தும் புதர்களின் மீது, சரமாரியாக அம்பெய்தான். விலங்குகளை வெளிக்கொண்டு



வந்தான். சுற்றி நின்ற இளைஞர்கள் பாய்ந்து மிருகங்களை அடித்துப் போட்டார்கள். சிறுத்தைகளை கையால் தாக்கினார்கள். அரசன் இருக்கிற தைரியத்தில் மிக வேகமாக சண்டையிட்டார்கள்.

அரசன் ஒரு ஓநாய் கூட்டத்தைப் பார்த்து, எல்லோரையும் அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு ஓநாய்கள் கிராமத்தை எப்படி சுற்றிப்பிடிக்கிறதோ அதே போல மெல்ல மெல்ல வரிசையாகி, சுற்றி ஓநாய்களை வளைத்துப் போட்டான். வளைத்துக் கொண்டு, தன்னுடைய வளையத்தை நிதானமாக சுருக்கினான். பாதிவளையம் சுருங்கியபோது, ஓநாய்கள் காட்டில் மனித வாசனை அறிந்து விழித்துக் கொண்டன. நாலா பக்கமும் வேகமாக ஓடத் தலைப்பட்டன.

ஓநாய்களை கவண்கல்லாலும், கம்புகளாலும் அடித்து விரட்டி, நடுமையத்திற்கு கொண்டு வந்தார்கள்.

அரசன் குதிரையில் ஏறி, கையிலுள்ள குறுந்தடியால் ஓநாய்களுக்கு நடுவே போய் வேகமாக பல்வேறு ஓநாய்களை அடித்துப் போட்டான். ஓநாய்கள் அவனைத் தாக்க முற்பட்டபோது, கையாலும் காலாலும் அவைகளை சிதறடித்தான்.

அரசனுடைய உக்கிரத்தையும், கோபத்தையும், சண்டை போடும் லாவகத்தையும் பார்த்து கிராமமக்கள் கைகொட்டி சந்தோஷப்பட்டார்கள்.

ஒரே ஆளாக பல நூறு ஓநாய்களை அடித்துப் போட்டு, மேற்கொண்டு தொடர்ந்து வேட்டையாடினான்.

அரசனுடைய புகுதலால் காடு ரணகளமாயிற்று. வேங்கைகளும் சிங்கங்களும் கருஞ்சிறுத்தைகளும் காண்டா மிருகங்களும் ஒட்டகச்சிவிங்கிகளும் யானைகளும் அடித்து

துவம்சம் செய்யப்பட்டன. யானைகள், மிகக் கடுமையா தண்டிக்கப்பட்டன. நெருப்புப்பந்தத்தால் அடிக்கப்பட்டன அப்படி அடிக்கப்பட்ட யானைகள் பயத்தாலும் வலியாலு உரத்துப் பிளிறின. அந்தக் குரல் கேட்டு மற்ற யானைக தெற்குநோக்கி வேகமாக ஓடின. யானைகள் காடுகள் விட்டு வெகுதூரம் ஓடுவதை கிராம மக்கள் கைகொட்டி வேடிக்கை பார்த்தார்கள்.

மக்கள் அதற்குமேலும் பின்தொடர வேண்டாம் என்று அரசன் கட்டளையிட்டான். காட்டுவிலங்குகளின் பயம் பெரும்பாலும் குறைந்துவிட்டது. எனவே கிராமத்திற்கு போகும்படி அவர்களுக்கு விடை கொடுத்தான். தான் மட்டும் யானைக் கூட்டத்தை, இன்னும் சற்றுத் தொலைவே விட்டுவிட்டு வருவதாகச் சொல்லி தனது படைவீரர்களோடு யானைகளைத் துரத்திக் கொண்டு போனான்.

யானைகள் ஒரு பாலைவனம் கடந்தன. அரசனும் பின்தொடர்ந்தான். யானைகள் இன்னொரு காட்டுக்குள் நுழைந்தன. அரசனும் அவைகளை விடாது துரத்தினான். யானைகள் பல்வேறு திக்கில் சிதறிப் பிரிந்தன. அரசன் களைப்புற்று காட்டின் மையப்பகுதியில் தன்னுடைய சிறுபடையோடு மரத்தடியில் படுத்துறங்கினான்.

பல்வேறு திக்கில் பிரிந்திருந்த அவனுடைய பெரும்படை மறுபடியும் ஒன்றுகூடி அரசனைத் தேடி பின் தொடர்ந்தது. அதுவும் பாலைவனம் தாண்டியது. காட்டுக்குள் புகுந்தது. அரசன் களைப்புற்று தூங்குவதை பார்த்து தானும் ஆயுதங்களை அவிழ்த்து வைத்துவிட்டு, ஆழ்ந்து உறக்கத்தில் வீழ்ந்தது.

அரசன் கண்விழித்தபோது. அவனைச் சுற்றி பெரும்படை இருப்பதை உணர்ந்தார். திரும்பி நகரத்திற்குப்



போயிருக்கலாமே, என்னை ஏன் பின்தொடர்ந்தீர்கள் என்று செல்லமாக கோபித்துக் கொண்டார். ஆனால், அவருக்குத் தெரியும். அவர் வீரர்கள் அவரில்லாமல் நகரத்திற்கு ஒரு நாளும் திரும்ப மாட்டார்கள். எனவே, சந்தோஷமானார். உணவுக்கு என்ன செய்வது என்று யோசித்தார்.

அவன் ஒற்றர்கள் அவன் சொல்வதற்கு முன்பாகவே, நாலாதிக்கும் சென்று, உணவு இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு வந்தார்கள். ஒரு ஒற்றன் முன்வந்து அரசரை நமஸ்கரித்தான்.

''மன்னா. இங்கிருந்து அரைநாள் குதிரைப்பயணத்தில் ஒரு நீர்சுனை இருக்கிறது. அந்த நீர்சுனைக்கருகே ஒரு நதி ஓடுகிறது. நதிக்கும் நீர்சுனைக்கும் நடுவே ஒரு அழகிய ஆஸ்ரமம் இருக்கிறது. அந்த ஆஸ்ரமத்தில் பல இளம் துறவிகள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தலைவராக வசிஷ்டர் என்கிற முனிவர் ஆஸ்ரமத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். இடைவிடாது வேத பாராயணம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கென்று சிறிதளவு உணவு சேமித்து வைத்திருக்கிறார்கள். அதை பக்குவப் படுத்திச்சுவையோடு ருசித்து உண்கிறார்கள். அந்த வாசனை மிக சுகமாக இருக்கிறது. நம்மில் ஒரு பத்துப் பேருக்கு அவர்களால் உணவிட முடியுமே தவிர, எல்லோருக்கும் உணவிடுவது என்பது இயலாத காரியம். அந்த ஆஸ்ரமத்திற்கு எப்படிப் போவது என்று எனக்கு வழி தெரியும். நீங்கள் விருப்பப்பட்டால், உங்களை அழைத்துச் செல்ல தயாராக இருக்கிறேன்'' என்று சொன்னான்.

அரசன் மனம் மகிழ்ந்தான். ஒற்றனைப் பாராட்டினான். அமைச்சர்களை அழைத்துக் கொண்டு குதிரையேறி வசிஷ்டரின் ஆஸ்ரமம் நோக்கிப் போனான்.

காடு முடிந்து புல்தரை ஆரம்பித்தது. புல்தரை சில மைல்களுக்கு பரந்து கிடந்தது. புல்தரைக்கு நடுவே தோப்பும், தோப்பிற்கு நடுவே அழகிய சுனையும், சுனையைத் தாண்டி சிறுசெடிகள் வைத்த தோட்டமும், தோட்டத்திற்கு நடுவே குடிலும், குடிலைத் தாண்டி வயல்வெளியும் வயல்வெளியைத் தாண்டி ஆறும் மிகத் திட்டமிட்டு அழகாக கட்டப்பட்டிருந்தன, பத்துப் பதினைந்து குடில்கள் உறுதியாக எழுப்பப்பட்டிருந்தன. கருங்கற்கள் மண்பூசி நிற்கப்பட்டு கிட்டத்தட்ட கோட்டை போல, ஆஸ்ரமத்தைச் சுற்றி சுவர் எழுப்பப்பட்டிருந்தது. ஆனாலும் கதவுகளின்றி ஆஸ்ரமத்தின் வழி விரியத் திறந்திருந்தது.

மருத்துவ குணமுள்ள பல்வேறு வித மலர்ச்செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. கிழங்குகளும் கனிவர்க்கங்களும் பயிர் செய்யப்பட்டிருந்தன. குறுஞ்செடிகளில் பெரிய கனிகள் கனிந்து தொங்கின. தாவர இயலைப் பற்றி மிகத் தெளிவாகத் தெரிந்த ஒரு குழுவாக அந்த ஆஸ்ரமம் இருந்தது.

குதிரையிலிருந்து கீழே இறங்கி மன்னன் கௌசிகன் தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டே ஆஸ்ரமம் நோக்கி நடந்தான். அவன் வருவதை புள்ளிமான்களின் துள்ளலால் ஆஸ்ரமத்து பிள்ளைகள் அறிந்து கொண்டார்கள். வந்து பணிந்து யாரென்றே விசாரிக்காமல், வருக, வருக என்று அழைத்துப் போனார்கள்.

ஆஸ்ரமத்தின் வாசலை அடைந்ததும் கால் கழுவவும், குடிக்கவும் தனித்தனியே நீர் தந்தார்கள். அவனை இன்னும் உள்ளே அழைத்துப்போனார்கள். ஆஸ்ரமத்தின் முற்றத்தில் மணை போட்டு உட்கார வைத்தார்கள்.



ஆஸ்ரமத்தின் முற்றம் பசுக்களின் சாணத்தால் நன்கு மெழுகப்பட்டு, நறுமணத்தோடு தூசுகளின்றியும் சுத்தமாக மழமழப்பாக காட்சியளித்தது.

வெகு தொலைவே புல்வெளியில் பல நூறு பசுக்கள் மேய்ந்து கொண்டிருப்பது, சப்தத்தால் உணர முடிந்தது.

கட்டுக்கட்டாக தானியங்கள் இருப்பதைப் பார்த்து வயலில் நல்ல விளைச்சல் என்று தெரிந்துகொள்ள முடிந்தது. மான்கள்கூட தானியங்களை அவ்வப்போது தின்றுகொண்டு இருப்பதால், அளவுக்கு மிஞ்சியே பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிந்தது.

மன்னன் ஆசனத்தில் உட்கார்ந்தான். மாணவர்கள் தங்கள் குருவான வசிஷ்டரை நோக்கி ஓடினார்கள்.

வசிஷ்டர் தன்னுடைய ஆஸ்ரமத்தில் ஜபத்தி லிருந்தார். மாணவர்கள் வருகையை உணர்ந்து கொண்டார். வெளியே வந்தார். என்னவென்று விசாரித்தார். அரசரைப் போல தோற்றமுள்ள யாரோ ஒருவர் வந்திருக்கிறார் என்று கூற, அமைதியாக வசிஷ்டர் நடந்து வந்தார். வந்திருப்பவரை நோக்கி கைகூப்பினார். மன்னன் கௌசிகனா என்று ஆதுரத்துடன் விசாரித்தார்.

மன்னன் வியந்தான். ஆமாம் என்று அவரை அடி பணிந்தான். அரசனை முனிவர் ஆசீர்வதித்தார்.

''நான் கௌசிகன் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''உன்னுடைய பராக்கிரமத்தை நான் நன்கு அறிவேன் மன்னா. மிகக் கொடிய மிருகங்களின் ஓலக்குரல்கள் தொடர்ந்து சில நாட்களாக இரவெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தன. பாலைவனத்தைக் கடந்து மிருகங்கள்

இந்த காட்டுப் பகுதியில் வரவேண்டுமென்றால், மிகக் கடுமையாக அவை தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்து கொண்டான்.

மிருகங்கள் மிருகங்களை இத்தனை கடுமையாக தண்டிப்பதில்லை. எனவே யாரோ மனிதர்கள்தான் தண்டித்திருக்க வேண்டும் என்பது எளிதாக முடிவாயிற்று. மனிதர்களில் பராக்கிரமம் மிக்கவன் இந்தப் பகுதியில் கௌசிகன் மட்டுமே என்பது எனக்குத் தெரியும்.

அது மட்டுமின்றி, இந்தக் காடுகளில் மிருகங்கள் பெருத்துப்போய், பல்கிப் பெருகி மக்களை அதிகம் தொந்தரவு செய்யத் துவங்கிவிட்டன. இனப்பெருக்கத்தின் விளைவு இது. இதற்கு தண்டனை இனப்பெருக்க குறை அதான். எனவே வேட்டையாட மக்களின் குறை தீர்க்க மன்னன் வந்துவிட்டான் என்பது எனக்குப் புரிந்து விட்டது.

இந்தப் பாலைவனம் தாண்டி, இந்தக் காட்டுப் பகுதிக்குள் நுழைந்து, இந்த ஆஸ்ரமம் தேடி வரவேண்டும் என்றால், அதுவும் வடக்குப் பகுதியிலிருந்து வரவேண்டும் என்றால், கௌசிகனால் மட்டும்தான் முடியும் என்பதை நான் நன்கு அறிவேன்.

கௌசிக மன்னா, உன் பராக்கிரமம் வெல்க! நல்லவர்களுக்கு துணைபோக, உனது வலிவு உதவட்டும். உன் அரசு நல்லரசாக விளங்கட்டும்'' என்று ஆசீர்வதித்தார்.

மன்னன் முனிவரின் அறிவு கண்டு சந்தோஷடைந்தான். அவரிடம் நிறைய கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதே சமயம் பசியினால் சுற்றும் முற்றும் பார்த்தான்.

அவன் முகம் வாடியிருப்பதும், உடம்பு சற்று தளர்ந்திருப்பதும் கண்ணுக்கு கீழ் வளையங்கள் தோன்றி,



பசியால் அவன் வருத்தப்படுவதையும் முனிவர் தெரிந்து கொண்டார்.

''பிறகு பேசிக்கொள்வோம் மன்னா. உணவு தயாராக இருக்கிறது. உண்டுவிட்டு இளைப்பாறுங்கள்'' என்று உபசரித்தார்.

மாணவர்கள் சிறிய மட்கலங்களில் கோதுமை உணவும், அரிசிச்சோறும் பக்குவப்படுத்தப்பட்ட காய்களும், உப்பில் இடப்பட்ட இறைச்சியும் அவனுக்கு கொண்டு வந்து கொடுத்தார்கள்.

மன்னன் நிதானமாக உண்ண ஆரம்பித்தான். முனிவர் அவனை மறுபடி ஆசீர்வதித்துவிட்டு, தன் குடிலுக்குப் போனார்.

முனிவர் நகர்ந்ததும் மன்னன் அவசரமாக உண்ணத் துவங்கினான். இன்னும் சற்று கொடுங்கள் என்று கேட்டுக் கேட்டு வாங்கி உண்டான். போதும் போதும் என்கிற வரையில் முனிகுமாரர்கள் அவனுக்கு பரிமாறினார்கள்.

உண்டு முடிந்ததும் அவனுக்கு தன்னுடைய பெரிய சேனை பசியால் காத்திருப்பது நினைவிற்கு வந்தது. மறுபடியும் மன்னன் வருத்தமானான்.

மன்னனின் வருத்தம் குடிலுக்குள் அமர்ந்திருந்த வசிஷ்டரின் மனதைத் தொட்டது. தன் உணவை முடித்துவிட்டு வெளியே வந்த மன்னனுக்கு எதிரே அமர்ந்தார்.

''உன்னுடைய படைகள் பாலைவனத்திற்கு அப்பால் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறதா? அவைகளையும் இங்கு வரச்சொல்லலாமே. உன் படைகள் பாலைவனம் தாண்டுமா. வேண்டுமெனில், குதிரைகளில் உணவுப்

பொறிகள் ஏற்றிக் கொள்வோம். அந்தக் காடு நோக்கி உங்கள் மெய்காப்பாளர் சிலர் போய்வரட்டும். பாலைவனம் தாண்டுவதற்கான அளவுக்கு உணவுகள் விநியோகம் செய்துவிட்டு, படைவீரர்கள் உண்ட பிறகு, அந்தப் படைகளை அழைத்துக் கொண்டு இந்த ஆஸ்ரமம் வந்து விடட்டும். ஆஸ்ரமத்திற்கு வந்தபிறகு, அவர்களுக்கு நான் உணவிடுகிறேன்'' என்று மிகுந்த பிரியத்துடன் பேசினார்.

''ஐயா! உங்களுடைய அன்பிற்கு நன்றி. ஆனால், படைகள் என்று நீங்கள் நினைப்பது நூறுக்கு குறைந்த எண்ணிக்கையோ அல்லது ஆயிரமான எண்ணிக்கையோ அல்ல. என் படைகள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வீரர்களைக் கொண்டவை. அவர்களுக்கு உணவெடுத்து வருகின்ற ஒரு முறையும் எங்களிடையே உண்டு. ஆனால், காட்டுக்குள் வெகுதூரம் வந்துவிட்டபடியால் இனி உணவெடுத்து வருவதென்பது சிக்கலாகப் போகும். காடுகளிலுள்ள கிழங்குகள் ஒரு லட்சம் பேருக்கும் போதுமானவை அல்ல. எனவே அவர்களை திரும்பி அனுப்பிவிடலாமென்று நினைக்கிறேன்.''

''இவ்வளவு தொலைவு வந்துவிட்டு திருப்பி அனுப்புவதில் உயிர் நஷ்டங்கள் ஏற்படக்கூடும். சிலர் உணவின்றி சோர்ந்து விழக்கூடும். அப்படிச் செய்ய வேண்டாம் உணவுகள் இப்போது தயாராகிவிடும். அவைகளை மெய்காவலர்களிடம் கொடுத்து அனுப்பு. படைவீரர்களை பாலைவனம் தாண்டி இங்கு அழைத்துவர ஏற்பாடு செய். உணவுக்கு நான் பொறுப்பு.''

''ஐயா, வசிஷ்ட முனிவரே... எப்படி உணவு தருவீர்கள்?''

''அதை நான் கவனித்துக் கொள்கிறேன். மன்னர் உறங்கட்டும். தெற்கு பார்த்து பரண் அமைத்து



வைத்திருக்கிறேன். சிலுசிலுப்பாய் காற்று வரும். சுற்றி மல்லிகையும் முல்லையும் இருவாட்சியும் பயிரிட்டிருக்கிறேன். அந்த வாசனை கிறங்கடிக்கும். பூச்சிகள் பொட்டுகள், கொசுக்கள் உங்களை மொய்க்காவலிருக்க பரணையைச் சுற்றி மெல்லியதாய் நறுமணப்புகை போடச் சொல்லியிருக்கிறேன். தூக்கம் கண்களை இழுத்துக் கொள்ளும். மன்னர் ஆழ்ந்து உறங்கினால்தான் அறிவார்த்தமாய் சிந்திக்க முடியும். எனவே, படைவீரர்கள் பற்றிய கவலையை இந்த வசிஷ்ட முனிவரிடம் விட்டுவிட்டு நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மன்னன் நலமாக இருப்பதில்தான் குடிமக்களுக்கு பயனுள்ளது. அதைச் செய்யவேண்டியது, மன்னனை உபசரிக்க வேண்டியது என் கடமை'' என்று சொல்லி மாணவர்களுக்கு சைகை செய்தார்.

மாணவர்கள் மன்னனை அழைத்துப் போனார்கள். பரண் காட்டினார்கள். மன்னன் பரணில் படுத்துக் கொண்டான். சொன்னதுபோல புகைதீபம் போடப்பட்டது. பூச்சிகளிலிருந்தும் கொசுக்களிலிருந்தும் அந்த தூபம் காப்பாற்றியது.

சுற்றியுள்ள பூக்கள் விரிவடைய சுகந்தமான மணம். ஆஸ்ரமம் முழுவதும் பரவியது. மன்னன் வேட்டையாடிய அலுப்பு தீர, உண்ட களைப்பு தீர ஆழ்ந்து உறங்கினான்.

அவன் படைவீரர்கள் சிறிதளவு உணவு எடுத்துக் கொண்டு, பாலைவனம் தாண்டி ஆஸ்ரமம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். இரண்டு நாட்களில் ஆஸ்ரமத்திற்கு வந்தார்கள். ஆஸ்ரமத்தைச் சுற்றியுள்ள தோப்புகளில் அமர்ந்து கொண்டார்கள்.

வசிஷ்டமுனிவர் தனியாக ஒரு குடிலுக்குப் போனார். குடிலில் ஒரு பசு கட்டப்பட்டிருந்தது.

உருவம் பசுவாக இருந்தாலும், அது மிகச் சக்தியுள்ள ஒரு பெண்போல பலருக்கு காட்சியளித்தது. வசிஷ்ட முனிவர் வந்ததும் பசுவைச் சார்ந்துள்ள பெண் கைகூப்பி வணங்கினாள்.

சக்தி ரூபமான, அன்னபூரணியான அவளை வசிஷ்டரும் வணங்கினார்.

''தாயே... காமதேனு. அரசர் வந்திருக்கிறார். அவனைத் தொடர்ந்து பெரும்படை வந்திருக்கிறது. எல்லோருக்கும் உணவிட வேண்டியது நமது கடமை.

தாயே... தயவுசெய்து இங்கு வந்த அனைவருக்கும் அறுசுவையான உணவும், இதுவரை அவர்கள் சாப்பிட்டிராத நறுமணமும் தூய்மையும் பலமுமிக்க உணவும் தரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்'' என்று பணிவோடு வேண்டினார்.

அந்தப் பெண் சரியென்று தலையசைத்தாள். மறுபடி வசிஷ்டரை வணங்கினாள்.

அந்தப் பசு குடில் விட்டு வெளியே வந்தது. மெல்ல நடந்தது. ஆஸ்ரமத்திற்கு மறுபுறமுள்ள ஆற்றங்கரையில் புல்வெளியில் நின்று நின்று நடந்தது. அது நின்ற இடமெல்லாம், விதம்விதமான சித்ரான்னங்கள் தோன்றின. பெரும் பாத்திரத்தில் கோதுமை உணவும், அரிசி உணவும், பாலும் தயிரும், தேன்கலந்த இனிப்புகளும், பாகு கலந்த பழங்களும், பருப்புகள் கலந்த உணவுகளும் தோன்றின.

சீடர்கள் காட்டு இலைகளைப் பறித்து அழகிய தொன்னைகளை விரைவாக செய்ய ஆரம்பித்தார்கள். முனிவர் சைகை செய்ய, ஓடிப்போய் படைவீரர்களைக் கூப்பிட்டார்கள். படைவீரர்களை வரிசையாய் வரச் சொன்னார்கள். எல்லோர் கையிலும் இலையிலான



தொன்னையைக் கொடுத்தார்கள். ஒவ்வொரு இடமாய் வர, அரிசி சோறும் கோதுமை சோறும் மற்றவகையான உணவுவகைகளும் அந்த தொன்னையில் போட்டார்கள்.

தொன்னைகள் வழிய வழிய உணவுகள் எடுத்துக் கொண்டு படை வீரர்கள் மரத்தடி நோக்கிப் போனார்கள். அமர்ந்தார்கள். ஆனந்தமாக உண்டார்கள். பசி தீராதவர்கள் மறுபடியும் வந்து உணவு கேட்டார்கள். அவர்களுக்கும் தரப்பட்டது.

திரவரூபத்தில் மெல்லிய போதை தரக்கூடிய மதுவகைகளும், பசியை கிளறக்கூடிய மருந்து வகைகளும் தரப்பட்டன. அவர்கள் அவ்விதமான திரவங்களை சாப்பிட்டுவிட்டு மறுபடியும் உணவுக்கு வந்தார்கள். வயிறார சாப்பிட்டார்கள். நடந்த களைப்புதீர படுத்து தூங்கினார்கள்.

மன்னன் எழுந்தான். ஆனந்தமாக உறங்கும் தன் படையைப் பார்த்தான். அதிசயப்பட்டான். இவ்வளவு பேர் உணவு சாப்பிட்டு இலைகளை ஒரு குவியலாய் எறிந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. எல்லோர் முகத்திலும் தெரிந்த திருப்தி சந்தோஷமாக இருந்தது. மீதியிருந்த உணவை அவர் ருசி பார்த்தார்.

உணவின் ருசி அதிசயிக்க வைத்தது. இப்படிப்பட்ட உணவை அவன் அரண்மனையில் அவனுக்கு யாரும் செய்து தந்ததே இல்லை. மன்னன் ஆச்சரியத்தோடு முனிவரை திரும்பிப் பார்த்தான்.

''லட்சம் பேருக்குமேல் இவர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் உணவு தயாரிக்கும் சக்தி உங்களுக்கு எப்படி வந்தது?'' என்று பக்தியோடு வினவினான்.

''என்னிடம் காமதேனு என்ற ஒருவகை பசு இருக்கிறது. அது கேட்பதைக் கொடுக்கவல்லது. நான் கை

கூப்பி காமதேனுவிடம் உங்களுக்கும் படைவீரர்களுக்கும் உணவு தரச் சொன்னேன். இதோ உணவு தயாராக இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்கள், இங்கே தங்கி உணவருந்திவிட்டு பிறகு போகலாம்'' என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

மன்னன் காமதேனுவை ஆவலோடு பார்த்தான். அன்றும், மறுநாளும் மிக அற்புதமான உணவு காமதேனு தயாரித்துக் கொடுத்தது. அது நின்ற இடமெல்லாம் புதிது புதிதாக உணவுகள் தோன்ற, அவைகளை சீடர்கள் பரிமாறிக் கொள்வதைப் பார்த்து அரசன் திகைப்படைந்தான். மூன்றாவது நாளும் அதேவிதமாக அற்புதமான உணவு அவனுக்குத் தரப்பட்டது.

அரசன் காமதேனுவை ஆவலோடு பார்த்தான். ஆசைப்பட்டான். முனிவரை நோக்கி நடந்தான். நன்றி சொன்னான்.

''இன்னுமொரு விண்ணப்பம்'' என்று கைகூப்பினான்.

முனிவர் புருவம் உயர்த்தி என்ன என்று கேட்டார்...

''இந்த உலகத்தின் சிறந்த பொருள் அரசரிடம் இருப்பது நல்லதல்லவா?'' என்று மன்னன் கேட்க, முனிவர் புரிந்து கொண்டார்.

''உண்மைதான். ஆனால், எது யாரிடம் இருக்க வேண்டும் என்கிற ஒரு விதி இருக்கிறது. ஒரு பொருளை நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என்றால், அதற்கு ஒரு தகுதி வேண்டியிருக்கிறது, சிலசமயம் அந்தத் தகுதியை அந்தப் பொருளே தீர்மானிக்கிறது.

காமதேனு இங்கு இருக்க விரும்பினாள். நான் வைத்துக் கொண்டிருக்கிறேனே ஒழிய, காமதேனுவின் மீது



எனக்குப் பெரிய பிடித்தமில்லை. காட்டிலே கிடைக்கின்ற கனிகளும் கிழங்குகளும் தானியங்களும் எனக்குப் போதுமானவை. ஆனால், உன்னைப்போன்ற அரசர்கள் பெரும் படையோடு வரும்போது, காமதேனுவின் உபயோகம் என்னவென்று எனக்குப் புரிகிறது.

காமதேனுவை நீ விரும்பிக் கேட்கிறாய். தருவதற்கு எனக்கு சம்மதம்தான். ஆனால், காமதேனுவுக்கு சம்மதமில்லை. எனவே, இந்த ஆசையை மறந்துவிடுவது நல்லது'' என்று சொன்னார்.

''உங்களுக்கு கொடுக்கப் பிடிக்கவில்லை என்பதை மறைமுகமாக, காமதேனுவிற்குப் பிடிக்கவில்லை என்கிறீர்கள். இது நல்லதல்லவே...'' கௌசிகன் குரல் உயர்த்திப் பேசினான்.

''கௌசிகா... நான் காட்டில் வாழ்பவன். காமதேனுவை வைத்துக் கொண்டு, இந்த இடத்தில் ஒரு நகரத்தையே சிருஷ்டித்திருக்க என்னால் முடியும். நான் அப்படிச் செய்யவில்லை. காமதேனுவை வைத்துக் கொண்டு எந்த பயிர்பச்சையும் செய்யாமல், வெறுமே உணவுகளை உற்பத்தி செய்து, அறுசுவை அன்னங்களை வயிறார புசித்திருக்க முடியும். நான் அவ்விதம் செய்யவில்லை. காமதேனு என்னிடம் வளரப் பிரியப் பட்டாள். இந்த ஆஸ்ரமத்து சூழ்நிலை காமதேனுவிற்குப் பிடித்திருந்தது. ஆகவே, காமதேனுவை இங்கிருக்க நான் அனுமதித்தேன். மிக சந்தோஷமாக அவளைப் போற்றி வளர்த்து வருகிறேன். மற்றபடி காமதேனுவால் எனக்கு எந்தப் பயனுமில்லை. காமதேனு கொடுக்கின்ற எந்த விஷயங்களும் எனக்குத் தேவையில்லை.

கௌசிகா... உனக்கு இங்கே இடம் விட்டது, ஒரு அரசனை ஒரு குடிமகன் போற்ற வேண்டும் என்கிற

எண்ணத்தில்தான். நீ சற்று அத்துமீறுகிறாய். உனக்குத் தேவையில்லாத விஷயத்தை உனக்கு வேண்டும் என்று நினைக்கிறாய்,

உன்னிடம் நல்ல நகரம் இருக்கிறது. வளமான மக்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக் கொண்டு உனக்கு வேண்டிய செளகரியங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர, உலகத்தின் உன்னதமான காமதேனு உனக்கு வேண்டும் என்று ஆசைப்படுவது தவறு. காமதேனுவால் உனக்கும் எந்த உபயோகமும் இல்லை என்பது எனது அபிப்பிராயம்.''

''வசிஷ்டரே... நீங்கள் முனிவர். காட்டில் வாழ்பவர். உங்கள் தேவைகளை நீங்கள் சுருக்கிக் கொள்ளலாம். இதோ... இதுபோன்ற எத்தனை வனவேட்டைகளை அரசன் நடத்த வேண்டியிருக்கிறது. எவ்வளவு படையெடுப்புகளை ஒரு அரசன் நடத்த வேண்டியிருக்கிறது. அப்பொழுது உணவு தயார் செய்யவும் உணவுக்காக பாரவண்டிகள் அனுப்புவதும் எத்தனை சிரமமான விஷயம். ஒரு படையெடுப்பு நடுவே ஒரு காமதேனு இருந்தால், அந்தப் படைவீரர்களுக்கு எவ்வளவு உற்சாகம். ஒரு வனவேட்டைக்கு நடுவே இந்த காமதேனு இருந்தால், அறுசுவை அன்னங்கள் எவ்வளவு எளிமையாக எங்களுக்கு கிடைக்கும்.

எனவே, மறுபடி சொல்கிறேன். காமதேனுவை அனுப்பி வையுங்கள்.''

''கௌசிகா. மீண்டும் தவறு செய்கிறாய். காட்டில் அறுசுவை உணவுகள் கிடைக்கும் என்றால், உன் வீரர்கள் எவரும் வேட்டையாட மாட்டார்கள். உண்டுவிட்டு தூங்க போய்விடுவான். படையெடுப்பிற்கு நடுவே காமதேனுவை



போல் ஒரு பசு இருந்து உங்களுக்கு மதுவகைகளையும் கனி வகைகளையும் கொடுத்துக் கொண்டிருந்தால், அங்கு போர் நடக்காது. உண்டுவிட்டு உறக்கம்தான் வரும். எனவே, காமதேனு உனக்குத் தேவையில்லை. நீ உழைத்து சம்பாதித்து, உணவுக்காக கஷ்டப்பட்டு உணவினுடைய முக்கியத்துவத்தை தெரிந்துகொண்டால்தான் வன வேட்டையோ, போரோ, மற்ற விஷயங்களோ சரிவர நடக்கும்.

காமதேனு என் போன்ற முனிவர்களின் ஆஸ்ரமத்தில் இருப்பதுதான் நல்லது. எங்களுக்கு தேவை ஏற்படும் பொழுது சிறிதளவு காமதேனுவை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம். எனவே, காமதேனுவை கேட்கும் எண்ணத்தை மறந்துவிட்டு, நகரத்திற்கு போய்வா!'' கை கூப்பினார்.

கௌசிகர் எழுந்தார். ''நான் கேட்டது கிடைக்காததால், கோபமானேன். இது என்னுடைய குணம். ஆயினும் வசிஷ்டர் யார் என்று எனக்குத் தெரிவதால் கோபமில்லாமல் மறுபடியும் கேட்கிறேன். காமதேனுவை என்னுடன் அனுப்பி வையுங்கள்.''

''கௌசிகன் நீ தவறு செய்யப் போகிறாய் என்பதை உன் முகமும் உன் பேச்சும் வெளிப்படுத்துகின்றன. இனி நான் பேசுவதற்கு எதுவுமில்லை. காமதேனுவை உனக்குக் கொடுக்க எனக்கு சம்மதமில்லை. மீறி வலுக்கட்டாயமாக உனக்கு வேண்டும் என்று எண்ணினால், காமதேனுவை நீ கூட்டிக் கொண்டு போ. அது என் சொத்தல்ல. அது தேவர்களுடைய சொத்து. அதில் எனக்கு எந்த உரிமையு மில்லை. நீ அழைத்துப் போவதில் எனக்கு ஆட்சேபனை யில்லை. ஆனால், உனக்கு கொடுக்க விருப்பமில்லை.'' வசிஷ்டர் முகம் திருப்பிக் கொண்டார். தன் குடில் வாசலில் போய் தலை குனிந்து அமர்ந்தார்.

தொலைவில் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த காமதேனு கவலைப்பட்டது. கால் மாற்றித் தவித்தது.

கௌசிகன் வீரர்களுக்கு கட்டளையிட்டான். போய் கயிறை அவிழ்ந்து காமதேனுவை இழுத்து வரும்படி சொன்னார்.

வீரர்கள் அருகே போனார்கள்.

பசு துடிதுடித்தது. நாலாபுறமும் மிரண்டு ஓடிற்று. கயிற்றை அறுத்துக் கொண்டு எகிறிற்று. வீரர்கள் பின் தொடர்ந்தார்கள். சுற்றிக் கொண்டார்கள், மடக்கினார்கள்.

ஒருவராலும் அந்தப் பசுவின் அருகேகூட போக முடியவில்லை.

கௌசிகன் கோபமானான். மெல்லிய சவுக்கை எடுத்தான். காமதேனுவின் அருகே போனான். அடங்குகிறாயா இல்லையா என்று அதட்டினான்.

காமதேனு துடித்து எழ குதித்தது. அரசன் முகம் முழுவதும் தூசாயிற்று.

கௌசிகன் சவுக்கால் காமதேனுவின் முதுகில் மூன்று முறை அடித்தான்.

காமதேனு வலி தாங்காமல் கதறிற்று. கண்ணீர் பெருகிற்று. இங்குமங்கும் அலைந்தது.

கௌசிகன் அதன் கொம்பில் கைவைத்ததும், சீறி எழுந்து கௌசிகனை தூக்கிப் போட்டது. மூச்சை வேகமாக விட்டது. காமதேனு உடம்பிலிருந்து பல்வேறு வீரர்கள் தோன்றினார்கள்.

கொம்பிலிருந்தும், வாலிலிருந்தும், மூக்கிலிருந்தும், மடியிலிருந்தும், வயிற்றிலிருந்தும் குளம்புகளிலிருந்தும் பல்வேறு விதமான சக்திகள் தோன்றின. கற்றியுள்ள வீரர்களை அடித்து துவம்சம் செய்தன.



கடுமையாய் கௌசிகன் அந்த சக்திகளோடு போரிட வேண்டியிருந்தது.

பசுவிலிருந்து கிளம்பிய சக்திகளுக்கும் படை வீரர்களுக்கும் மிகக் கோரமாக யுத்தம் நடந்தது.

படைவீரர்கள் பலமாக தாக்கப்பட்டார்கள். அங்கம் அங்கமாக சிதைக்கப்பட்டார்கள்.

கௌசிகனை சுற்றிக் கொண்டு பசுவின் சக்திகள் தாக்கின. அவன் கிரீடத்தைப் பறித்தன. மேலாடையைக் கிழித்தன. வாளைப் பிடுங்கி உடைத்தன. நிராயுத பாணியாக்கின. கிட்டத்தட்ட அரை நிர்வாணமாக்கின. வெகு வேகமாய் அடித்தன. கௌசிகன் அலறினான். எல்லாவற்றையும் விட்டு விட்டு காட்டைவிட்டு ஓடினான்.

பாலைவனம் வரை அந்த சக்திகள் படைவீரர்களையும் கௌசிகனையும் துரத்தி வந்தன. ஒரு பகலும் இரவும் சண்டை நடந்தது.

மறுநாள் விடியலில் கையில் ஆயுதங்களின்றி சரியான உடைகளின்றி, காலில் செருப்பின்றி, தேரின்றி. குதிரையின்றி, யானையின்றி, உணவின்றி, நீரின்றி கௌசிகனும் அவன் படைவீரர்களும் பாலைவனத்தை கால்நோக தாண்டினார்கள். வெயிலில் துவண்டார்கள். வனத்தைக் கடந்தார்கள். கிராமத்திற்கு போனார்கள். கிடைத்த உணவை உண்டார்கள். நகரத்திற்கு திரும்பினார்கள்.

தோல்வியில் மனம் புழுங்கி மன்னன் படுக்கையில் வீழ்ந்தான்.

காமதேனுவால் துரத்தப்பட்ட அவமானம் அவன் நெஞ்சைக் கீறியது. ரணமாகியது.

உலகத்தின் உன்னதமான விஷயம் ஒரு மன்னனுக்கு கிடைக்கவில்லை. ஆனால், காட்டில் வாழும் ஒரு கிழட்டு

முனிவருக்கு கிடைக்கிறது. அப்படியென்றால் மன்னனை விட அந்தக் கிழட்டு முனிவன் உயர்வா. எல்லாம் வல்ல வீரனைவிட தபஸ்வி உயர்வா. இது உண்மையா. ஆமெனில், இந்த கௌசிகன் இனிமேல் தவம் செய்யப் போவான். அவனுக்கு மன்னனாக இருக்க இஷ்டமில்லை. அவனுக்கு நகரம் தேவையில்லை. நாடு தேவையில்லை. அரியணை தேவையில்லை.

அவன் எது உலகத்தின் உன்னதமோ, அதை அடைய கிளம்பி விட்டான். அவனால் இனி உன்னதத்தைப் பார்க்காமல் எங்கும் திரும்ப முடியாது.

வசிஷ்டருக்கு இணையாக, வசிஷ்டரைவிட உயர்வாக, வசிஷ்டரைப் போல் பிரும்மரிஷியாக இந்த கௌசிகன் மாறுவான். வசிஷ்டரால் பிரும்மரிஷி என்று அழைக்கப்படுவான். அதுவரை இந்த கௌசிகன் ஓயப் போவதில்லை.

மன்னன் படுக்கையை விட்டு எழுந்தான். நகரத்தை விட்டு வெளியேறினான்.

வானத்திலிருந்து தேவர்கள் அவனை வாழ்த்தினார்கள்.

இது அறிவானவர்களின் பிரச்சினை. அகம்பாவத்தால் ஏற்படும் வேதனை. அறிவிலிருந்து அகம்பாவம் கிளம்புகிறது. அறிவு மண். அகம்பாவம் நீர். இவையிரண்டும் கலந்து ஆளுமை ஆசையை விளைவிக்கின்றன. இந்த ஆளுமை ஆசை உள்ளவர்களுக்கு உலகத்தின் எல்லா நல்லவைகளும் தங்களுக்கு வேண்டுமென்கிற மனோபாவம் வந்துவிடும்.

எத்தனை சொத்து இருந்தாலும் இன்னமும், இன்னமும் என்கிற மனோபாவனை அதிகரிக்கும். பாளம் பாளமாய் தங்கம் இருப்பினும் ஒரு தாமிரப்பட்டயத்தை



கைப்பற்றிக் கொள்ளும் முட்டாள்தனம் பொங்கும். பறித்துக் கொள்கிற ஆசை கிளறிவிடும். பறித்து எடுத்து வந்ததை அனுபவிக்காமல், பறித்து வந்தேன் என்கிற அலட்டலோடு கீழே போட்டு விடும். பறித்து வந்தது அனுபவிக்க அல்ல என்பதாகவே அங்கு முடிவாகும்.

இது ஒரு அயோக்கியத்தனம் என்பது புரியாமலேயே ஆளுமை உள்ளவர்கள், இந்த அயோக்கியத்தனத்தை செய்து கொண்டிருப்பார்கள்.

கௌசிகன் தனக்கு வேண்டியது எதுவாயினும் தன்னால் அடைய முடியும் என்று நம்பிக்கொண்டிருந்தான். தன்னால் அடைய முடியாதது உலகில் எதுவும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தான். அடையவும் செய்தான். அடைந்த வெற்றிகளை நிதானமாக அனுபவிக்கவும் செய்தான். அடுத்து அடையப் போவது என்ன... அடைய முடியாதது எது என்று தேடுவதில் சந்தோஷம் அடைந்தான். அடைய முடியாததை அடைவதிலேயே வாழ்க்கை முழுவதும் ஓடிற்று.

வசிஷ்டர் ஆஸ்ரமம் அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த தெய்வீகப் பசுவை அடைய முடியவில்லை என்பது கடும் வேதனையாக இருந்தது. மரணத்திற்கு ஒப்பான வலியை, மன அவஸ்தையை அது ஏற்படுத்தியது.

தன்னால் ஜெயிக்க முடியாத அந்த தெய்வீகப் பசு வசிஷ்டரின் குரலுக்கு, வெளியே வாலைக் குழைத்துக் கொண்டு, ஒரு அடிமை போல் வெறுமே நின்று கொண்டிருந்த அந்தக் காட்சி, அவன் மனசுக்குள் ஆழப் பதிந்து போயிற்று. அந்த பசுவிலிருந்து ஆயிரக்கணக்கான சக்திகள் வெளிப்பட்டு அவனைத் துரத்தியது ஞாபகம் வந்தது.

தன்னை நேசிக்க மாட்டேன் என்கிற அழகிய பெண் தன்னிலும் வலிவு குறைந்தவனை, வறியவனை குதூகலத்துடன் நேசிப்பது கண்டு ஏற்படும் பொறாமை போல ஒரு குறுக்கத்தை கௌசிகன் உணர்ந்தான்.

அவனுக்கு இப்போது தெய்வீகப் பசு மறந்து போயிற்று. வசிஷ்டரின் சிரிப்பே ஞாபகத்துக்கு வந்தது. உன் படைவீரர்கள் அத்தனை பேருக்கும் என்னால் உணவளிக்க முடியும் என்று அவர் கம்பீரமாக சொன்னது நினைவுக்கு வந்தது.

ஒரு அரசன் சொல்ல வேண்டியதை ஒரு துறவி சொல்கிறார் என்றால் அரசனுக்கு என்ன மதிப்பு. லட்சம் துறவிகளுக்கு சோறு போடுகிறேன் என்று அரசன் சொல்லலாம். ஆயிரமாயிரம் வீரர்களும் சோறு போடுகிறேன் என்று ஒரு துறவி சொல்லலாமா. சொல்ல முடிந்ததெனில், அந்த தேசத்தில் அரசனுக்கு ஏதும் மதிப்பு உண்டா.

வசிஷ்டரைப் பார்த்ததும், வசிஷ்டரின் சோறு தின்றதும் படைவீரர்கள் அந்தத் துறவியின் காலில் விழுந்தார்கள். ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். தங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் கேட்டார்கள்.

காட்டில் வாழும் துறவி ஆறுதல் தரமுடியுமெனில், கந்தை உடுத்திய துறவி ஆறுதல் தரமுடியுமெனில் அரசன் எதற்காக? அரசனையும் மிஞ்சி அரசாங்கத்தில் ஒருவர் இருப்பாராகில் அந்த அரசன் உயிரோடு இருப்பது வீண். அந்த அரசன் தன்னை அரசன் என்று சொல்லிக் கொள்வது அபத்தம்.

அரசே உயர்வு. அரசனே உச்சம், அரசன் என்பவன் கடவுளின் இன்னொரு அம்சம், அரசர் கடவுளுக்கு



இணையானவர். அரசர் மட்டுமே புவியில் பூஜிக்கத்தக்கவர், அரசர் மட்டுமே அபிஷேகத்துக்குரியவர். உலகில் துறவிகளெல்லாம் அரசனைக் காட்டினும் உயர்வெனில், இந்தத் துறவிகள் அரசனை காலில் விழுந்து வணங்கச் சொல்வார்கள். வணங்காத அரசனை மக்கள் கேலி செய்வார்கள்.

உயிர் நடுங்கும் போருக்குப் போகாமல், துடிதுடிக்க வைக்கும் வெட்டோ குத்தோ அனுபவிக்காமல், பாலைவனத்திலும் கானகத்திலும் பல காதங்கள் நடந்து பயணம் செய்யாமல், தோப்புகளில் குடிசை கட்டி ஆற்றங்கரை வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், அரசனை விட எவ்விதம் உயர்வானவர்கள். உழைக்காத அந்த ஜென்மங்களுக்கு என்ன உயர்வு. இந்த சமூகம் அரசனைக் கண்டு பயப்படுகிறது. சாதுக்களைக் கண்டால் பல்லிளித்து நிற்கிறது. முனிவர்களை தெய்வப்பிறவிகள் என்கிறது.

இந்த சமூகத்திற்கு வீரம்செறிந்த அரசனைக் கண்டால் ஏமாற்ற இயலாதென்று தெரியும். ஏமாற்ற முடியாதவரைக் கண்டால் இந்த சமூகத்துக்குப் பிடிப்பதில்லை. அதனால் சாதுக்களோடு இந்த சமூகம் அலைகிறது. மக்களால் சாதுக்களும் கொழுத்துத் திரிகிறார்கள். அரசனே முக்கியம், அரசே உயர்வு, அரசனே எல்லாமும் என்பது தெரியவில்லை. முனிவனால் போரிடமுடியுமா. முடியாது. ஆனால், அரசரால் தவம் செய்யமுடியும். மதத்தலைவனால் அரசராக முடியுமா. ஆனால், அரசன் நினைத்தால் மதத்தலைவனாக முடியும்.

நான். இந்த கௌசிகன், முனிவனாவேன். தவம் செய்வேன். பல நூறு அரசர்கள் வணங்கும் பல ஆயிரக்கணக்கான சாதுக்கள் வணங்கும் பிரும்ம ரிஷியாவேன். நான் வணங்க வேண்டியது எவருமில்லாமல் போகும். என்னை இந்தப் பிரபஞ்சம் முழுவதும் வணங்கும்.

கௌசிகன் ஒரு மலை உச்சியில் நின்று சூளுரைத்தான். புலனடக்கி பழக்கப்பட்ட அந்த அரசன் மனம் அடக்க முயற்சி செய்தான்.

புலனடக்கமும், மன அடக்கமும் வெவ்வேறானவை. புலன்கள் குதிரைகள். அவைகளை அதிகம் ஓடச் செய்தும் தந்திரத்தாலும் அடக்கி விடலாம்.

மனம் என்பது யானை. அதை அடக்குவது எளிதல்ல. யானை தந்திரம் மிக்கது. அடக்க அடக்க ஆவேசமுறுவது. அடங்கியது போலிருந்து மறுபடி ஆவேசமாய் சீறுவது. ஆனால், கௌசிகன் போன்றவர்கள். வெற்றியே குறியாக உள்ளவர்கள். வெற்றி பெறும்வரை ஓயாதவர்கள்.

கௌசிகன் போர் செய்ய கிளம்பினான். தன் மனதை யுத்தத்திற்கு அழைத்தான். இதுவரை அவன் செய்த எல்லா யுத்தங்களையும்விட இந்த யுத்தம் மிகக் கடுமையாக இருந்தது.

உடம்பைத் தீனியின்றி போட்டால் புலன்கள் சுருண்டு விடும். புலன்கள் உணவுச் சத்தால் இயங்குபவை. அவை அடிக்கடி மறுக்கப்பட, புலன்கள் உக்கிரமிழந்து ஒரு படிமானத்திற்கு வந்துவிடும். அடிக்கடி உபவாசம் இருந்தால் புலன்கள் எது சொன்னாலும் கேட்கும். பிறகு அவ்வப்போது சோதனை செய்து புலன்களைக் கடுமையாக தண்டித்து சில வருடங்களில் புலனடக்கம் கொண்டு வந்து விடலாம். ஆனால், மனம் எளிதில் அடங்குவதில்லை. பசி உயிர்போகிறது. எதிரே கனிவர்க்கங்கள் இருக்கின்றன. தானியங்கள் இருக்கின்றன. கொதித்து இறக்கப்பட்ட கீரை ரசங்கள் இருக்கின்றன. எவை இருப்பினும் உண்பதில்லை என்று சற்று நேரம் சுருண்டு இருந்துவிட்டால் புலன்களும் சரி என்று அமைதியாகி விடுகின்றன.

ஆனால், மனம் இவ்விதமான ஆட்டங்களுக்கு ஈடு கொடுப்பதில்லை. மாறாய் மனதை அடக்க முயற்சித்த



போதெல்லாம் அது அதிகம் வேலை செய்கிறது. மனதை மறுக்க முயற்சித்தபோதெல்லாம் அது தீவிரமாய் பற்றிக் கொள்கிறது.

கௌசிகன் தவம் செய்வது என்ன என்று யாரிடமும் கேட்கவில்லை. எது தவம் என்று அவனே வினவினான். உற்றுப் பார்த்தான். தவம் பற்றி தானாய் புரிந்து கொண்டான்.

மனமற்று இருப்பது என்பதை உணர்ந்து கொண்டான். மனமற்று இருக்க மனதை உற்றுப் பார்த்தான். யார் யோசிப்பது என்று கவனிக்க மனம் யோசிப்பிலிருந்து பின்வாங்கியது. வெறுமே இருந்தது. தான் இருக்கிறேன் என்பதை மட்டுமே காட்டிக் கொண்டிருந்தது. எந்தத் தொழிலும் செய்யாமலிருந்தது. மனம் இருப்பதையும் இல்லாதொழிக்க இன்னும் மனதைத் தீவிரமாய் உற்றுப் பார்க்க வேண்டியிருந்தது.

அப்படி உற்றுப்பார்க்கிற போது உற்றுப் பார்க்கும் மனம் பெரிதாய் வளர முயற்சித்தது. எனவே உற்றுப் பார்க்கிற மனதையும் இழக்க வேண்டியிருந்தது. படல் படலாய் பல நூறு ஜென்மத்து மனங்கள் தன்னைக் கவ்விக் கொண்டிருப்பதை கௌசிகன் உணர்ந்தான்.

மானாய், மயிலாய், புழுவாய், பாம்பாய் இருந்த போது, தான் கொண்டிருந்த மனங்களெல்லாம் தன் மனதுக்குள் ஒளிந்திருப்பதைக் கண்டுகொண்டான். தன் கோபத்திற்கும், காமத்திற்கும், ஆத்திர அசூயைக்கும் காரணங்கள் என்ன என்பதை கண்டுபிடித்தான். இவையெல்லாம் பல ஜென்ம வாசனைகள் என்பதைப் புரிந்து கொண்டான். ஒவ்வொரு ஜென்மமாய் கழற்றி வெளியே எறிந்தான்.

கௌசிகனின் மனம் ஒடுங்கத் துவங்கியது. மனம் ஒடுங்கத்துவங்க, அந்த அமைதி தேவலோகம் வரை எட்டியது.

பூமியிலுள்ள உயிர்களின் அசைவுகள் தேவலோகத்தோடு பிணைக்கப்பட்டிருந்தன. எங்கோ ஒரு உயிர் அசைவற்று இருப்பது அங்கே கவனத்தை ஏற்படுத்தியது. கலவரத்தைக் கவிழ்த்தது.

''யாரது அசைவற்று இருப்பது'' என்று தேவேந்திரன் கவனிக்கத் துவங்கினான்.

அசைவற்ற மனம் உடைய மனிதர்கள் தேவர்களுக்கு ஒப்பாவார்கள். தேவர்களுக்கு மிஞ்சிய வலுவும் அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அவர்கள் அழைத்தால் தேவர்கள் அங்கு போய் நிற்கத்தான் வேண்டும். அப்படிப்பட்ட வலு உள்ளவர்கள் தங்கள் வலுவைப் பரிசோதித்துக் கொள்ள தேவர்களைத்தான் உடனே அழைப்பது வழக்கம். மனிதர்களே தேவர்களை இப்படி ஆட்டிவைத்து விட்டால் அசுர சக்திகள் உற்சாகம் கொண்டு அவைகளும் ஆட்டி வைக்க முயற்சிக்கும்.

எனவே மனிதர்கள் மனம் அடக்க முயற்சிக்கிறபோது அதை முடியாமல் செய்வதே நல்லது. மனித மனங்களை ஓயாமல் இயக்குவதே உத்தமம்.

மனிதர்கள் தேவர்களானால் இந்திரப் பதவி வரை வந்து விடலாம். எனவே மனிதர்களை மனிதர்களாகவே வைத்திருப்பது மேல். நல்லதும் கெட்டதுமான குழப்பங்களாகவே அவர்கள் இருப்பது உத்தமம். அசுரர்கள் கெட்டவர்கள். தேவர்கள் நல்ல சக்திகள். மனிதர்கள் இரண்டுமுள்ளவர்கள். அவரவர் இடத்தில் அவரவர் இருப்பதுதான் சிறப்பு.

ஏன் இந்த கௌசிகன் உயர்ந்த நிலைக்கு வர ஆசைப்படுகிறான். இந்த கௌசிகன் ஆபத்தானவன்.



அரசனாய் இருந்தவன். மனம் அடங்கிய மனிதர்கள் இருக்கிறார்கள். வசிஷ்டர் மனம் அடக்கியவர்தான். ஆனால், தேவேந்திரப் பதவிக்கு அவர் ஆசைப்படமாட்டார்.

ஆனால், இந்த அரசனை இப்படிச் சொல்வதற்கில்லை. இவன் எது வேண்டுமானாலும் செய்யக்கூடியவன். எனவே இவன் மனம் அடங்கி தவம் செய்வதைக் கலைப்பது நல்லது. புலன்களால் மனமும், மனதால் புலனும் விழித்துக் கொள்ளும் வேலையைச் செய்வது நல்லது.

அந்த விழிப்பைத் தூண்டி கௌசிகனை அலைய வைப்பது உத்தமம். அரசன் தபஸ்வி ஆகிவிடக்கூடாது. அந்த தபஸ்வி தேவேந்திரனாய் வந்துவிடக் கூடாது.

மனம் அடக்குவது உயர்ந்த நிலை. மனிதர்கள் மனிதர்களாக இருப்பதே நல்லது. மனிதர்கள் எல்லோரும் உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டால் தேவர்களுக்கு என்ன மதிப்பு. தேவர்களுக்கு உண்டான அவிப்பொருளை பின்பு யாரிடமிருந்து பெறுவது.

## 2

மலையுச்சியில் அமர்ந்து கௌசிகர் மனம் அடக்க தவம் தொடர அந்த சூழ்நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டன.

உலகத்தின் ஒரு உயிர் மனம் அடக்கி அமர்ந்து விட்டால், அதைச் சுற்றி பலமான அதிர்வுகள் ஏற்படுகின்றன. அப்படி மனம் அடக்கிய மனிதனின் அலைகள் தாவரங்களுக்கும், பூச்சி புழுக்களுக்கும், பறவைகளுக்கும், சிறு பிராணிகளுக்கும், பாம்பு அணில் கீரிபோன்ற ஜந்துக்களுக்கும் மனமாறுதலைக் கொடுக்கின்றன. பெரிய மிருகங்கள் வந்து அந்த மனம் அடங்கிய ஆற்றலை உற்று கவனித்துவிட்டுப் போகின்றன. மெல்ல மெல்ல அந்த

தபஸ்வியின் ஆற்றல் பரவி, அந்த மலையுச்சி முழுவதும், சில சமயம் அந்த மலை முழுவதும் வேறுவிதமான எண்ண அலைகள் தோன்றி, ஒரு பூரண அமைதி ஏற்பட்டுவிடுகிறது.

அந்த அமைதி உலகத்தின் இயல்பல்ல. உலகத்தின் இயல்புக்கு எதிரான அந்த அமைதி தேவர்களை கலவரப் படுத்துகிறது. ஏன் இங்கே இத்தனை அமைதி என்று யோசிக்க வைக்கிறது.

தேவேந்திரனுக்கு கௌசிகனின் தவம் பற்றிய செய்தி போயிற்று. அவன் உற்று கவனிக்கத் துவங்கினான். கவலையானான்.

மலையுச்சியில் படர்ந்திருந்த அமைதி கௌசிகனின் தவ வலிமையால், மலை முழுவதும், அந்த பிராந்தியம் முழுவதும் பரவியது. மிருகங்கள் அஹிம்சையை கடைப் பிடித்தன. அமைதியாய் வாழ்ந்தன.

உலகத்தின் இயல்பு வேறுவிதமாகப் போயிற்று.

தேவேந்திரன் கவலையானான். சண்டையும் சச்சரவும், கூச்சலும், குழப்பமும், வெட்டும், குத்தும், ஒன்றையொன்று தின்று உயிர்வாழ்வதும் உலகத்தின் இயல்பாக இருக்க. அதை மாற்ற எவர் முயன்றாலும் அந்த அவஸ்தையின் விளைவாக தேவர்களுக்கு நடுவே நாட்டிய மாடும் திலோத்தமை என்கிற பெண்ணை அழைத்தான். எப்படியாவது கௌசிகனின் தவத்தை கலைத்துவிடு என்று வேண்டினான். அவளை பூலோகத்திற்கு அனுப்பினான்.

தேவர்கள் நல்ல சக்திகள். ஆயினும் தங்களில் வேறு எவரும் கலப்பதை அவர்கள் விரும்புவதில்லை. தங்களில் வேறு யாரும் கலந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள், அதனால் அதைத் தடுப்பதற்கு எல்லா முயற்சிகளும் செய்தார்கள்.



தேவேந்திரன், திலோத்தமையிடம் கௌசிகனின் தவத்தைக் கலைக்க அனுப்புகிறபோது, அவளுக்கு ஏற்படப்போகும் துன்பத்தைப் பற்றியும் தெரிந்திருந்தான்.

அவளும் இதனால் தனக்கு ஏற்படப்போகும் நஷ்டத்தை உணர்ந்திருந்தாள். முனிவரால் சபிக்கப்படு வோம் என்று தெரிந்திருந்தே, இந்த கலைப்பிற்கு சம்மதித்தாள். தேவர்கள் நலமே வாழ தன்னை துன்புறுத்திக் கொள்ள முன்வந்தாள்.

பூமியைத் தொட்டு மனித உரு எடுத்தாள். தன்னை அலங்காரம் மிக்க நாட்டியக்காரியாய் மாற்றிக் கொண்டாள். அரசன் தவம் செய்யும் இடத்தை நோக்கி நடந்தாள்.

அவன் காது கேட்கும் தூரத்திற்கு நின்று, மெல்ல குரலெடுத்துப் பாடினாள். அமைதியான, ஆரவார மில்லாமல் உடம்பை அசைத்து நடனமாடினாள். அருகே நின்று வாசனை விசிற, சுழன்று நடனம் செய்தாள். மூச்சு சப்தங்களில் விரகதாபம் ஏற்றி அவன் காதுபட காம ஒலிகளை எழுப்பினாள்.

தொடர்ந்து பல நாட்கள் இடைவிடாத முயற்சி செய்தாள்.

சப்தங்களை காதில் வாங்காது உள்ளுக்குள் ஒரு மையத்தில் புலன்களை கட்டிப் போட்ட கௌசிகன், ஆழமாய் மூச்சிழுத்தபோது பெண் வாசனையும் உள்ளே போயிற்று. என்ன இது, யார் வாசனை என்று வியந்தான்.

அந்த வாசனை உள்ளே போய் கேள்வி எழுப்ப, பெண் என்பது அவன் மனதில் பட்டது. பெண் என்பவள் பட்டதும், மற்ற புலன்களும் விழித்துக் கொண்டன. சலங்கை ஒலியும், காட்டுப்பூவும், குரலில் கனிவும், விரகதாபமும் அவனுள் தொடர்ந்து சிந்தனைகளை எழுப்பின.

தூக்கத்திலிருந்து விழிப்பது போன்று மனம் மெல்ல விழித்தது. முனிவன் மெல்ல கண்திறந்து பார்த்தான். திலோத்தமை அவனை நமஸ்கரித்தாள். யார் என்று விசாரிக்க, அவள் ஏதோ ஒரு பெண்ணின் பெயர் சொன்னாள். ஏன் இங்கு நடனமாடுகிறாய் என்று கேட்க,

''உங்களை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று மனதுக்குள் தோன்றியது. காட்டில் கடுந்தவம் ஏற்றுக் கொண்டு, உங்களை வருத்திக் கொண்டிருக்கிற தன்மையை நினைத்து வேதனை ஏற்பட்டது. என்னால் உலகில் எவருக்கும் எந்த உபயோகமும் இல்லை. உங்களுக்கு உபயோகமாக இருக்கலாமே என்று நினைத்து, உங்கள் முன் நடனமாடினேன்'' என்று பணிவாகச் சொன்னாள்.

அவள் பணிவைக் கண்டு, கௌசிகனின் மனம் இறங்கினான்.

பெண்கள் காமத்தால் ஆண்களை வீழ்த்துவதைவிட, சாமர்த்தியத்தால் சரிப்பதைவிட, பணிவால் வெகு எளிதில் வீழ்த்திவிட முடியும்.

பணிவுள்ளோருக்கு புகழ்ச்சி இன்னொரு ஆயுதம். பணிவாக கைகூப்பி எதிரே இருப்பவரை புகழ்ந்து பேச, புகழப்பட்டவன் மனம் குதூகலித்து புகழ்ந்தவரை ஏற்று கொள்ளுதல் இயல்பு.

திலோகத்தமை தொலைவே நின்று கௌசிகனை வியக்க ஆரம்பித்தாள். அணில்களோடும், நாகங்களோடும், செடிகளோடும், கொடிகளோடும் பேசினாள்.

'அணில், உனக்கு தவம் செய்ய யார் கற்றுக் கொடுத்தார். பின்கால்களில் நின்றபடி, கைகளை குவித்தபடி, வெகு நேரம் அசையாமல், மலையுச்சியில் நின்று, பள்ளத்தாக்கையே பார்த்துக் கொண்டிருக்கிறாயே,



அணிலே, இது உன் இயல்பல்லவே. இதில் என்ன சுகம் கண்டாய். இது எதற்காக செய்கிறாய்?' என்று வியப்புடன் கேட்டாள்.

அவள் பேசியது, கௌசிகனுக்கும் கேட்டது.

பாம்புகளுக்குப் பின்னே சென்றாள்.

'திரும்பி சீறுவதுதானே உன் இயல்பு. என்னைவிட்டு விரைவாக விலகி, எங்கோ சுருண்டு அமர்ந்து, உனக்கும் உன்னை நினைத்துக் கொண்டிருக்கின்ற பக்குவம் எப்படி வந்தது.' அவள் கேட்க, பாம்பு தலை உயர்த்தி அவளைப் பார்த்துவிட்டு, மறுபடியும் சுருண்டு கொண்டது.

செடிகள் பெரிய பூக்களை உற்பத்தி செய்து, தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தின. மரங்கள் காய்களையும், கனிகளையும் அதிகமாக தோற்றுவித்தன. குளுமையும் வாசனையும் அமைதியும் நிரம்பி அந்த இடம் காட்சி யளித்தது. ஒரு கட்டத்தில் திலோத்தமை தனக்குள்ளும் அந்த அமைதி வருவதை உணர்ந்தாள்.

அவளும் மண் மீது அமர்ந்து, பள்ளத்தாக்கை வெறித்துப் பார்க்கத் துவங்கினாள்.

தொலை தூரத்திலிருக்கும் பள்ளத்தாக்கை பார்க்கப் பார்க்க, உள்ளே ஒரு அமைதி பரவியது.

ஒரு வேளைக்கு ஒரு கை நீர், ஒரு பழம், சிறிது இலைகள், நுரையீரல் சுத்தமாவதற்கு சில பூக்களின் வாசனைகள் என்று மிகக் குறைந்த அளவு உணவு அவளும் எடுத்துக் கொண்டாள்.

கௌசிகனுடைய தவம் இன்னும் உக்கிரமாயிற்று.

வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே கௌசிகன் கண்விழித்தான். நிதானமாய் நடந்து நீர்குடித்து, ஒரு பழம்

தின்று, மெல்ல செடிகளூடே உலாவிவிட்டு, மறுபடியும் குகைக்கு வந்து அமர்ந்து கொள்வான். அப்படி உலாவரும் பொழுதெல்லாம் அவனுக்கு எதிரே நின்று நமஸ்கரித்து, அவனுக்குப் பின்னே மௌனமாக, எந்தக் கேள்வியும் இல்லாமல் திலோத்தமை நடந்து போனாள்.

''என்ன வேண்டும்.'' கௌசிகன் ஒருமுறை திரும்பிக் கேட்டான்.

''எதுவுமில்லை. உங்களை தரிசிக்கின்ற பாக்கியம் போதும். எனக்காக சிரமப்பட்டு, இப்படித் திரும்பிப் பார்ப்பது வேண்டாம். என்னோடு பேசி, உங்களுடைய சக்தியை இழக்க வேண்டாம். நமஸ்கரிக்காமல் போனால் அது குற்றம். எனவே நமஸ்கரிக்கிறேன். ஏதும் உங்களுக்குத் தேவைப்படுமோ என்று உங்களுக்குப் பின்னால் வருகிறேன். மற்றபடிக்கு எனக்குத் தேவையானது ஒன்றுமில்லை. உங்கள் சந்நிதானத்தில் சகலமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அற்புதமான அமைதியை, உங்களால் நானும் இந்தப் பகுதியும் அனுபவித்து வருகிறோம்.

என்னோடு பாம்பு ஸ்நேகமாக இருக்கிறது. அணில்கள் நல்ல பழங்களைக் கொண்டு வந்து கொடுக்கின்றன. தேன் என்னை சக்தியுள்ளவளாக செய்கிறது. இங்குள்ள காற்றும் பச்சிலைகளும் என்னுடைய வலிவை அதிகப்படுத்துகின்றன. எனவே, தபஸ்வி, நீங்கள் உங்களுடைய காரியத்தை செய்து கொண்டிருங்கள். என்னாலான பணிவிடைகளை நான் உங்களுக்குச் செய்கிறேன்.''

அவன் உட்காருவதற்கு முன்னால், அந்த இடத்தை சுத்தம் செய்தாள். பூக்களால் அலங்கரித்தாள்.

அவன் அமர்ந்ததும் நமஸ்கரித்துவிட்டு, அதை விட்டு நகர்ந்து, தொலை தூரத்தில் போய், அவனைப் பற்றி அங்குள்ள பிராணிகளோடு பேசிக் கொண்டிருந்தாள்.



இந்த முறை அவளுடைய புகழ்ச்சிப் பேச்சு கௌசிகனின் மனதில் மெல்ல தைத்தது. மேற்கொண்டு என்ன புகழ்வாள் என்கிற ஆவல் அதிகரித்தது.

அடுத்த ஏழு நாட்களுக்குப் பிறகு விழித்தபோது, அவளைப் பார்க்கும் ஆவல் பெருகிப் போயிற்று. அவள் தென்படாது போகவே நாலாதிசையும் சுற்றிப் பார்த்து அவள் எங்கிருக்கிறாள் என்று தேடவைத்தது. அவன் தேடுவது தெரிந்து திலோத்தமை பள்ளத்தாக்கு நோக்கி ஓடினாள்.

கௌசிகன் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் அவளைப் பின்தொடர்ந்தான். எங்கேனும் விழுந்துவிடப் போகிறாளே என்று பொய்யாய் கவலைப்பட்டான். அப்படி விழுந்துவிட்டால் காப்பாற்றுவதற்காகப் போகிறோம் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டான். மிக கவனமாக உற்றுப்பார்த்தான்.

வாழ்க்கையில் பல கருணைகள் பொய்யாய், ஏமாற்றுதலாய் தனக்கு மட்டுமே உபயோகமாய் இருக்கக் கூடியவை என்று புலப்படும். குறிப்பாய் காமத்தினால் ஏற்படும் இந்த அன்பான பின்தொடர்தலுக்கு, பிரேமைகளுக்கு சுயநலக் கொதிப்பே காரணம். இது ஏகப்பட்ட பொய் சமாதானங்களோடு பெண்களைச் சுற்றிவரும், மாறாத காதல் நோயாளன் என்று பொய் சொல்லும். பெண்மையைக் காப்பாற்றுவதே தனது கடமை என்று வீறாப்பு பேசும். ஆனால், உண்மையில் வேரடியில் சுயநலமே ஓங்கி நிற்கும். இந்த சுயநலம் அடுத்தவரை ஏமாற்றி சுயநலம் மிக்கவரையும் குப்புறக் கவிழ்க்கும்.

கௌசிகன் அந்த விஷவட்டத்தில் சிக்கிக் கொண்டான்.

காமம் என்பது மிகப் பெரிய தபஸ்விகளையும் கவிழ்த்துவிடும் வல்லமையுடையது. காமம் என்பது நாடகத் தன்மை கொண்டது. வெறுமே சக்தியை இறைத்து விட்டுப் போகிற மிருகத்தனம் மட்டும் மனிதனுக்கு இல்லை. காமத்தை ஒரு விளையாட்டாய் காதல் என்கிற இனிப்பு கலந்த உணவுப் பண்டமாய் அவன் மாற்றித் தொலைத்துவிட்டான்.

நேரடியான தாக்குதல்கள் முற்றிலும் நகர்ந்துபோய் மறைமுகமாய் பேச்சுகளும் செயல்களுமே காமத்தில் அதிகம் காணக்கிடைக்கும். காமம் மறைமுகமாய் பல்வேறு பொய்களோடு கலந்து வருவதால்தான் அதைக் கண்டு சாதுக்களும் ஞானிகளும் மிரண்டு ஒதுங்குகிறார்கள். எனக்கு இந்த வேகம் வேண்டவே வேண்டாம் என்று விலகிப் போகிறார்கள். ஆனால், காமம் என்கிற உணர்வு ஒரு புலி போல் மனிதர்கள் மீது பாய்ந்து, அவர்களை உண்ண ஆரம்பித்து விடுகிறது.

காமவயப்பட்ட மனது வேறு எதையும் நினைக்காது. ஒன்றே குறியாய் ஒரே சிந்தனையாய் அது பெண்ணை பின்தொடர ஆரம்பித்துவிடும்.

கௌசிகன் திலோத்தமையை நோக்கி விரைந்தான்.

திலோத்தமை பள்ளத்தாக்கில் ஒரு பெரிய அருவியில் குளித்துக் கொண்டிருந்தாள். அவன் வருவது தெரிந்து உடைகளைக் கழற்றி ஓரமாய் போட்டு இன்னும் ஆனந்தமாய் நீந்தினாள். கௌசிகன் அவள் வனப்பு கண்டு திகைத்துப் போனான்.

கௌசிகன் என்கிற அரசன் பார்க்காத வனப்பா. அவன் அறியாத பெண் உடம்பா. அவன் எத்தனை பெண்களைப் பார்த்தாலும், அவன் மனம் இது புது விதம் என்று அவனை அசையாது அந்தப் பெண்ணை பார்க்கச் சொன்னது.



கௌசிகன் வருகையைப் பார்த்ததும் திலோத்தமையின் மனம் துள்ளி குதித்தது. எதற்கு இத்தனை காலம் பொறுமையாக இருந்தாளோ, அது நடந்துவிட்டது. கௌசிகனின் ஆவலான வருகை, அவனுடைய ஆழமான பார்வை, அவனுடைய ஒளிந்து பார்க்கும் தன்மை, அதன் கள்ளத்தனம் அவளுக்கு குதூகலத்தைக் கொடுத்தன.

ஒரு ஆணை, ஆண்களில் சிறந்தவனை மெல்ல மெல்ல ஜெயித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற மனக் கொதிப்பு, அவளை கம்பீரமாயும் கிறக்கத்தோடும் நடக்க வைத்தன.

அவள் ஒற்றைத் துகிலை அணிந்துகொண்டு, நீரை விட்டு வெளியே வந்தாள். கௌசிகன் பார்ப்பதை ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டாள். மஞ்சள் கிழங்கு பிடுங்கி கௌசிகன் என்கிற பெயர் எழுதி, அதில் பூக்களைப் போட்டு, நமஸ்கரித்தாள். அதைச் சுற்றி மஞ்சளால் கோலம் வரையத் துவங்கினாள்.

கௌசிகன் ஆடிப் போனான். இந்தப் பெண்ணுக்கு நாம் ஏதும் செய்யவில்லையே, உதவியாய் ஒரு வார்த்தை கூட பேசவில்லையே. இருப்பினும் நம்மீது இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு காதல் என்று அதிசயப்பட்டான். இவளுக்கு ஏதேனும் செய்தாக வேண்டும் என்று உள்ளுக்குள்ளே ஆத்திரப்பட்டான்.

காமத்தால் உந்தப்பட்டபோது எல்லா அபத்தங்களும் நியாயப்படுத்தப்படும்.

கௌசிகன், திலோத்தமையை நோக்கி நடந்தான். அவள் பெயரை தெரிந்துகொள்ளக்கூட அவனுக்கு விருப்பமில்லை. இந்த வனாந்திரத்தில் அவளைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் இல்லாதபோது, இவளுக்கு பெயர்

எதற்கு. கனைத்தால் திரும்ப, இந்தப் பெண்தானே இருக்கிறாள். எனவே, அருகே போய் நின்று மெல்ல கனைத்தான்.

திலோத்தமை திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தாள். அச்சம் கொண்டு, மிரண்டு உடைகளைப் பொத்திக் கொண்டு, மரம் செடி கொடிகளை நோக்கி ஓடினாள். மறைந்திருந்தாள்.

கௌசிகன் என்கிற அந்த மஞ்சள் எழுத்து மீது செந்நிறப்பூக்கள் புரண்டு கொண்டிருந்தன.

''பெண்ணே, நீ யார்? எதற்காக என் பெயரை இப்படி பூஜிக்கிறாய்? உனக்கு நான் எதுவுமே செய்யவில்லை. இருப்பினும் என்னையே இடைவிடாது ஏன் தியானிக்கிறாய். என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய். உனக்கு என்ன குறை இருக்கிறது. உன் குறையை என்னால் நீக்க முடியுமென்று நினைக்கிறாயா.

நான் சாதாரண தபஸ்வி. காட்டில் வாழ்ந்து, இன்னும் உக்கிரமாக தவம் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறவன். என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமில்லை. ஒரு காலத்தில் நான் அரசனாக இருந்தேன். மிகுந்த செல்வத்தோடு திகழ்ந்தேன், வேண்டுமானால் இன்று நகரத்துப் பக்கம் போய் ஏதேனும் உனக்காக சம்பாதித்துக் கொண்டு வருவேன். உனக்கு என்ன வேண்டும் சொல். ஆடைகளா, ஆபரணங்களா, அல்லது மாடமாளிகைகளா, எதைத் தேடி என்னிடம் வந்திருக்கிறாய்.''

அவள் பதறி முன்வந்தாள். அவன் காலில் பணிந்தாள்.

''இவை எதுவும் எனக்கு வேண்டாம். இவைகளைத் தேடி நான் வரவும் இல்லை. நீங்கள் அரசர் என்பதோ, பெரும் செல்வமுடையவர் என்பதோ எனக்குத் தெரியாது.



நான் இந்தப் பள்ளத்தாக்கு தாண்டியிருக்கும் கிராமத்தில் வசிப்பவள். இந்த கிராமத்திலிருக்கிற இளைஞர்கள் மீது எனக்கு எந்த மோகமுமில்லை. அதேநேரம் இந்த மலையுச்சியை தரிசிக்கிறபோதெல்லாம், ஒரு அற்புதமான அமைதியும் சாஸ்வதமான ஒரு ஒளியும் என்னுள் தோன்றுவதை உணர்ந்து, நான் மலையேறி, என்ன இருக்கிறது என்று பார்க்க வந்தேன்.

என்னுடைய எண்ணம் பொய்க்கவில்லை. நான் நினைத்தது போலவே, தபஸ்வியான நீங்கள் அங்கு வீற்றிருந்தீர்கள். உங்கள் தபோபலத்தால் அந்த மலையுச்சியும் அதைச் சார்ந்த பகுதிகளும் பிரகாசிப்பது எனக்கு நன்கு தெரிந்தது. உங்கள் தவத்தை கலைக்க விரும்பவில்லை.

உங்களிடம் யாசிக்க எனக்கு என்ன தெரியும். எதை உங்களிடம் கேட்கவேண்டும் என்ற தெளிவுகூட இல்லாத நான், உங்கள் தவத்தை எதற்காக கலைக்க வேண்டும். தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தால் போதும். உங்களால் சந்தோஷமான தாவரங்களையும் பிராணிகளையும் கவனித்துக் கொண்டிருந்தால் போதும்.

இங்கே இந்த கிராமத்து ஜனங்கள் பொய்யும் புரட்டுமாய் அலைகிறார்கள். ஒருவரையொருவர் விழுங்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். எந்த கெட்ட சிந்தனையுமின்றி எவ்வளவு அமைதியாய், தாமரைப்பூவாய் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களுக்கு தொலைவிலிருந்து பணிவிடைகள் செய்கின்ற பாக்கியம் மட்டும் கொடுங்கள் போதும்.

நீங்கள் எனக்கு எதுவும் சொல்லித்தர வேண்டாம். உங்கள் இருப்பு, உங்கள் அண்மை என்னை மாற்றும்.

கொடிகளையும் செடிகளையும் மாற்றுகின்ற உங்கள் தவம், பாம்புகளையும் அணில்களையும் யோகத்தில் ஆழ்த்துகின்ற உங்கள் தவம், என்னை மாற்றாதா.''

எதற்கு மாற்ற வேண்டும் என்று கௌசிகரும் கேட்கவில்லை அவளும் சொல்லவில்லை.

அவன் புன்னகையுடன் சரியென்று தலையசைக்க, அவள் வணங்கி நிமிர்ந்தாள். நீங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பது போல் பார்த்தாள்.

நாடகத்தோடு கூடிய காதல், வாழ்க்கையை நாசம் செய்துவிடும். நாடகமற்று இருக்க வெகுசிலராலேயே முடியும். மனம் அடக்கி, புலன் அடக்கி, கடுந்தவம் மேற்கொண்ட கௌசிகன் போன்ற மிகப்பெரிய மனோபலம் உள்ளவர்கள்கூட பெண் என்பவளின் முன்பு, நாடகமாடத் துவங்கி விடுகிறார்கள்.

காமத்தைக் கண்டு இந்த சாஸ்திரங்களும் தர்மங்களும் மிகவும் பயந்தன. எப்பேர்ப்பட்டவரையும் சின்னாபின்னப் படுத்திவிடும் என்று உறுதியாய் நம்பின. காமமற்று வாழ்வதற்கு மிகுந்த கவனம் வேண்டும்.

மேற்கொண்டு என்ன செய்வது என்று கௌசிகன் யோசிப்பதற்கு முன் அவள் யோசித்து வைத்திருந்தாள்.

''அருவியின் தண்ணீர் சுகமாக இருக்கிறது. நீங்கள் ஸ்நானம் செய்யலாமே. அந்த மூலையில் அடர்த்தியாகவும் அதேசமயம் அதிக நுரையின்றியும் தண்ணீர் விழுகிறது. உறுதியான பாறை இருக்கிறது. அங்கே குளித்துவிட்டு பாறையிலிருந்து விலகிப் போய் சமதளத்தில் அமர்ந்து, நீங்கள் பூஜை செய்யலாம். நீங்கள் குளிப்பதற்குள், நான் கனிகள் கொண்டு வந்து விடுகிறேன்.'' அவனை கைப்பற்றி இழுத்துப் போனாள்.



உலகத்தில் குளிப்பதே மிக முக்கியமான விஷயம் என்பது போல், அவள் நடந்து கொண்டாள். கௌசிகனைப் பின்தொடர்ந்தாள்.

அவன் குளிக்க, முதுகிலிருந்து அழுக்கு சுரண்டினாள். சடையாய் இருந்த தலையைப் பிரித்து உதறி, அலசினாள். கால்விரல்களைச் சுத்தம் செய்தாள். அவன் ஆனந்தமாய் நீராடட்டும் என்று விலகி நகர்ந்தாள். நல்ல பழங்களுக்கு நாற்புறமும் ஓடினாள். பறித்துக் கொண்டு வந்தாள். இலைகளை தொன்னையாக்கினாள். அவனுக்கு அமர, தர்ப்பையில் ஆசனம் செய்தாள். எதிரே உணவுகளை வைத்தாள். தாழ்ந்த மரங்களிலுள்ள தேனைப் பிழிந்து, இன்னொரு தொன்னையில் அருகே வைத்தாள்.

அவன் குளித்த பிறகு அமைதியாய் கண்மூடி பிரார்த்தனை செய்தான். உள்ளே, போதும். இப்போதாவது கிளம்பு என்று குரல் கேட்டது. உன்னுடைய பாதை வேறு, நீ திசை மாறுகிறாய் என்று எச்சரிக்கை கேட்டது. இப்போது இந்தக் குளியல் எதற்கு என்று மனம் கேலி செய்தது. மனதின் நல்ல பகுதி பேசுவதை அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போது, அவள் மெல்ல கைதட்டி அவனைக் கலைத்தாள்.

உண்ணவில்லையா என்று ஒரு குழந்தை போல வினவினாள். நான் ஊட்டி விடட்டுமா என்று குனிந்தாள். தேனில் பழங்களைத் தோய்த்து அவன் வாயருகே கொண்டு போனாள். அவன் தன் வசமிழந்தான். மெல்ல சுவைத்து உண்டான்.

அவளை அதிசயித்து பார்த்தபடி இருந்தான். அந்தப் பெண்ணின் எல்லா அங்க அசைவுகளும் அவனுக்குப் பிடித்திருந்தன. அவளை கவனிப்பது மிகுந்த சந்தோஷமான விஷயமாய் அவனுக்குத் தோன்றியது.

காமத்தின் விளைவால் ஏற்படும் கூடலை விட, ஒரு பெண்ணின் அருகே இப்படி கிறங்கிக் கிடப்பது சந்தோஷமாக இருந்தது. கூடலைக் காட்டிலும் இந்த அனுபவம் வலுவுள்ளதாக இருந்தது. இந்த அனுபவமே கூடலின் நிறைவைக் கொடுத்தது. ஒரு நிறைவைக் கொடுப்பதாலேயே இந்த அனுபவத்திலேயே தோய்ந்து கிடக்க மனம் ஆசைப்பட்டது.

அவன் கிறங்கிக் கிடப்பதைப் பார்த்து, திலோத்தமை அவனுக்காக வருத்தப்பட்டாள். எவ்வளவு அழகாக, அமைதியாக தவம் செய்து கொண்டிருந்தான். அவனை இப்படி இங்கு இழுத்து வந்து விட்டோம். இந்த நேரம் தவம் முற்றிலும் கலைந்து, என்னையே வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறானே, ஏன் இந்த பேதைமை. தவம் செய்தவனுக்கு எதற்காக இந்த நிலை என்று உள்ளுக்குள் வருத்தப்பட்டாள். ஆயினும், அவன் மறுபடியும் மலையேறிவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். அவனை கேள்விகளால் கட்டிப் போட தீர்மானித்தாள்.

''ஐயா, கடவுள் என்பவர் யார்? அவர் எங்கிருக்கிறார்?'' கை கூப்பி பணிவாகக் கேட்டாள்.

கௌசிகன் சிரித்தான். கேட்க வேண்டிய கேள்வியா இது. பதில் சொல்லி மாளுமா. சொன்னால் புரிந்துவிடுமா. ஆனாலும் இந்தப் பெண் எவ்வளவு வெகுளியாய் இந்தக் கேள்வியைக் கேட்கிறாள். இவளுக்கு என்ன பதில் சொல்வது? கௌசிகன் யோசித்தான்.

''கடவுள் என்பது நீதான் பெண்ணே. எது சந்தோஷமோ அதுதான் கடவுள். சந்தோஷத்தை எப்போது அனுபவிக்கிறோமோ, அப்பொழுது நாம் கடவுளுக்கு



அருகில் இருக்கிறோம். ஏனெனில், நாம் சந்தோஷமயமானவர்கள். சந்தோஷத்தை அனுபவிக்கிற பொழுது, சந்தோஷத்தின் அருகாமையில், அதாவது நமக்கு அருகாமையில், அதாவது கடவுளுக்கு அருகாமையில் இருக்கிறோம். எனவே உலகில் எது சந்தோஷமோ அது கடவுள். இப்போது எனக்கு கடவுள் நீதான்.'' அவன் சொல்ல, திலோத்தமை வெட்கப்பட்டாள்.

''நன்றாக இருக்கிறது. நானாவது, கடவுளாவது. என்னை கேலி செய்ய இந்த பதில் சொல்கிறீர்கள்.''

''இல்லை பெண்ணே! எனக்குத் தெரிந்த பதிலைத் தான் உனக்குச் சொல்கிறேன். எதைப் பற்றி தெளிவாக இருக்கிறேனோ, அதைத்தான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். உனக்கு ஏதேனும் பதில் தெரிந்தால் எனக்குச் சொல்.''

''மறுபடியும் கேலி செய்கிறீர்கள் ஐயா. எனக்கு என்ன பதில் தெரியும். ஆனாலும் கடவுள் என்பதைப் பற்றி யோசிக்கிற பொழுது, எனக்குள் ஒரு உணர்வு தோன்றுகிறது. அதை வேண்டுமானால் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

கடவுள் என்பதற்கு அர்த்தம் நீங்கள்தான். கடவுள் என்பது பாதுகாப்பு. பாதுகாப்பு என்பது அமைதி. எந்த இடத்தில் அமைதியும் ஆரோக்கியமும் நிம்மதியும் நிறைவும் இருக்கிறதோ அந்த இடமே பாதுகாப்பானது. உங்களுக்கு அருகே இருக்கும்போது, நான் இந்த பாதுகாப்பை உணர்ந்தேன். எனவே, இவ்வுலகில் கடவுள் என்பது நீங்கள்தான். நீங்கள் மட்டும்தான்.'' அவள் ஒரே பதிலில் கௌசிகனின் தோளில் கால் வைத்து ஏறி அவனைவிட உயர்ந்து நின்றாள்.

பெண்கள் ஆண்களைவிட சாமர்த்தியசாலிகள்.

பெண்களின் நமஸ்காரமும் கூடலைப் போன்றது. அது ஆண்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரக்கூடியது.

அறிவுள்ள ஒரு ஆண் அறிவுள்ள ஒரு பெண்ணைப் பார்த்ததும் மயங்கிப்போகிறான். அவளுக்குப் பின்னே ஓடுகிறான். அவளிடம் தன்னை வெளிப்படுத்த ஆவல் கொள்கிறான். அவள் வெளிப்படுவதை ஆவலோடு பார்க்கிறான்.

பெண்ணோடு அறிவுப் பரிசோதனை என்பது அநேகமாய் கூடலில்தான் முடியும். ஏனெனில், அந்த அறிவை வேறு எதனாலும் பாராட்டிவிட முடியாது. அந்தப் பாராட்டுகளுக்காக, அதைப் பாராட்டும் விதமாக அங்கே கூடல் தானாக நிகழும்.

கௌசிகனும் திலோத்தமையும் தொடர்ந்து பேசிக் கொண்டு போனார்கள். பல்வேறு விதங்களாய் விவாதித்தார்கள். இரவும் பகலுமாய் நிறைய தத்துவங்களை அலசினார்கள்.

புல் தரைமீது படுத்து கௌசிகன் கண்ணயரும்போது, மிகமுக்கியமான ஒரு கேள்வியை திலோத்தமை வீசினாள்.

மேலே நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. மேகங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. காற்று குளுமையாக வீசிக் கொண்டிருந்தது.

''ஐயா! இல்லறம் சிறந்ததா, துறவறம் சிறந்ததா?''

கௌசிகன் தயக்கமேயின்றி உடனே பதிலளித்தான். ''இல்லறம்தான் சிறந்தது.''

''ஏன் ஐயா. எதனால் இல்லறம் சிறந்தது?''

''இல்லறத்தில் ஈடுபட்டால்தான் துறவறத்தின் மேன்மை தெரியும். துறவறத்தின் மேன்மை தெரிவதற்காக



ஒருவன் இல்லறத்தில் ஈடுபடவேண்டும்.'' சொல்லிவிட்டு கௌசிகன் வாய்விட்டுச் சிரித்தான், திலோத்தமை முகம் சிவந்து போனாள்.

''ஆக, துறவறம்தான் சிறந்தது என்று சொல்லாமல் சொல்கிறீர்களா?''

''ஆமாம் பெண்ணே, இல்லறத்தால் கடவுள் என்கிற விஷயத்தை அடைய முடியாது. அடைவதற்கு தடையாய் அவனுடைய சூழ்நிலை இருக்கும். தனிமையை உணரும் போதுதான் தன்னை உணர முடியும். தன்னை உணர்ந்தவனுக்கு கடவுளை உணர்வது எளிது.

தனிமை தெரியாதபோது தன்னைத் தெரிவதும் கடினம். இல்லறத்தில் ஈடுபட்டு தனிமை தெரிவதென்பது, அபத்தம், இல்லறம் என்பது கூட்டு வாழ்க்கை. பல பேரோடு கூடிக்களிக்கின்ற வாழ்க்கை.

மனைவி என்கிற பெண்ணோடு மட்டும் இல்லறம் முடிந்து விடுவதில்லை. இல்லறம் என்பது மனைவியின் பக்கமாக ஒரு நூறு பேர். தன்பக்கமாக ஒரு இரு நூறுபேர், முந்நூறு பேரோடு வாழ்வதுதான் இல்லறம். முந்நூறு பேரோடு வாழ்பவனுக்கு தனிமை எவ்வாறு சித்திக்கும். எனவே, இல்லறத்தில் ஈடுபட்டு ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்கள் செய்து பேரிரைச்சலின்கீழ் வாழ்ந்து, எல்லோரோடும் தொடர்பு கொண்டு, தொடர்பு கொள்ளுதல் இயலாத காரியம் என்பதைப் புரிந்து கொண்டு, நான் ஒரு தனித்தீவு, என் மனைவி ஒரு தனித்தீவு, என் உற்றார் உறவினர்கள் தனித்தனித் தீவுகள், இங்கு கலத்தல் என்பது இல்லவே இல்லை. ஒரு நாளும் ஒருவரோடும் ஒரு பொழுதும் எது பொருட்டும் கலத்தல் முடியாது என்பதைப் புரிந்து கொள்கிறபோது ஏற்படும் அயர்ச்சி, துறவறத்தின் முதல் படி.''

திலோத்தமை கூர்ந்து கவனித்தாள்.

''மனிதன் கூடிவாழும் இயல்பினன். ஆனால், அவனின் உன்னதமான கடவுளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், இந்த வாழ்வின் மிகச்சிறந்த விஷயமான கடவுளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவன் தனிமையில் இருந்தாக வேண்டும்.''

''எவ்வளவு பெரிய முரண்பாடு.'' கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சொன்னாள்.

''ஆமாம். இந்த உலகம் இந்த அடிப்படையில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. எதிர் எதிராக இருக்கிறது.''

''எது எதிராக இருக்கிறது?''

''வடக்கு துருவம், தென்துருவம் இரண்டிற்கும் இடையிலே உலகம் மாட்டிக் கொண்டிருக்கிறது. நல்லதும் கெட்டதும் உலகத்தின் தன்மை. இடதும் வலதும்தான் உலகத்தின் அமைப்பு, இரண்டாக இருப்பதே இந்த உலகத்தின் குணம். எனவே இங்கு எல்லா விஷயங்களும் இரண்டாக இருக்கின்றன.

ஆண் - பெண் பேதமற்று இருக்க வேண்டுமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆனால், மிகப் பெரிய பேதத்தை, இவர்களுக்கிடையே வாழ்க்கை அமைத்து வைத்திருக்கிறது.''

''இந்த பிரபஞ்சத்தில் பிளவில்லாத உலகம் உண்டா முனிவனே?'' திலோத்தமை ஆவலோடு கேட்டாள்.

''உண்டு. தேவலோகம் என்று அதற்குப் பெயர். தேவர்கள் பிரிவில்லாதவர்கள் என்று சொல்கிறார்கள். அப்படி பிரிவில்லாமல் இருப்பதுதான் அவர்களுடைய இயல்பு என்று இங்கே பூலோகத்தில் நினைக்கப்படுகிறது.



தேவலோகம் அவ்விதம்தானா என்பது எனக்குத் தெரியாது. கடவுள் என்பது அவ்விதம்தான். பிரிவில்லாதவர் மேலும் கீழும் இல்லாதவர். இடதும் வலதும் அற்றவர். எங்கும் நிறைந்தவர். எல்லாமுமாய் இருப்பவர் நீ, நான் யாவருமே கடவுளின் அம்சம். நம் பிறப்பு நம்மை இரண்டாகப் பிரித்து பேதைமைப்படுத்தி வைத்திருக்கிறது. உள்ளுக்குள்ளே நாம் ஒரேயொரு அம்சம். நான் என்னவோ அதுதான் நீ. ஆகவே, உன்னைத் காண்பதில் என்னைக் காண்கிறேன். என்னைப் பார்க்கின்ற சந்தோஷத்தில்தான் உன்னைத் தொட முயற்சிக்கிறேன்.

நானும் நீயும் ஒன்று. நாம் இரண்டு உயிர்ச்சக்திகளும் ஒன்று. இந்த உயிர்ச்சக்திகள் ஒன்றையொன்று கவரும் வண்ணமாகத்தான் காமத்தில் ஈடுபடுகின்றன. அல்லது சண்டை போடுகின்றன.

சண்டை என்பது இன்னொரு வகையான கலத்தல் தான். வெறுப்பு என்பதும் இன்னொரு வகையான உறவுதான். கோபம் என்பதும் இன்னொரு வகையான தொடர்புதான். எனவே, கோபத்தாலோ, வெறுப்பினாலோ, காமத்தினாலோ, அன்பினாலோ, காதலாலோ நாம் ஒருவரையொருவர் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறோம்.

நான் வேறு, நீ வேறு என்று இருப்பின் நானும் நீயும் ஒருவரையொருவர் உணர முற்படவே மாட்டோம். எப்பொழுது மரம் காற்றை உணரமுடிகிறதோ எப்பொழுது மண் மரத்தை உணர முற்படுகிறதோ, எப்பொழுது நீர் மண்ணை உணர முற்படுகிறதோ, எப்பொழுது அக்னி நீரைத் தழுவ ஆவல் கொள்கிறதோ அப்பொழுது இவை எல்லாம் ஒன்று என்று தெரிந்துவிடும். இந்த பூமியிலிருக்கிற எல்லா சக்தியும் ஒரேயொரு விஷயம் உன்னையும்

என்னையும் உட்பட, அதனால்தான் நமக்கு பரஸ்பரம் இத்தனை ஆவல். புரிகிறதா.''

திலோத்தமை கண்களை மூடிக் கொண்டாள். உலகம் என்பதன் இயல்பை, இந்த அரசன், இந்த தபஸ்வி எவ்வளவு அழகாக சொல்கிறான். இவனை இதற்கு மேலும் ஹிம்சை படுத்த வேண்டுமா, இவன் தொடர்ந்து தவம் செய்தால், எப்பேர்ப்பட்ட விஷயங்கள் இந்த பூமிக்கு கிடைக்கும், இவன் தவத்தை நாம் தொடர்ந்து குலைக்க வேண்டுமா, கடவுளே! இதென்ன சோதனை.

திலோத்தமை எழுந்தாள். நமஸ்கரித்தாள்.

''நான் ஒரு தவறு செய்துவிட்டேன். நான் உங்களுடையவள் அல்ல. நானும் நீங்களும் ஒன்றல்ல. நான் வேறு நீங்கள் வேறு, நான் தேவலோகத்துவாசி. நீங்கள் மனித உயிர். உங்களோடு நான் பல்வேறு விஷயங்களில் முரண்படுகிறேன். உங்கள் தவத்தை கலைப்பதற்கா, நீங்கள் ஒன்று என்று சொன்ன விஷயத்தை கலைப்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன். எனவே, என்னை மன்னித்து உங்கள் தவத்தை நீங்கள் தொடரவேண்டும் என்று கேட்கிறேன்.''

கௌசிகன் சிரித்தான், எழுந்து அவள் கைகளை பற்றிக் கொண்டான்.

''பெண்ணே, இது உண்மையாகவே இருக்கட்டும். என் தவத்தை கலைக்க வந்தவளாகவே நீ இருப்பாயாக. என் தவம் மலையிலிருந்து கீழே இறங்கியபோதே கலைந்து விட்டது. இனி தவம் செய்தல் என்பது உடனே இயலாது. எனவே தேவலோகத்து மங்கை திலோத்தமை உன்னோடும், சிறிது காலம் இந்தப் பள்ளத்தாக்கில், நீர் சுனைக்கருகே, ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்துவிட்டு, இந்த இல்லறம்



போதும் என்ற நிலை வந்தபோது, உன்னை விட்டுப் பிரிகிறேன். ஈடுபட்ட பிறகு வெளியேறுவதைவிட ஈடுபட்டதில் முழுவதுமாய் இறங்கிவிட்டு, பிறகு விலகிப் போவோம். வா திலோத்தமை, என்னை வழிநடத்து.'' அவள் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டான்.

திலோத்தமை ஒரு அடிதூரம் முன் வைத்தாள். அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள். அவனை இறுக்க மார்போடு தழுவிக் கொண்டாள்.

அவர்கள் இல்லறம் அந்த அறைக்குள் துவங்கியது.

திலோத்தமை மீது கௌசிகன் கோபப்படவில்லை. அவள் உண்மையைச் சொன்ன பாங்கினை பாராட்டினான். தன் தவம் கலைந்து போனதைப் பற்றி வருத்தப்பட்டாலும், உள்ளுக்குள்ளே காமம் எஞ்சியிருக்கும் வரை, தீராதவரை, இந்த தொந்தரவு இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே உலகத்தில் மிகச்சிறந்த பெண்ணான திலோத்தமையோடு, தேவ அம்சத்துப் பெண்ணான திலோத்தமையோடு சில காலம் காமம் தீர்க்கும் இல்லறம் நடத்திவிட்டு, பிறகு மறுபடியும் தவம் செய்யப் போகலாம் என்று தீர்மானித்தான்.

திலோத்தமை, கௌசிகனின் அறிவாலும் ஆற்றலாலும் கலவரப்பட்டாள். அவன் கிராமத்திற்கு அருகே வந்து, கிராமத்து மக்களோடு சல்லாபிப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தாள்.

கிராமத்து மக்கள் கௌசிகனை அடையாளம் கண்டு வணங்கி, வரவேற்றதைக் கண்டு உள்ளம் பூரித்தாள். நகரத்திற்கு புலவர்களும், பெருந்தனக்காரர்களும், மந்திரிகளும் சேனாதிபதிகளும் அரசனைத் தேடி வந்தார்கள்.

அரசன் அவர்களோடு ஆனந்தமாய் சல்லாபித்தான். திலோத்தமையை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

அவர்கள் யாரென்று திலோத்தமைக்கு விளக்கிச் சொன்னான்.

அரசனுடைய அருமையான குணங்கள் பலவற்றை திலோத்தமை புரிந்து கொண்டாள்.

மறுபடியும் அவர்கள் பள்ளத்தாக்கிற்கு வந்தார்கள். அங்கே உட்கார்ந்து பேசி, பாடி, ஆடி உண்டும் உறங்கியும் சில காலம் வாழ்ந்தார்கள்.

ஒரு விடியலில் இருவரும் எழுந்து எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டார்கள். தியானம் செய்யத் துவங்கினார்கள். யார் உள்ளே இருப்பது என்று தேடத் துவங்கினார்கள்.

மனம் ஒன்றுபட்டு, கௌசிகன் தன்னுள் இருப்பதைக் காண, எதிரே இருப்பதும் தானே என்பது அவனுக்குப் புரிந்து போயிற்று. தனக்குள்ளே இருப்பதைப் பார்க்கின்ற விதமாகவே, தன்னுள் இருக்கின்ற இடத்தின் அருகிலேயே அவளையும் உணர்ந்தான். தான் இது என்று தெரிகின்ற இடத்தின் வாயிலாக அவளைப் பார்த்தபோது, தானும் அவளும் ஒன்று என்பதைப் புரிந்து கொண்டான்.

அவளை விழிமலர நோக்கினான்.

‘‘உன் வேலை முடிந்தது. என் தவம் கலைந்தது. இந்திரனுக்கு என் வாழ்த்துகளைச் சொல். ஆனால், கௌசிகன் சாமானியன் அல்ல. கௌசிகன் தோல்வியே காணாதவன். இந்த முறை நான் தடுமாறினாலும், மறுமுறை மிக உக்கிரமாக தவம் செய்வேன். வெகு நிச்சயமாய் பிரம்மரிஷி என்ற பட்டத்தை அடைவேன். எனவே, தேவேந்திரனுக்கு எப்போதும் என்னால் ஒரு அபாயம் உண்டு என்பதைச் சொல். இந்த தடுமாற்றம் என்னை



மேலும் உறுதியாக்கும். இந்த தவ கலைப்பு என்னை மேலும் மேம்படுத்தும்.

திலோத்தமை, நீ என் தவத்தைக் கலைக்கவில்லை. என் தவத்தைக் கலைத்தது தேவேந்திரன், நீ வெறும் கருவி. கருவியைக் கோபித்து என்ன பயன். நான் கருவியை ஆசீர்வதிக்கிறேன். இல்லறத்தில் எல்லா சுகங்களையும் எனக்கு வாரி வழங்கிய பெண்ணே! நீ நல்ல துணைவனோடு நலமாக பலமாக எல்லாம் தெரிந்தவளாக தேவேந்திரனுக்கு இணையாக கடவுள் என்பதை உணர்ந்தவளாக, கனிவுமிக்கவளாக வாழ்வாயாக. உன்னிலிருந்து பிறக்கும் குழந்தைகள் தேவலோகத்து பிரஜைகளாக மட்டுமின்றி பூலோகத்திலும் வந்து அவர்களுடைய வாசனையை வீசிவிட்டுப் போகட்டும்.

அழகு என்பது உடம்பல்ல. அழகு என்பது அன்பு. அன்பு என்பதை என்னிடம் அழகாக பரிமாறிய திலோத்தமை... உன்னுடைய சாயல் இங்கு இந்த பாரததேசத்தில் பல பெண்களிடம் மிளிரவேண்டும். அவர்களெல்லாம் திலோத்தமை என்கிற பெண்ணை உணர வேண்டும். இது என்னுடைய ஆசீர்வாதம்’’ என்று இரண்டு கைகளையும் தூக்கி அவளை ஆசீர்வதித்துவிட்டு அவன் மறுபடியும் மலை நோக்கி நடந்தான்.

திலோத்தமை அவன் போன வழியே நமஸ்கரித்தான். வானம் பார்த்தாள். உடல் நீத்தாள். தேவலோகத்திற்கு விரைந்து சென்றாள்.

அவளை தேவலோகம் ஏற்றுக் கொண்டது.

மலைமீது ஏறிக்கொண்ட கௌசிகன் தீவிரமாய் யோசித்தான்.

இனிமேல் காமம் என்னை கவிழ்க்காது. திலோத்தமை என்கிற அன்பான, அழகான அறிவார்ந்த பெண்ணால் என் காமம் என்னைவிட்டு ஒழிந்தது. என்னை ரகசியமாய் உட்புகுந்து இனி அது தாக்காது. திலோத்தமைக்கு மேலும் வேறு ஒரு பெண் இந்த சுகத்தைக் கொடுத்துவிட முடியுமா? எனவே திலோத்தமையால் இந்த அனுபவம் பூரணமாயிற்று. இனி எனக்குள் என்னைத் தாக்க என்ன விஷயங்கள் இருக்கின்றன என்று புரியவில்லை.

மறுபடியும் தவம் செய்யவேண்டும். பிரம்மரிஷி என்ற பட்டத்திற்காக தவம் செய்யவேண்டும். அடுத்த தேசத்தை அபகரிக்கிற போரும் பிரம்மரிஷி என்கிற பட்டத்தை செய்கிற தவமும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. மற்றவர்களுக்கு நான் வேறு ஏதேனும் பெயரால் அழைக்கப்படலாம். ஆனால், எனக்குள் நான் கௌசிகன் தான். போராடும் அரசன்தான். போராடும் குணம் என்னை விட்டுப் போகவில்லை. போகாது என்று தோன்றுகிறது.

கௌசிகன் மலையேறி பாறைமீது அமர்ந்தான். மெல்ல மூச்சுப்பயிற்சியை செய்யத் துவங்கினான்.

மூச்சை உற்று அவன் மனம் நோக்க மூச்சு மெல்லிய இழையாய் வரத் துவங்கியது. அந்த மெல்லிய இழையும் அறுத்து உள்ளுக்குள் அடங்கியது.

கௌசிகன் பேச்சுமூச்சற்று உள்ளுக்குள் மாண்டு போனான். அவன் மனம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. அசையாது மனம் பார்த்ததை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் தவம் தொடர்ந்தது.



## 3

கௌசிகனுடைய தவம் தொடர்ந்த காலகட்டத்தில் கோசல தேசத்தை திரிசங்கு என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் ஆத்ம வேட்கையுடையவன். நிறைய பக்திசெய்து பல புராணங்களைப் பெரியவர்களின் மூலமாக கேள்விப் பட்டு தன் வாழ்க்கை செவ்வனே மாறவேண்டும் என்று ஆசைப்படும் அளவிற்கு ஆற்றல் இல்லாதவன்.

பக்தியை அவன் காசு கொடுத்து வாங்குவதற்கு முயற்சி செய்தான். ஆசீர்வாதங்களை பொன் கொடுத்து வாங்கிவிடலாமென்று அவன் நினைத்தான். பெரிய யாகங்களை ரிஷிகள் மூலம் செய்துவிட்டால் அவையினுடைய புண்ணியம் மொத்தமும் தனக்கே சேருமென்று, அவ்விதமான யாகங்கள் செய்து வந்தான். இதனால் மறுமை சிறப்பாக இருக்குமே தவிர அவன் முற்றிலும் மனுஷத்தனத்திலிருந்து விடுபட முடியாது என்பது அவனுக்குப் புரியவில்லை.

இந்த பக்தி அவனுக்குள் ஒரு பெரிய பேராசையை தோற்றுவித்தது. அவன் இறப்பு கண்டு அஞ்சினான். உடம்பு தன்னைவிட்டு நீங்கிவிட்டால் தான் என்பது எப்படி என்று பயந்தான். எனவே, தான் எல்லா நேரமும் உயிரோடு இருக்க, உடம்போடு இருக்க ஆசைப்பட்டான். உடம்போடே சொர்க்கலோகம் போகவேண்டும் என்று தீர்மானம் செய்தான்.

படித்தவர்களைக் கேட்டான். பெரிய ரிஷிகளை அணுகினான். யாகம் செய்தால் அவ்விதம் போக முடியுமா என்று விசாரித்தான்.

அவனை பல பேர் விலக்கினார்கள். ஆனால், யாரோ ஒருவர் வல்லமை மிக்கவர் இவ்விதம் தனக்காக செய்ய முயற்சிப்பார் என்று நம்பினான்.

எல்லோரும் செல்வதால் வசிஷ்டரை நாடி கானகத்திற்குள் புகுந்து, அவர் காலில் விழுந்து வணங்கினான். தன்னை யாரென்று அறிமுகப்படுத்திக் கொண்டான். தன்னுடைய தேவையை மெல்ல விளக்கினான்.

''முடியாது அரசரே... உடம்பு என்பது இந்த உலகத் தோடு சம்பந்தப்பட்டது. ஆத்மம் என்பது அகோரப்பட்டு உடம்பாயிற்று. அகோரப்பட்டதை ஏன் சுமந்து கொண்டு போக வேண்டும். வளர்ச்சி வருவதும் மாறுவதும் அகோரமானது. மாறாததே நிரந்தரமானது, சுந்தரமானது. எனவே அரசனே, உடம்பு என்பதை முக்கியமாக கருதாதே. இறப்பு என்பது உடம்பினுடைய சிறிய மாறுதல். உனக்கு தலையில் நரை ஏற்படுவதைப் போல மரணம் ஏற்படுகிறது. தலையில் நரை ஏற்படுவது பற்றி எவ்வளவு கவலை கொள்கிறாய். அதேவிதமான கவலை இதற்கு கொண்டால் போதும்.

எனவே, இறப்பை எதிர்த்து, இறப்பு வேண்டாம் என்று நினைத்து, நீ சொர்க்கலோகம் போக உடம்பைக் கேட்காதே. உடம்பை உகுக்கிற வழியை, உடம்பை புறக்கணிக்கிற வழியை தெரிந்து கொள்'' என்று சொன்னார்.

அரசன் மறுத்தான்.

''இல்லை. எனக்கு உடம்பை விட இஷ்டமில்லை. நான் என்பது இந்த உடம்பு, இந்த கை கால், இந்த தலை. நான் இளைஞனாக இருந்தாலும், கிழப்பருவமாக இருந்தாலும், இந்த உடம்போடே இருக்க விரும்புகிறேன்.



இந்த கிழப்பருவத்தோடேயே நான் சொர்க்கலோகம் போக ஆசைப்படுகிறேன்.

உங்களால் எத்தனையோ சாதனைகள் செய்ய முடிந்திருக்கிறது. இந்த உடம்பை உங்களால் சொர்க்க லோகத்திற்கு அனுப்ப முடியாதா?'' என்று கேட்டான்.

''அரசனே, திரிசங்கு, என்னால் முடியுமா முடியாதா என்பதல்ல பிரச்சினை. இவ்விதம் செய்வது இயற்கைக்கு விரோதமானது. இந்த உடம்போடு தேவலோகம் போய் என்ன செய்யப் போகிறாய். தேவர்களுக்கெல்லாம் உடம்பா இருக்கிறது. உடம்பே அற்ற இடத்தில் உடம்போடு போய் ஒருவன் நின்று, என்ன செய்ய முடியும். யாரோடு கலக்க முடியும். என்ன விதமாக வாழ முடியும். எந்த இடத்தில் எவ்விதமாக வாழ வேண்டுமோ, அந்த இடத்தில் அவ்விதமாக இருப்பதுதான் சிறப்பு.

நீருக்குள்ளேயே வாழ வேண்டும் என்ற ஆசை ஒருவனுக்கு வந்துவிட்டால், அவன் மீனாகத்தான் மாற வேண்டும். அப்படி மீனாக மாற வேண்டும் என்றால், அவன் மறுபிறப்புத்தான் எடுத்தாக வேண்டும். இதே உடம்போடு நீருக்குள்ளே வாழ்வது என்பது இயலாத காரியம்.

மன்னனே... புரிந்து கொள். உன் உடம்பு இந்த பூமியில் வாழ படைக்கப்பட்டிருக்கிறது இந்த உடம்பு மெல்ல மெல்ல அழிவதற்காக படைக்கப்பட்டிருக்கிறது. இந்த உடம்பு மாறுதலுக்குரியது. மாறாமல் இருக்கும்படியாக இது படைக்கப்படவில்லை. எனவே, படைத்தலுக்கு எதிராக, இறைவனுக்கு எதிராக நாம் எது செய்தாலும் அது தவறாகவே முடியும். செய்ய முடியுமா முடியாதா என்பதல்ல பிரச்சினை. செய்யக் கூடாது என்பதுதான் விதி.

எனவே, உடம்போடு சொர்க்கம் போவது என்பது தேவையில்லாத விஷயம். நீ இறந்து சொர்க்கலோகம் போக உண்டான விஷயங்களளை முதலில் கற்றுக்கொள்'' என்று சொன்னார்.

அரசன் வேகமாக எழுந்து நின்றான்.

''நீங்கள் இவ்வளவு பெரிய முனிவராக இருந்து என்ன பிரயோஜனம். எல்லாம் கற்றும் ஒரு அரசனை உயிரோடு சொர்க்கத்துக்கு அனுப்ப முடியவில்லை. நீங்கள் தபஸ்வி என்று கூறிக்கொள்வதனுடைய லட்சியம்தான் என்ன?'' என்று ஏளனம் செய்தான். எதிர்த்துப் பேசினான்.

வசிஷ்டர் கோபம் கொண்டார்.

''முட்டாள். என்ன பேசுகிறோம் என்றுகூட தெரியாமல் பேசுகிறாய். இவ்வளவு தெளிவாகச் சொன்ன பிறகும் மரணம் பற்றி புரியாமல் தவிக்கிறாய். மரணபயம் இருக்கிற வரை கடவுள் பற்றிய விவரங்கள் தெரியவே தெரியாது. முதலில் மரண பயத்தை ஜெயிப்பதற்காக அடிப்படையான விஷயங்களை கற்றுக் கொண்டு வா. உனக்கு பக்தியை காசு கொடுத்து வாங்கி விடலாம், கடவுளை காசு கொடுத்து வாங்கி விடலாம் என்று யாரோ தவறாக சொல்லியிருக்கிறார்கள். நீ அரசனாக இருப்பதாலேயே, எதுவுமே உன் காலடியில் விழுந்து விடும் என்று நினைக்காதே. அரசன் ஒரு சாதாரண மனிதன்தான். எல்லா உயிர்களைப் போல, ஒரு நாயைப் போல, ஒரு நரியைப் போல, ஒரு சிங்கத்தைப் போல ஒரு யானையைப் போல, ஒரு மரத்தைப் போல, ஒரு உயிர்தான். அவன் எந்த விதத்திலும் மற்றவரைவிட சிறப்பானவன் அல்ல.

அரசன் என்கிற உலகாயுத யோக்கியதையை வைத்துக் கொண்டு, உன்னால் எல்லாம் செய்ய முடியும் என்று தயவு



செய்து நினைக்காதே. இங்கிருந்து போ'' என்று கடுமையாக எச்சரித்தார்.

அரசன் கோபமானான்.

''அப்படியானால். நீங்கள் என் எல்லையிலிருந்து வெளியே போங்கள். இது என்னுடைய தேசம். நான் வாழ்கின்ற இடம். என்னுடைய ஆளுமைக்கு உட்பட்ட பூமி. இந்த இடத்திலிருந்து நீங்கள் வெளியேறுங்கள்'' என்று அவரைப் பார்த்து கட்டளையிட்டான். அவரை வெளியேற்றும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

அவன் வீரர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள்.

வசிஷ்டர் உக்கிரமானார்.

''உடம்பு முக்கியமென்று கருதுகிறாய் அல்லவா. கிழத்தனமானாலும், நரைத்துப் போனாலும் எலும்பும் தசையும் ஆன இந்த தேகத்தை மிக முக்கியமானதாக கருதுகிறாய் அல்லவா. இதற்கு காரணம் நீ சிகப்பாகவும், வலுவுள்ளவனாகவும், வாளிப்பாகவும் இருப்பதால்தானே, கிழத்தனம் எய்தியும் உடம்பிலே வைரம்பாய்ந்த ஒரு திமிர் இருப்பதால்தானே இன்றிலிருந்து, இந்த க்ஷணத்திலிருந்து உன் உடம்பு உனக்குப் பிடிக்காத கருநிறமாய், நோயுற்றதாய், நாற்றமெடுப்பதாய் விளங்கும். உனக்கு அருகே வரக்கூட மக்கள் பயப்படுவார்கள்.

நீ எல்லோராலும் தூஷிக்கப்படுவாய். உன்னை அண்டி உன்னிடம் எவரும் தானம் கேட்க மாட்டார்கள். உன்னை அரசனாக ஏற்கமாட்டார்கள். எனவே உடம்பு என்கிற இந்த அரசன் இன்றிலிருந்து விழுந்து வெறும் உடம்பாக நீ இரு. இந்த நாற்றமெடுத்த உடம்பைப் பற்றி

யோசித்து புரிந்து கொள். பிறகு கடவுள் என்கிற தன்மை உனக்கு விளங்கும்'' என்று சபித்தார்.

அதே க்ஷணம், அந்த அரசனுடைய உடம்பு கருமையாயும், நோயுற்றதாயும் மிகுந்த கிழத்தனத்தை உடையதாயும் ஆயிற்று.

அரசன் வருந்தினான்.

அந்த இடத்தை விட்டு வசிஷ்டர் தென்திசை நோக்கி பயணம் செய்தார்.

அரசனை அருவருப்பாக கவனித்த மக்கள் அவனை விட்டு விலகினார்கள். அவன் காசு கொடுத்தால் யாகம் செய்யத் தயாராக இருந்த புரோகிதர்கள், அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போனார்கள். அவனை பல்வேறு வித யாகங்கள் செய்யத் தூண்டிய மந்திரிகள், அவனை தூஷித்துப் பேசினார்கள். அவன் பிள்ளைகளும் மனைவியும் அவனைக் கண்டால் ஒளிந்து கொண்டார்கள்.

அரசன் தனித்துப் போனான். அவன் உடம்பை சுமக்கமாட்டாமல் சுமந்துகொண்டு காடெங்கும் திரிந்தான். கௌசிகனைப் பார்த்தான். காலில் விழுந்து விம்மி விம்மி அழுதான்.

''என்ன... யார் நீ? எதற்கு இவ்வளவு கோர உருவம் தாங்கி அலைகிறாய். உன்னுடைய கதை என்ன?'' கௌசிகன் கனிவோடு கேட்டான்.

தான் வசிஷ்டரால் சபிக்கப்பட்ட விஷயத்தை கௌசிகனிடம் திரிசங்கு புலம்பியவாறே சொன்னான்.

''வசிஷ்டரா உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கினார். உன்னுடைய கோரிக்கை என்ன?'' கௌசிகன் கூர்மையாக அரசனைப் பார்த்தான்.



அரசன் தான் உடம்போடு சொர்க்கம் போக வேண்டும் என்று ஆசைப்பட்டதைச் சொன்னான்.

''இவ்வளவுதானே... இதற்கு இத்தனை கொடுமையான சாபமா. இதன் அடிப்படைத் தத்துவத்தை உனக்கு சொல்லிக் கொடுத்திருக்கலாம். அல்லது உடம்போடு உன்னை சொர்க்கத்திற்கு அனுப்பியிருக்கலாம் உடம்போடு ஒருவரை சொர்க்கத்திற்கு அனுப்ப இயலுமே. ஏன் முடியாது என்று வசிஷ்டர் சொன்னார்.

நான் அனுப்புகிறேன். இதற்காக யாகங்களை நாம் செய்யத் துவங்குவோம். இதற்கான திரவியங்களைக்கூட நீ தரவேண்டாம். அவைகளை நானே என் தவ வலிமையால் சம்பாதிக்கிறேன்.''

கௌசிகன் நகரங்களுக்குப் போய், பொருள் தேடி வந்து மிகக் கடுமையாக யாகம் செய்யத் துவங்கினான். திரிசங்குவை முன்நிறுத்தி, அவனை எஜமானனாகச் செய்து, அவனுடைய உடம்பு மேல்நோக்கி தேவலோகம் போக வேண்டுமென்று முழு பலத்தோடு யாகங்கள் செய்தான்.

நோயுற்ற அரசனது உடம்பு, மறுபடி ஒளிவீசத் துவங்கியது. முன்னைக் காட்டிலும் அழகாக, பிரகாசித்தது. முன்னைக் காட்டிலும் அதீதவலிவுகளை பெற்றுக் கொண்டது. அந்த வலிவுகளால் அவனுடைய உடம்பு பறக்கத் துவங்கியது. பறக்கத் துவங்கிய உடம்பு பல்வேறு திசைகளிலும் அலையத் துவங்கியது. அலையத் துவங்கிய உடம்பை நிலைநிறுத்தி தேவலோகம் நோக்கிப் போக முயற்சித்தான்.

தன்னுடைய மொத்த தவ வலிமையும் திரிசங்குவின் கைகளுக்குப் போ, தேவலோகம் போ. வசிஷ்டரால் முடியாதது கௌசிகனால் முடியும். எனவே, உன்னை

கௌசிகன் தேவலோகத்திற்கு அனுப்பினான் என்று அங்கே போய்ச் சொல்.'' கௌசிகன் தன் தவ வலிமையை திரிசங்குவிடம் கொடுக்க, அந்த தவ வலிமையை எடுத்துக் கொண்டு திரிசங்கு தேவலோகம் நோக்கி உடம்போடு பயணப்பட்டான்.

உலகம் மிக ஆச்சரியத்தோடு அந்தப் பயணத்தைப் பார்த்தது.

கௌசிகனுடைய தவ வலிமையால் உடம்போடு தேவலோகத்திற்கு பறந்தான். மிக எளிதாக தேவலோகத்தின் வாயிலை அடைந்தான். காலூன்றினான். உள்ளே போக தலைப்பட்டான்.

தேவலோகத்தின் காவலர்கள் அவனைத் தடுத்தார்கள், உடம்போடு ஒரு மானுடன் வருவதைப் பார்த்து மிரண்டார்கள். இந்திரனிடம் தகவல் சொன்னார்கள்.

இந்திரன், வாயிலுக்கு ஓடிவந்தான்.

உன்னுடைய குலகுருவான வசிஷ்டருடைய சாபத்தைப் பெற்றுவிட்டு, இந்த இடத்தில், தேவலோகத்தில் கால் வைக்க என்ன துணிச்சல். நீ ஒருகணம் கூட இங்கே இருக்க முடியாது. போ வெளியே'' என்று அந்த உடம்பை, திரிசங்குவை பிடித்து தள்ளினான்.

திரிசங்கு வானுலகத்திலிருந்து மிக வேகமாக பூமி நோக்கி விழத் துவங்கினான். விழும்போதே, கௌசிகரே... என்று வாய்விட்டு அலறினான்.

கௌசிகருக்கு அந்தக் குரல் கேட்டது. வானுலகத்திற்கு அனுப்பி வைத்துவிட்டோம் என்று நினைத்துக் கொண்டிருந்த சந்தோஷம் சட்டென்று நின்றது. கௌசிகன் கோபமானான்.



''நில்... அங்கேயே நில். அந்த இடத்தை விட்டு நகராதே. அங்கேயே இரு'' என்று திரிசங்குவிற்கு ஆணையிட்டான்.

திரிசங்குவின் உடல் அந்தரத்தில் நின்றது. திரிசங்கு உடல் வான் உலகத்திலும் இல்லை, பூமியிலும் இல்லை. நடுவே மிதந்து கொண்டிருந்தது.

இந்த அதிசயத்தை படைக்கும் கடவுளான பிரும்மன் பார்த்து வியந்தான். தனக்கு இணையான சக்தி கொண்ட கௌசிகரை வணங்கினான்.

''ஐயனே... முனிவனே... இனி மறுபடியும் தேவலோகம் திரிசங்கு போவது முடியாத காரியம். பூமிக்கு வந்தாலும் அவனால் உயிரோடு இருக்க முடியாது. எனவே, திரிசங்குவிற்காக, அவனைச் சுற்றி ஒரு தேவ உலகத்தை நான் ஏற்படுத்துகிறேன். திரிசங்கு பன்னெடுங்காலம் அங்கேயே வளமோடு வாழட்டும். அவனுக்காக நட்சத்திரங்களும், நிலவும், சூரியனும் நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொல்ல, திரிசங்கும் சந்தோஷமானான்.

கௌசிகன் அமைதியானான். ஆனால், திரிசங்குவை அந்தரத்தில் நிற்க வைக்கும் விஷயத்தில், அவனுடைய தபோ வலிமை முழுவதும் செலவழிந்து போயிருந்தது. திரிசங்குவின் ஆசைக்காக தன் தவ வலிமையை இழந்தது பற்றி கௌசிகன் துக்கமுற்றான்.

வசிஷ்டர் மறுதலித்ததால் நான் முன்வந்தேன். எனக்கும் திரிசங்குவிற்கும் எந்த சம்பந்தமுமில்லை. வெறும் கர்வத்திற்காக, வீண் ஆடம்பரத்திற்காக, என் தவத்தை நான் செலவழித்தேன். எனக்காக யோசிக்காமல், பிறருக்காகவே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். பிறரை

முன்வைத்தே என் காரியங்கள் இருக்கின்றன. நான் எவ்விதம் பிரம்ம ரிஷியாக முடியும்.

எப்படி காமத்தை நகர்த்தினேனோ அதேபோல நான் என்ற அகந்தையையும் நகர்த்த வேண்டும். என்னுடைய அரசகுணம் என்னை அடிக்கடி தடுக்கி விழச் செய்கிறது. இந்த முறை மேற்கே போய், இன்னும் தீவிரமாய் தவத்தில் ஈடுபட்டு, நிச்சயம் பிரம்மரிஷியாவேன்' என்று சொல்லிக் கொண்டு, கௌசிகன் மேற்கு கடற்கரைப் பக்கம் நடந்தான். அங்கு போய், அமைதியான இடத்தில் அமர்ந்து, ஆழ்ந்து, தியானத்தில் அடக்கினான்.

இந்த முறையும் உக்கிரமான தவம் நடந்தது. மண்ணின் அந்தப் பகுதி மிகுந்த அமைதியாயிற்று.

அந்த அமைதி தேவர்களை வாட்டியது. அவர்களை பயமுறுத்தியது.

தேவேந்திரன் இந்த முறை மேனகையை தவம் கலைக்க அனுப்பினான்.

''கௌசிகனிடம் போய் நீ எதுவும் பேச வேண்டாம். வெறுமே நில். உன்னுடைய அழகைப் பார்த்து, கௌசிகன் வேறொரு திட்டம் தீட்டுவான். அப்போது அவனுடைய தவம் தானாகக் கலையும்'' என்று சொல்லி மேனகையை பூமிக்கு அனுப்பினான்.

தேவலோகப் பெண்ணான மேனகை, மானிட உருவில் பூமிக்கு வந்து இறங்கினாள். கௌசிகன் தவம் செய்யும் இடத்தை நோக்கி நடந்தாள்.

அவள் வருவதற்கு முன்பே தேவேந்திரன், தேவர்களை மான்களாகவும், மயில்களாகவும், முயல்களாகவும், பல்வேறு வண்ணப் பறவைகளாகவும், தாவரங்களாகவும்,



யானைகளாகவும், சிங்கங்களாகவும் உருமாற்றி, அந்தப் பகுதியில் உலவ விட்டான்.

மான்குட்டி தடுமாறியது. பெண்மான் அதை முகர்ந்து மெல்ல இடித்து எழுப்பியது. ஆண்மான், பெண்மானை நகர்த்திவிட்டு கொம்பால், குட்டி மானை தாங்கிக் கொண்டது.

முயல்கள் பஞ்சுப் பொதி போல் தாயைச் சுற்றி அமர்ந்திருந்தன. திடீரென்று நாலாபுறமும் சிதறி ஓடின. பிறகு மறுபடியும் தாய்க்கருகே ஓடிவந்தன. புற்களைக் கடித்தன. மலர்களை முகர்ந்தன. இடமும் வலமுமாய் அலைந்தன.

பறவைகள் இரை கொண்டுவர, குஞ்சுகளின் கூக்குரல்கள் இசையாய் வெளிப்பட்டது.

மன ஒருமைப்படுத்தி எந்நேரமும் ஒரு புள்ளியிலேயே நிலைத்திருந்த கௌசிகன் மனம், இந்தக் காட்சிகளைக் கண்டு மெல்ல தடுமாற ஆரம்பித்தது. இனவிருத்தியைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தது.

வலிமையுள்ள இந்த யானையின் குழந்தை எவ்வளவு வலிமையாக இருக்கும். இது ஆண்சிங்கக் குட்டி, இது பெண்சிங்கக் குட்டி இவை இரண்டும் பார்ப்பதற்கு என்ன மினுமினுப்பாக இருக்கின்றன. இவை வளர்ந்து பெரிதாகி, ஒன்றோடு ஒன்று கூடி, இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை எத்தனை சிறப்பான சிங்கமாக இருக்கும். இந்த முயல்களின் வெண்மை, அந்த முயல்களின் வெண்மை இரண்டும் சேர்ந்து பிறந்த, இந்த சின்ன முயல்குட்டி எத்தனை பிரகாசமான வெண்மையாக இருக்கிறது.

அடடே... வீரிய வித்துக்கள், நாம் தவம் செய்யும் இடத்தைச் சுற்றி வளர்கின்றன. எல்லா இனப்பெருக்கமும்

அற்புதமாய் அழகாய் நடைபெறுகிறது. அரசனாக இருந்தபோது, பல குழந்தைகளுக்கு நான் தகப்பனாக இருந்தேன். இப்போது கௌசிகனாக, தவமுனிவனாக வாழ்ந்து வருகிறேன். இந்த நேரம் இந்த வலிமையோடு எனக்கொரு குழந்தை பிறந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும். அந்தக் குழந்தை எவ்வளவு சிறப்பாக இருக்கும். இந்த பூமிக்கு அப்படியொரு அம்சமான குழந்தை தேவைதான் அல்லவா.

ஒரு குழந்தையை எப்படி ஈன்றெடுப்பது?

அவன் நீராட சுனையில் இறங்க, சுனையிலிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள். ஈரமான ஆடையில் அவள் உடம்பு துல்லியமாய் தெரிந்தது. அந்தக் கன்னியின் பேரழகு கௌசிகனை பிரமிக்க வைத்தது.

அவள் அங்கங்கள் சுத்தமாக இருந்தன. முகம் பிரகாசமாக இருந்தது. உடம்பு ஆரோக்கியம் நடையில் தெரிந்தது.

அவள் கௌசிகனை வணங்கினாள். விலகி நின்றாள்.

யார் என்று விசாரித்தான். ஏதோ பெயர் சொன்னாள், கௌசிகன் காதில் விழவில்லை.

''என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?'' பளிச்சென்று கூச்சமில்லாமல் அவளைப் பார்த்து கேட்டான்.

நதிக்கரையில் அல்லது நீர்க்கரையில் இருக்கின்ற பெண்ணைப் பார்த்து அவ்விதம் கேட்கலாம் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.

அவள் சரியென்று சம்மதம் தெரிவித்தாள்.

தனது வலது கரத்தை அவளை நோக்கி நீட்டினான். அவள் அந்தக் கரத்தை பற்றிக் கொண்டாள்.



இருவரும் சுனையில் இறங்கி நீரை வழிபட்டு, நீருக்கு மேலுள்ள ஆகாயத்தையும் வழிபட்டார்கள்.

கௌசிகன் குளித்து முடித்தபிறகு கரையேறினான். மேனகை என்கிற அந்த தேவகுலப் பெண்ணோடு பத்து வருடங்கள் இல்லறம் நடத்தினான்.

அவனுக்கு குழந்தை பிறந்ததும், குழந்தையின் அழுகுரலும் சிரிப்பும் கௌசிகனை மயக்க வைத்தன.

மறுபடி ஆழ்ந்து அமர்கையில் குழந்தை ஓடிவரும் சத்தம் கேட்டது. குழந்தை வந்து மடியில் உட்கார்ந்து கொண்டது. கௌசிகன் மெல்ல அந்தக் குழந்தையை உற்று உற்றுப் பார்த்தான்.

மனிதனுக்கு சந்ததி என்பது மிகப்பெரிய மயக்கம். பெண்ணின் பணிவிடை எவ்வளவு மயக்கமோ அவ்வளவு மயக்கம் குழந்தையின் பேச்சும் சிரிப்பும். இந்த மயக்கத்திலிருந்து ஒரு ஆண் தன்னை சுதாரித்துக் கொள்வது மிகக் கடினம்.

மறுபடியும் இந்தக் கௌசிகன் தவறுசெய்து விட்டான்.

என்ன செய்வது, இவர்களை விட்டு விலக வேண்டியதுதான், இந்த சந்ததி ஆசையை அறுத்தெறிய வேண்டியதுதான். தனிமையாக இருக்க இவை எவ்வளவு பெரிய தடை.

தனிமையில்தான் தன்னைப் பார்க்க முடியும். தன்னைப் பார்த்தால்தான், பிரம்ம ரிஷியாக முடியும். எனவே இந்தக் குழந்தை, இந்த சந்ததி, இந்த மேனகை இனி வரவே கூடாது.

மெல்ல எழுந்தான். அவர்களை மனத்துக்குள் புறக்கணித்தான். நடந்தான். மேனகை புரிந்து கொண்டு,

குழந்தையோடு பின்னே ஓடினாள். அவன் முன் நின்று, இந்தக் குழந்தைக்கு பதில் சொல்லுங்கள் என்று நீட்டினாள்.

கௌசிகன் தன் புஜத்தால், தன் கண்களை மறைத்துக் கொண்டான். ஏனெனில், பச்சிளங்குழந்தையை பார்த்தால் கூட மனம் சஞ்சலப்பட்டுவிடும். எனவே, பார்வையை வெளியே வைக்காமல் உள்ளே வைப்பதற்காக, தன் மனத்துக்குள் வைப்பதற்காக, தனது கண்களை இறுக்க மூடிக் கொண்டு தொடர்ந்து நடந்தான்.

அவன் செய்தது குரூரமென்று சாதாரண மக்கள் சொல்வார்கள். ஆனால், உற்றுப் பார்த்தால், ஆழ்ந்து யோசித்தால், கௌசிகன் என்பவன் தன்னை அறிவதற்கு, தன்னுடைய தவத்தை முடிப்பதற்கு எத்தனை பாடுபட்டிருக்கிறான் என்பது புரியும். எவையெல்லாம் இழந்திருக்கிறான் என்பது புரியும். எப்பேர்ப்பட்ட தியாகங்களை செய்திருக்கிறான் என்பது தெரியும்.

மறுபடியும் அவன் வேறு திசை நோக்கி நடந்து, மீண்டும் ஆழ்ந்து தியானத்தில் அமர்ந்தான்.

இந்த முறை அவனுடைய தவ வலிமை தேவலோகத்தை சுட்டெரித்தது.

தேவர்கள் மறுபடியும் ஒன்றுகூடினார்கள்.

ஒரு மனிதன் தன்னுடைய மனோபலத்தால் அடிக்கடி தேவலோகத்தை ஆட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து மனம் வெதும்பினார்கள்.

எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். இந்த முறை நிச்சயம் ஜெயித்தாக வேண்டும் கௌசிகன் மறுபடியும் தவம் செய்யவே வரக்கூடாது என்பதாய் நாம் மாற்றிவிட வேண்டும் என்று பேசினார்கள்.



கௌசிகன் அரசனாக இருந்து பல தாஸிகளை அனுபவித்திருக்கிறான். மிக உயர்ந்த லட்சணமுடைய திலோத்தமையையும் மேனகையையும் ருசி பார்த்து விட்டான். இப்பொழுது மத்திய வயது அவனுக்கு வந்துவிட்டது. அவன் மத்திம வயதில் விகாரங்கள் தலைதூக்கும். அப்படி தலைதூக்கிய விகாரங்களுக்கு தீனிபோடுவதற்காய், ஒரு பெண்ணை அனுப்புவோம் அந்தப் பெண் பணிவு செய்யாமல், அமைதியாக இராமல் காமகுதியல்களை அவன் முன்பு நிகழ்த்தட்டும். இந்த காமகுதியல்களில் ஈடுபட்டுவிட்டால் பிறகு மனம் என்னவானாலும், தவத்தின் பக்கம் திரும்பாது.

பணிவிலிருந்து மீண்டுவிடலாம். சந்ததியினரிடமிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், மனதின் உள்ளுக்குள் இடைவிடாத காமவிகாரங்கள் தலைதூக்கி ஆடும்படி செய்துவிட்டால், அந்த விகாரங்களை வளர்த்து விட்டால், பிறகு கதிமோட்சமே இல்லை. எத்தனை வயதானாலும் திரும்பத் திரும்ப அந்த விகாரங்கள் மனிதன் மனதில் சுழன்று கொண்டிருக்கும். அவைகளை தடுத்து நிறுத்தவே முடியாது.

எனவே, காமவிகாரங்களைக் கிளறுகின்ற ஒரு பெண்ணை, இப்போது அனுப்புவோம்.

ரம்பை இதற்கு ஏற்றவள் என்று முடிவு செய்தார்கள்.

ரம்பை பயத்தோடு தரைதொட்டாள். மனுஷியானாள். கௌசிகனை நோக்கி நடந்தாள்.

அவன் கண்விழித்து, சுனை நோக்கி நடக்கும்போது, கைதட்டி கூப்பிட்டாள். கண்கிறங்கப் பேசினாள். நாக்கு உலர்ந்தது போல் நடித்தாள். காமவிகாரத்தில் தவித்தது போல் சேட்டைகள் செய்தாள்.

''என்னால் தாங்க முடியவில்லை. நான் பெண். நீ ஆண். இப்படி அவஸ்தைப்படுவது உனக்குப் புரிய வில்லையா. இதைத் தணிக்க வேண்டும் என்பது நீதியில்லையா. எனவே, பேரவஸ்தையில் ஈடுபட்டிருக் கின்ற என்னுடைய காமத்தை உடனடியாக தீர்ப்பாயாக. இந்த உலகத்தில் இதுவரை நீ அனுபவித்தேயிராத காமசுகத்தை உனக்கு நான் தருகிறேன். இது உன்னை சந்தோஷப்படுத்தும்'' என்று விளக்கிச் சொன்னாள்.

அப்படிப் பேசுகிறபோதெல்லாம், கண்களை படபடக்கச் செய்தும், தலையைச் சாய்த்தும், உடம்பை லேசாக குலுக்கியும் இடையை அசைத்தும், அவனுக்கு அருகே வந்தும், நெடுமூச்சு விட்டும் உதடு கடித்தும் சிறிய விஷமங்கள் செய்தாள்.

கௌசிகன், வந்திருப்பது தேவலோக மங்கை என்பதை புரிந்து கொண்டான். வேண்டாம். விலகிப்போ என்று எச்சரித்தான். இந்த முறை காமத்தில் சிக்கப்போவ தில்லை என்று தெளிவாக இருந்தான்.

அவன் தாண்டிப்போக, ரம்பை கைநீட்டி மறித்தாள். மெல்ல அருகே வந்து அவன்மீது படர்ந்தாள்.

''இவ்வளவு கேட்கிறேன். இன்னமும் நகர்கிறாயே. ஏன் இப்படி? என்னை ஏற்றுக் கொள்'' என்று அவன்மீது அழுந்தினாள்.

கௌசிகன் அவளை உதறினான்.

''இது கல், இது அசையாது, கல்மீது மோதிய நீயும் இனி கல்'' என்று உரக்க சபித்தான்.

ரம்பை நடுங்கினாள். மெல்லமெல்ல கல்லானாள்.

காமத்தை ஜெயித்தவனுக்கு கோபத்தை ஜெயிக்க முடியவில்லை. கல்லான ரம்பையைப் பார்த்து, கௌசிகன் வேதனைப்பட்டான்.



காமத்தை தடுக்கப்போய் கோபம் பொங்கி விட்டதே. மறுபடியும் தவவலிமையை இழந்துவிட்டோமே... நான் என்ற அகங்காரத்தோடு பேசிவிட்டேனே... இனி என்ன செய்வது? திரும்பவும் வேறுபக்கம் போக வேண்டும்.

அவன் வேறு திசை நோக்கி மெல்ல நடந்தான்.

இம்முறை எப்படியாவது, எப்படியாவது ஜெயித்தே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டான்.

தேவலோகத்தில் உள்ளவர்களுக்கு ரம்பையின் இழப்பு பெரிதாக பாதித்தாலும், அவர்களுடைய திட்டம் நிறைவேறியது. மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். இனி, சிறிதுகாலம் கௌசிகனுடைய போட்டி இருக்காது என்று ஆரவாரம்.

இந்த முறை கௌசிகன் கிழக்கு கடற்கரை ஓரமாக தெற்கு நோக்கி வனாந்திரங்களைத் தாண்டி, சாரல் விழும் ஒரு அருவிக்கரைக்கு அருகே அமர்ந்தான். தன்னுடைய தோல்விகளை பட்டியலிட்டுப் பார்த்தான். இனி எதனாலும் அசைக்கமுடியாத ஆளாக தான் இருக்கவேண்டும் என்று தெரிந்து கொண்டான்.

காமத்தால் கோபமும், கோபத்தால் காமமும் எதுவும் தன்னுடைய தவவலிமையை குறைத்துவிடக்கூடாது. எவர் பிரச்சினையிலும் ஈடுபடக்கூடாது என்று அமைதியாய் தன்னை உள்ளடக்கி சிறிய குடிசை கட்டி சுற்றி தானியங்கள் விதைத்து, விதைத்த தானியங்களை அறுவடை செய்து, மாதம் ஒருமுறை உணவு உண்டு, தன் தவத்தைத் தொடர்ந்து வந்தான்.

ஒரு கைப்பிடியளவு தானியம் ஒவ்வொரு மாதமும் உண்பது அவன் வழக்கமாக இருந்துவந்தது. ஒரு மாதம் முழுவதும் தவம் செய்து, தானியத்தை கையிலெடுத்து

சுத்தம் செய்து, உண்ணத் துவங்குகையில், குடிசை வாசலில் ஒரு வறியவர் கையேந்தி, மிகவும் பசிக்கிறது என்று புலம்பினார்.

''வா. என்னிடம் ஒரு கைப்பிடி அளவு உணவு இருக்கிறது. வந்து உட்கார். எனக்கு மிகுந்த பசி. நாம் இருவரும் பசிர்ந்து கொள்ளலாம்'' என்று தானியத்தை கிண்ணத்திலிருந்து அவரிடம் கொடுத்தான்.

''நீ உண்டு விட்டு, மிச்சம் எனக்குக் கொடு. அதை நான் உண்கிறேன்'' என்று பணிவாக சொல்லி, அவருக்கு உபசரணைகள் செய்தான்.

அந்த வறியவருக்கு கடும்பசி. தானியத்தை அப்படியே வாயில் போட்டுக்கொண்டார். அரைத்துத் தின்றார். ஒட்டிக்கொண்டிருந்த இரண்டு மூன்று மணிகளையும், கையால் தடவி வாயில் இட்டுக்கொண்டார். வெறும் கிண்ணத்தை கௌசிகன் எதிரே வைத்தார்.

சப்தமெழ அரைத்து ருசித்து சப்புக்கொட்டி தானியங்கள் சாப்பிட்டார்.

கௌசிகன் அசரவில்லை. தன் கோபத்தை கிளறுவதற்காக இந்தக் காரியம் நடைபெறுகிறது. பசியால் கோபம் வந்தவிடுமென்று இவன் நினைக்கிறான். இல்லை. எதிரே இருப்பவன் பசி எனக்கு புரிகிறது. அது என்னைக் காட்டிலும் கடும்பசி. என்னால் இந்தப் பசியைப் புரிந்து கொள்ள முடியும். அடுத்த மாதம் வரை தொடர்ந்து அமைதியாக இருக்க முடியும். இவன் பசி பொறுக்காது உண்கிறான். எனவே இவன் பசி தீர்ப்பது நல்லது.

எனக்குள் இருக்கும் பசி, எனக்கு கோபமாக மாறவில்லை. பசி பசியாகவே இருக்கிறது. பசி உற்றுப் பார்க்க அடங்கிப் போகிறது. அமைதியாகிறது. எனவே,



பசியைக் கிளறி கோபமாக்காமல், பசியை உற்றுப்பார்த்து அமைதியாக்கி பசியை ஒத்திப்போட என்னால் முடியும். எதிரே இருப்பவனால் முடியாது. எனவே எதிரே இருப்பவரை கோபிக்காமல், அவன் வயிறார உண்பதற்கு வணக்கம் சொல்லி, நாம் மறுபடியும் தவத்தை தொடர்வதே நல்லது'' என்று யோசித்து வந்தவரை நீர் கொடுத்து உபசரித்தான்.

''போதுமா, இன்னும் ஏதேனும் தேவையா?'' என்று கேட்டான்.

எதிரே வந்த வறியவர் தேவலோக இந்திரன். மற்றவர்களை அனுப்பி தன்னுடைய ஜம்பம் பலிக்காததால் தானே வறியவனாக வேடம் தாங்கி, பசியால் கௌசிகன் கோபத்தை கிளற முயற்சி செய்தான். சப்தமெழ தானியத்தை அரைத்து அவன் ஆசையைத் தூண்டினான்.

ஆனால், கௌசிகன் சிறிதளவும் மயங்காமல், நெல்முனையளவும் கோபப்படாமல், மிகுந்த அமைதியாய் பசியை ஏற்றுக் கொண்டான்.

எதிரேயுள்ள தேவேந்திரனை மறைந்திருந்து கவனித்திருந்த பிரும்மா, விஷ்ணு, சிவன் முதலியோர் அங்கு தோன்றினார்கள். கௌசிகனை ஆசீர்வதித்தார்கள். உண்மையிலேயே கோபத்தை அடக்கிய நீங்கள் பிரும்மரிஷி. நிச்சயமாக பிரும்மரிஷி என்று சொன்னார்கள்.

வசிஷ்டர் இந்தச் செய்தியை மனக்கண்ணால் கண்டு பளிச்சென்று கௌசிகன் முன்பு தோன்றினார்.

''முனிவனே... நானும் உம்மை மனப்பூர்வமாக பிரும்மரிஷி என்று ஏற்கிறேன். உம்மால் கோபத்தை ஜெயிக்க முடிந்து விட்டது. உம்மால் மிகப்பெரிய காரியம் ஆகப் போகிறது. இது அவதார புருஷர்களுக்கு வழிகாட்டப்

போகிறது. சாதாரண மக்களுக்கு வழிகாட்டிய அரசன் என்ற இடத்திலிருந்து, அவதாரங்களுக்கு வழிகாட்டக்கூடிய மகாமுனிவர்கள் இடத்தை நீங்கள் அடையப் போகிறீர்கள். நான் மறுபடியும் மனம் குளிர, உங்களை பிரும்மரிஷி என்று அழைக்கிறேன்.''

கௌசிகன். வசிஷ்டரின் காலில் விழுந்து வணங்கினான். மனதுக்குள் பூஜை செய்தான்.

தன்னுடைய நோக்கம் நிறைவேறிவிட்டதற்கான காரணம் வசிஷ்டரே என்று சொல்லி, அவரைப் பெரிதும் புகழ்ந்தான்.

''ஏதேனும் ஒரு இலக்கு வைத்துக் கொள்ள வேண்டும். நான் உங்களை இலக்காக வைத்தேன். உங்களை இலக்காக வைத்ததால் பொறாமையும் பட்டேன். ஆனால். இப்போது எனக்குள் நெல்முனையளவும் எந்தவித கல்மிஷமும் இல்லை. உங்கள் வாயால் பிரும்மரிஷி என்று என்னை அழைத்தது குளிர வைத்துவிட்டது. ஐயனே என்னை உற்சாகப்படுத்திய உமக்கு எனது நமஸ்காரம்'' என்று பலமுறை வசிஷ்டரை வணங்கினான்.

கடவுளர்கள் தங்கள் இடம் நோக்கிப் போனார்கள் கௌசிகர் வடக்கு நோக்கிப் போய் அயோத்தி நகரத்தின் வாயிற் கதவைத் தட்டினார்.

அயோத்தி நகரம் விழித்தெழுந்து விட்டது.

தசரதன் மிகுந்த சந்தோஷத்தோடு, அவரை வாயிலிலிருந்து வரவேற்றார்.

''உங்களைப் பற்றி, வசிஷ்டர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வசிஷ்டர் உங்களைப் புகழ்ந்து பேசுவதை காதார அனுபவித்திருக்கிறேன். நீங்கள் என்னுடைய அரண்மனைக்கு



எழுந்தருளியது. மிகுந்த சந்தோஷம். என்ன வேண்டும். சொல்லுங்கள்'' என்று பணிவோடு கேட்டார்.

''அரசனே... தவத்தின் பொருட்டு இந்த பரத கண்டத்தில் பல மூலைகளுக்கு நான் பயணம் செய்கிறேன். தென்திசையில் அரக்கர்களின் அட்டகாசம் மெல்ல மெல்ல அதிகரித்து வருகிறது. வலிமைமிக்க ஒரு அரக்கனின் கீழ் மற்ற அரக்கர்கள் வளர்ந்து வருகிறார்கள். அவர்களும் தவம் செய்து தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் வலிமை உச்சகட்டத்தை அடைந்துவிட்டால், மானுடர்கள்தான் முதலில் கடுமையாக பாதிக்கப் படுவார்கள். பிறகு விண்ணுலகம் பாதிக்கப்படும். எனவே இந்த அரக்கர்களைக் கூண்டோடு அழிப்பதற்கு இங்கே சில விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளை உனக்கு சொல்வதற்கில்லை. ஆயினும் இந்த அரக்கர்களை அழிக்க வேண்டியது அரசனான உனது கடமை.

உனக்கு வயதாகிவிட்டது. எனவே, உன்னுடைய மகனான ராமனையும், அவனது தம்பியான லட்சுமணனையும் என்னுடன் அனுப்பு. இந்த அரக்கர்களுடைய வதத்தின் ஆரம்பத்தை நான் நிகழ்த்தி வைக்கிறேன்'' என்று சொன்னார்.

தசரதன் திகைத்தான். ''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. அரக்கர்களை அழிக்கவேண்டும் என்றால், படைபலமும் யுத்தப்பயிற்சியுமுள்ள, என்னை மறந்துவிட்டு இளம்குமாரர்களாகிய ராமனையும் லட்சுமணனையும் கேட்கிறீர்கள். குழந்தைகளால் அரக்கர்களோடு சண்டை போட முடியுமா. நீங்கள் ஏன் என்னை ஒதுக்கி வைத்துவிட்டு, என் குழந்தைகளை தேர்ந்தெடுத்தீர்கள்?

அவர்கள் அவதாரபுருஷர்கள் என்கிற எண்ணம் எனக்குண்டு. ஆனாலும், இவ்வளவு இளம்பிராயத்தில் ஒரு

அவதாரபுருஷன் என்ன செய்ய முடியும். அதற்கு ஒரு வயது வேண்டுமல்லவா. முனிவர் நீங்கள் துணையிருப்பினும், அவர்கள் காடுதாண்டி நடக்கக்கூட சக்தி இருக்காதே என்று அஞ்சுகிறேன்'' என்று பணிவோடு பேசினார்.

விஸ்வாமித்திரர் மெல்ல சிரித்தார். ''நான் சினம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்று நினைக்கிறேன். நான் சினம் கொண்டால் உன்னால் தாங்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆயினும் உன்னுடைய மழலையான, முதிர்ச்சியற்ற பேச்சு எனக்கு வருத்தத்தைத் தருகிறது.

தசரதா! நீ வேண்டாம் என்று உன் குழந்தைகளை கேட்கிறபோதே, உன் குழந்தைகளால்தான் இந்தக் காரியத்தை செய்துமுடிக்க முடியும் என்பது உனக்குப் புரியவில்லையா. நான் உன் குழந்தைகளை அரக்க வேட்டைக்கு மட்டும் அழைத்துப்போகவில்லை. அடுத்தபடி அவர்கள் தெளிவோடு வளர, பலத்தோடு நிற்க. எனக்குத் தெரிந்த வித்தைகளை கற்றுக் கொடுக்கப் போகிறேன்.

வசிஷ்டர் ஆரம்ப பாடங்களை நடத்தினார். அதற்கு மேற்கொண்டு அவர்கள் கற்க வேண்டிய விஷயங்களை நான்தான் கற்றுத்தர வேண்டும். எனவே, தாமதிக்காமல் வசிஷ்டரோடு ஆலோசனை செய்து, உன் குழந்தைகளை என்னிடம் அனுப்பு'' என்று வேண்டினார்.

கௌசிகர் பேச்சை தசரதன் காது கொடுத்து கேட்டான். திரும்பி வசிஷ்டரைப் பார்த்தான்.

வசிஷ்டர் அரசனுக்கு தேறுதல் சொன்னார். ''காரணமின்றி கௌசிகன் என்கிற விஸ்வாமித்திரர் ஒருபொழுதும் இவ்விதமாய் உன் குழந்தைகளை அழைக்கமாட்டார். உன்



ந்தைகள் அவதாரபுருஷர்கள் என்பது மறுபடி
தியாயிற்று. ஜாதகத்தாலோ, தேவதைகளின் வரவால்
டுமின்றி இதோ தேவதைகளுக்கெல்லாம் உயர்வான
மகரிஷி இங்கு வந்து உன் குழந்தைகளை அழைக்கிறார்.

ஆக, இவர்கள் அவதாரம் இல்லையென்றால். இந்த
_த்திற்கு இவர் வரவேண்டிய அவசியமேயில்லை.
தெளவும் அச்சப்படாமல் அவர்களை விஸ்வாமித்திர
ாடு அனுப்பு. விஸ்வாமித்திரருடைய பலம் முழுவதும்
ந்த அவதார புருஷர்களின் தோளில் இறக்கப்படும்.
வலையே கொள்ள வேண்டாம். இது உன்னுடைய
ாக்கியம்'' என்று சொல்ல, தசரதன், கௌசிகன் என்கிற
ிஸ்வாமித்திரரின் காலில் விழுந்து தன் குழந்தைகளைக்
காண்டு வந்து அவர்களிடம் ஒப்படைத்தான்.

தந்தையை, தாயை, குல குருவை, சபையை
வணங்கிய ராமரும், லட்சுமணரும் விஸ்வாமித்திரரை
றிட்டுப் பார்த்தார்கள். நீங்கள் என்ன சொன்னாலும்
கேட்கத் தயார் என்பது போல் வணங்கி நின்றார்கள்.

அவர்கள் வணக்கம் விஸ்வாமித்திரருக்கு பெரும் களிப்பைக் கொடுத்தது. தான் பிறந்த பயனை இப்பொழுது தான் பூர்த்தி செய்யப் போகிறோம் என்பது புரிந்தது. அவர் மௌனமாக கோட்டையை விட்டு வெளியே நடந்தார்.

ராஜகுமாரர்கள் பின்தொடர்ந்தார்கள்.

கௌசிகன் என்கிற விஸ்வாமித்திரர் அந்த ராஜ குமாரர்களோடு சிரிக்க சிரிக்கப் பேசினார் என்று ராமாயணம் சொல்கிறது.

வெகுதூரம் நடந்து அன்றிரவு அவர்கள் ஒரு நதிக்கரையில் இளைப்பாறினார்கள். இருள் கவிகின்ற அந்த

நேர்த்தில், ராஜகுமாரர் பயம்போக்க விஸ்வாமித்திரர் பேச்சுக் கொடுக்கத் துவங்கினார்..

பல வீரர்கள். கதைகளையும் முனிவர்களின் கதைகளையும் விரிவாக சொன்னார்.

வாழ்க்கையில் ஜெயித்தவர்களின் கதையைக் கேட்கிறபோது மனதுக்கு சந்தோஷம் அதிகமாகிறது. அதே போல் தானும் ஜெயிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அந்தப் போராட்டம் அல்லது வாழ்வு யுத்தம் நம்மையும் தொற்றிக் கொள்கிறது.

கௌசிகன் ஒவ்வொரு முனிவராகச் சொல்லி வருகிறபோது ராமன் பணிவாக கைகூப்பி, ''உங்களைப் பற்றியும் சொல்லுங்கள். உங்கள் வாழ்க்கை எத்தகையது என்று விளக்குங்கள். எங்களுக்கு அது உபயோகமாக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று சொன்னான்.

''எதனால் அப்படி நினைக்கிறாய் ராமா?'' முனிவர் கனிவாகக் கேட்டார்.

''உங்களைக் கண்டு எங்கள் தந்தை பயந்தார். வசிஷ்டர்கூட லேசாக மனம் கலங்கினார். உங்கள் வருகைக்குப் பிறகு எங்கள் சபை மிக நிசப்தமாய் இருந்தது. உங்கள் ஒவ்வொரு அசையும் மிக கம்பீரமாய் இருந்ததை நாங்கள் கண்டோம்.

பல முனிவர்கள், சாதுக்கள் எங்கள் அரச சபைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால். நீங்கள் வந்தபோது ஏற்பட்ட இந்த மாற்றம் எங்களுக்கு வியப்பாக இருந்தது. உங்களுடைய ஒவ்வொரு அடியும். ஒரு அரசனுடைய நடையைப் போல்தான் எங்களுக்கு தென்பட்டதே தவிர, ஒரு முனிவர் வருவது போல தெரியவேயில்லை.



பகையரசன் யாரோ வந்துவிட்டார் என்றுகூட நான் முதலில் தயங்கினேன்.

எனவே, நீங்கள் யாரென்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்?''

''சொற்ப காலம் நான் அரசனாக இருந்தது உண்மை தான். அந்த குணங்கள் என் நடையிலும், பேச்சிலும், பார்வையிலும் படிந்திருப்பதும் உண்மைதான். ஆனால், ராமா! அரசனாக இருப்பதைக் காட்டிலும். ஒரு ரிஷியாக இருப்பதையே நான் மிகவும் விரும்பினேன். ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

ராமா! காடுகளில் திரிவதைப் போல சந்தோஷமான விஷயம் உலகத்தில் எதுவுமில்லை. அரசனின் சபையில் என்ன இருக்கிறது. அந்தப்புரத்தில் எந்த சுகமுமில்லை ராமா.

இந்த உலகம் குறிப்பாய் இந்த பரதகண்டம் எவ்வளவு பெரியது. எத்தனை விதமான மனிதர்கள் எத்தனை விதமான மொழிகள், எத்தனை விதமான வனங்கள் எத்தனை விதமான நகரங்கள் அத்தனையையும் பார்த்துப் பார்த்து களிப்படையத்தான் வாழ்க்கை இருக்கிறதே தவிர, ஏதோ ஒரு சிறு நகரத்தில் ஒரு சிறு கோட்டைக்குள், ஒரு சிறு மாளிகையில் வாழ்க்கை முடிந்துவிடுவதை நான் விரும்பவில்லை.

எனவேதான். எது மிக உயர்வானதோ, அதை அடைவதற்காக, நான் அரசன் என்கிற வேடத்தை உதறிவிட்டு வெளியே வந்தேன். மிகமிக சந்தோஷமாக இருக்கிறேன் ராமா!'' என்று கௌசிகன் சொன்னான்.

அந்த இளவரசனுக்கு அந்த முனிவனின் சொல் மிக ஆழமாய் மனதில் பட்டது.

‘‘ஐயா...’’ லட்சுமணன் கைகூப்பினான்.

முனிவர் அவனை திரும்பிப் பார்த்தார்.

‘‘வேடிக்கை பார்ப்பதற்காகவா அரச வாழ்க்கையை விட்டு வெளியே வந்தீர்கள். அப்படியானால் அது கடமை தவறியதாகாதா. உங்களை நம்பியிருக்கும் பெண்டு பிள்ளைகளை, உங்களை நம்பியிருக்கும் குடிமக்களை ஒரு அரசன் காப்பாற்ற வேண்டாமா. அந்த வேலையை செய்யாமல் உலகத்தைப் பார்ப்பதற்காக, ஒருவன் மாளிகையை விட்டு வெளியே வருவது சரியென்று நீங்கள் சொல்கிறீர்களா?’’ கேள்வி கூர்மையாக இருந்தாலும், கேட்கப்பட்ட விதம் பணிவாக இருந்தது.

கௌசிகன் கண்களை மூடிக் கொண்டார்.

‘‘தகுந்த ஏற்பாடுகள் அங்கு செய்துவிட்டுத்தான் நான் வெளியே வந்தேன். என்னுடைய மனைவிகளும் குழந்தைகளும், நான் போதும் என்கிற மனோநிலைக்கு தள்ளப்பட்ட பிறகுதான் நான் என் நகரம் விட்டு வெளியே வந்தேன். அவர்களை போஷிக்கவோ, காவல் காக்கவோ, வழிநடத்தவோ வயது முதிர்ந்த மந்திரி பிரதானிகளை நியமித்திருந்தேன். குடிமக்களுக்காக என்னுடைய மகனை இளவரசனாக நியமித்து, வெளியே வருகிறபோது, அவனை அரசனாகவும் பட்டாபிஷேகம் செய்துவிட்டுத்தான் வந்தேன். அவனுக்கு நல்ல மந்திரிகளின் உறவுகளை ஏற்படுத்தினேன்.

ஒரு சங்கிலி, தொடர்ந்து அங்கே நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், என்னுடைய சேவை அல்லது என்னுடைய உபயோகம் அல்லது என் கர்வம், என்னுடைய மாளிகையோடு என் நகரத்தோடு முடிந்துவிடுவதாக நான் நினைக்கவில்லை லட்சுமணா.



இந்தப் பூவுலகம் முழுவதும் பயன்பட வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஒரு குறுகிய வட்டத்தில் ஒரு இனத்தில் ஒரு மொழிக்கு சொந்தக்காரனாக இல்லாமல் இந்த பரதகண்டம் முழுவதும், இந்தப் புண்ணிய பூமி முழுவதும் நான் சுற்றி வந்தேன். இங்குள்ள நல்லவைகளையும் கெட்டவைகளையும் உற்று நோக்கினேன்.

ராமா... வலிவுள்ளவனுக்கு உலகம் முழுவதும் சொந்தம். உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நான் போக வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது. நான் அங்கேயும் போவேன். அதற்கு முன் இந்த பரதகண்டத்தை பல முறை குறுக்கும்நெடுக்கும் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலை பூர்த்தி செய்து கொண்டேன்.

இப்போது நான் போவது ஒரு முக்கியமான காரியத்திற்காக...?

‘‘அப்படி என்ன காரியம்?’’

‘‘ஒரு யுத்தம் செய்ய வேண்டும்.’’

‘‘யாரோடு, யார் செய்ய வேண்டும்?’’

‘‘தாடகை என்ற பெண்ணோடு. மாரீசன், சுபாகு என்ற இரண்டு அரக்கர்களோடு நீங்கள் போர் புரிய வேண்டும்.’’

‘‘தாடகை என்பவள் பெண்ணல்லவா?’’ ராமன் வியப்போடு கேட்டான்.

‘‘ஆமாம். பெண்தான்.’’

‘‘பெண்ணைக் கொல்வது தவறென்று சொல்லப் பட்டிருக்கிறதே.’’

‘‘பெண் பெண்ணாக இருக்கும்போது, அவளைக் கொல்வது மிகவும் தவறு. பெண், பேயாகி அரக்கியாகி, நம்மைக் கொல்ல வருகிறபோது நாம் என்ன செய்ய முடியும். அவளை கொன்றுதான் ஆக வேண்டும்.’’

‘‘அங்கஹீனப்படுத்தினால் போதாதா?’’

‘‘இல்லை. அங்கஹீனப்படுத்தினால் அவள் ஆத்திரம் அதிகமாகும். அவள் நிச்சயம் நம்மை மறுபடி தாக்க வருவாள். நம்மை அழித்துவிட நினைப்பாள். அழித்துவிட நினைக்கின்ற பெண்ணை அழிப்பதுதான் உத்தமம்.’’

‘‘தாடகை என்பவள் யார்?’’ லட்சுமணன் ஆவலாக கேட்டான்.

‘‘அரக்கி என்று சுருக்கமாக சொல்லலாம். ஒரு மிக நல்ல யட்ஷினி சாபத்தால் அரக்கியகி விட்டாள் என்றும் சொல்லலாம்.

தாடகை என்பவள் பெண்ணின் மோசமான சக்தி. தாடகை என்பவள் பெண்ணின் அழிவான சக்தி. தாடகை என்பவள் ஒரு தவத்தை கலைப்பதற்காக, உலகத்தின் நல்லதை குலைப்பதற்காக, ஆக்ரோஷமாக, ஆத்திரமாக கேவலமாக, கொடுமையாக, கிளர்ந்து எழுந்த பெண் சக்தி. நல்லதை கெடுக்கக்கூடியது ஆண் சக்தியாக இருந்தாலென்ன, பெண் சக்தியாக இருந்தாலென்ன.

நல்லதை அழிக்கக்கூடியது எதையும் அழிக்கலாம் என்பதுதான் நம்முடைய சாஸ்திரம்.’’

‘‘அப்பொழுது சுபாகு என்பது யார்?’’

‘‘சுபாகு என்பது பிள்ளை என்கிற பாசத்தின் மோசமான உருவம். ஒரு விஷயம் நல்லதாகவோ கெட்டதாகவோ பரிமளிக்கும். சுபாகு என்கிற பிள்ளைப்பாசம் ஒரு மோசமான பெண் சக்தியை பற்றிக் கொண்டு, அந்த பெண் சக்தி என்னவெல்லாம் சொல்லுகிறதோ அதையெல்லாம் அழித்து நாசம் செய்ய, கூடவே துணையாக இருப்பது. அந்த பிள்ளைப்பாசம் என்கிற சக்தியை நாம் அழித்துத்தான் ஆகவேண்டும்.’’



‘‘பிறகு மாரீசன் என்பது என்ன?’’

‘‘மற்றவருக்காக ஆடம்பரமாய் உதவி செய்தல், மற்றவரின் விருப்பத்திற்காக எதில் வேண்டுமானாலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல். மற்றவரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக துணிச்சலாகவும் அசட்டுத்தனமாகவும் தீயவை செய்தல். கம்பீரம் என்று நினைத்துக் கொண்டு, நல்லவற்றிற்கு எதிராக அலைதல்.

மாரீசன் என்பவன் வீணே தன்னை உயர்த்திக் கொள்ள, தன் அகம்பாவத்தை வளர்த்துக் கொள்ள மற்றவருக்கு தீது செய்யும் பிறவி. அவனையும் நாம் அழித்தாக வேண்டும்.’’

‘‘ஐயா... எனக்கொரு கேள்வி இருக்கிறது?’’ ராமன் பணிவோடு அவரை நோக்கினான்.

‘‘கேள் ராமா.’’

‘‘இந்த மூன்று சக்திகளும் உங்களைத் தொடர்ந்து தாக்கின அல்லவா?’’

‘‘ஆமாம். பெண் என்கிற சக்தியிலிருந்து நான் வெளிவந்துவிட்டேன். பெண் மோசமாக நடந்து கொள்கிற போது, மயக்கமாக நடந்து கொள்கிறபோது, ஆபாசமாக நடந்த கொள்கிறபோது, அதனால் தாக்கப்பட்டு, என் தவவலிமையை இழந்து, மறுபடியும் அதை ஜெயித்தேன்.

பிள்ளைப்பாசம் என்கிற சக்தியில் கட்டுண்டு கிடந்து, பல வருடங்கள் அதில் ஊறித் திளைத்து, பிறகு அதிலிருந்து வெளிவந்தேன்.

மற்றவருக்கு செய்தல் என்கிற அகம்பாவத்தோடு திரிந்துகொண்டிருந்த என்னை, என் தவவலிமை காப்பாற்றியது.

ஆனால், அந்த சக்திகள் இப்போது அரக்க உருவம் எடுத்துக் கொண்டு, என்னுடைய தவத்தை தொடர்ந்து தாக்க வருகின்றன. அவைகளை ராமா... லட்சுமணா... நீங்கள் தான் தாக்க வேண்டும். நீங்கள்தான் என்னை அவை துன்புறுத்தாமலிருக்க உதவி செய்ய வேண்டும்.''

'முனிவரே... எவ்வளவு பெரிய சக்தி. எவ்வளவு தவவலிமை, இருப்பினும் உங்களால் ஏன் இவைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. இவைகளிலிருந்து ஒரு முறை மீண்டபிறகும், மறுபடியும் இவைகளை நோக்கி எதற்கு பயப்படுகிறீர்கள். இவைகளை நிர்மூலம் செய்வதற்கு உங்களால் ஏன் இயலவில்லை.''

''இந்த உலகத்தில் நல்லவை போலும் கெட்டவையும் எப்போதும் இருக்கும் சக்திகள் கெட்டவைகளை ஒருக்காலும் அழித்தல் இயலாது. எப்போதும் மொத்தமாய் தோன்றிக் கொண்டுதான் இருக்கும். கெட்டவைகளை, அறவே அழித்தல் என்பது இயலாத காரியம்.

ஆயினும் அறவே அழிக்க சிலரால் முடியும். அவர்களுக்குப் பெயர் அவதாரம். ராமா... நீ கடவுளின் அம்சம். நீயொரு அவதாரம். லட்சுமணா... நீ இந்த கடவுள்களுக்கு துணையான அம்சம். நீயும் ஒரு அவதாரம். உங்களால்தான் தாடகை என்கிற மோசமான பெண் சக்தியை, பெண்சக்தியினால் ஏற்பட்ட மோசமான பிள்ளைப்பாசம் என்கிற சக்தியை, அகம்பாவம் என்கிற ஆடம்பரமான ஒரு சக்தியை அழிக்க முடியும்.

ராமா... என் தவவலிமை ஒரு அளவிற்கே இயலும், என் முயற்சி ஒரு அளவிற்கே என்னை உயர்த்தும். கடவுள் என்கிற விஷயத்தின் கீழ், யார் சரணாகதி அடைகிறார்களோ, அவர்களது முயற்சி மட்டுமல்லாமல், அவர்களது முயற்சி தொடர்ந்து வளர அந்தக் கடவுள் சக்தி காப்பாற்றும்.



ராமா... நீ கடவுளின் அம்சம். மகா விஷ்ணுவின் அவதாரம். ஐயனே... இங்கு காக்கும் பொருட்டு இந்த பூமிக்கு வந்திருக்கிறாய். காத்தல் என்பது தீயவைகளை அழித்தல் என்பதால்தான் நிகழும். இந்தக் காத்தலை, காத்தலுக்காக அழித்தலை, நீ ஒரு மனிதனாக நின்று செய்யப் போகிறாய். மனிதரில் உன்னதனாய் நீ வளரப் போகிறாய். வாழ்க்கை என்பது என்னவென்பதை நீ உலகுக்கு காட்டப் போகிறாய். எப்படி வாழ்வது என்பதை சொல்லித்தரப் போகிறாய்.

ராமா... உனக்கு, மனிதனாக அவதரித்த உனக்கு, ஆரம்பப் பாடங்களை கற்றுக் கொடுப்பதற்காக இந்த கௌசிகன் இத்துணை வேதனைகளையும் அனுபவித்தான்.

ராமா... நான் தட்டுத்தடுமாறி கற்றுக் கொண்டதை, நான் உருண்டு புரண்டு தோல்வியுற்று தோல்வியுற்று அறிந்துகொண்ட பாடங்களை, என் உள்ளங்கையில் வைத்து உன் உள்ளங்கையில் தாரை வார்க்கிறேன்.

ராமா... காமத்தாலும், கர்வத்தாலும் நம்மை இழந்து விடுவது நல்லதல்ல. காமமும் கர்வமும் படபடப்புகளை கொடுத்துவிடும். படபடப்பில் தவறான முடிவுகள்தான் எடுக்கப்படும். எனவே, இவையிரண்டிலும் முற்றிலுமாய் விலகி இருக்க, இதோ இந்த க்ஷணம் முதல் நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

ஐயனே லட்சுமணா! மற்றவருக்காக தன்னை தவறான வழியில் ஈடுபடுத்திக் கொள்ளுதல் என்பதை அறவே தகர்க்கும் ஒரு ஆண்மகனாக நீ வரவேண்டும். உலகத்தின் மிகச்சிறந்த ஒரு ஆண்மகனுக்காக, உலகத்தின் ஒரு அவதார புருஷனுக்காக, உன்னை முழுவதுமாய் ஈடுபடுத்திக் கொள்ளும் ஒரு ஆண்மகனாய் நீ வளர வேண்டும். ராமரைத்

தவிர வேறு எது பற்றியும் நீ யோசித்தலாகாது. ராமர் என்கிற அவதாரம் பூர்த்தி செய்யும் பொருட்டே நீ இங்கே வந்திருக்கிறாய் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அவருக்காகவே உண்வு, அவருக்காகவே வாழ்க்கை, அவருக்காகவே உன்னுடைய சுகதுக்கங்கள் அனைத்தையும் தத்தம் செய்து கொள்ளவேண்டும். இப்படி வாழ்கின்ற உன்னை உலகம் தலையில் வைத்துக் கொண்டாடும்.

ராமா! வாழ்க்கை என்பது என்னவென்று தெரியாமல் விதம்விதமாய் இந்த பரதகண்டத்தில் ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உன் வாழ்க்கையின் மூலம், உன் சரிதத்தின் மூலம் வாழ்க்கை என்பது பற்றிய தெளிவு, இங்குள்ள ஜனங்களுக்கு நீ தரவேண்டும்.

வலிவுள்ளவன் கர்வமுள்ளவனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. யுத்தம் செய்பவன் ஓங்காரமாய் சிரிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. ஐயனே! கருணையோடு யுத்தம் செய்வது என்ன என்பதை, காதலோடு போர் புரிவது என்ன என்பதை உன்னால் இந்த உலகம் அறியட்டும். எதிரிகளைக் கூட சிரமமில்லாமல், அழிக்கின்ற தன்மையை நீ கைகொண்டு இங்குள்ளவர்களுக்கு அவ்விதம் யுத்தம் செய்ய முடியும் என்பதை வலியுறுத்து.

ஆயுதமற்று எதிரி இருக்கும்போது, அவனை மன்னித்து திருப்பி அனுப்புகின்ற பேராண்மை என்ன வென்பதை இவ்வுலகிற்கு வெளிப்படுத்து.

ஐயனே.... மிகமிக அவசரமாய், உன் அவதார நோக்கத்தை இங்கே அமர்ந்து உனக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதைச் சொல்லத்தான் என்னுடைய வாழ்க்கை, இவ்வளவு திருப்புமுனைகளையும் சந்தித்தது.



கௌசிகன் என்கிற அரசன் இங்கே விஸ்வாமித்திரன் என்கிற முனிவனாக, பிரும்மரிஷியாக உருவெடுத்தது, ராமன் என்கிற ராஜகுமாரன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி என்கிற கடவுளாக தோன்றுவதற்காகத்தான்.

ஐயனே... என் வாழ்க்கையினுடைய மிக முக்கியமான கட்டத்தில் நான் இருக்கிறேன். எனக்குத் தெரிந்த எல்லா வித்தைகளையும் இன்று இரவு, நாளை பகல் கற்றுக் கொடுத்து விடுகிறேன். பசியும் தூக்கமும் இல்லா திருக்க பலா, அதிபலா என்ற மந்திரங்கள் உங்களுக்கு நாளை காலை சொல்லித்தரப்படும். ஒவ்வொரு மந்திரமாக உங்களுக்கு உபதேசிக்கப்படும். இந்த மந்திரங்கள் சொல்வதன் மூலம் நீங்கள் அற்புதமான தவ வலிமையை அடைவீர்கள். மந்திரங்களை மட்டுமல்லாமல் அரக்கர் களைக் கொல்லும் பல்வேறு விதமான அஸ்திரங்களை உங்களுக்கு சொல்லித்தரப் போகிறேன்.

க்ஷத்ரியனும் முனிவனுமாய் வாழ்ந்த இந்த விஸ்வாமித்திரன் உங்களுக்கு யுத்தம் என்பதன் கொடுமையை உக்கிரத்தை சொல்லித்தரப் போகிறேன். என்னோடு இருக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் நீங்கள் யுத்தத்தின் பல்வேறு விதமான கூறுகளை அறிந்து கொள்ள முடியும். பல்வேறு விதமான ஆயுதப் பிரயோகங்களைச் செய்து பார்க்க முடியும். இந்த ஆயுதப் பிரயோகங்கள் உங்கள் தந்தைக்கும் மற்ற இரண்டு சகோதரர்களுக்கும்கூட சொல்லித் தரப்பட மாட்டாது.

ராமா... லட்சுமணா... உங்கள் வாழ்க்கை அந்தப்புரத்தில் இருக்கப் போவதில்லை. அது இந்த பரதகண்டம் முழுவதும் நடைபெறப் போகிறது. நீங்கள் வெகு தொலைவில் வெகு நிதானமாய் பல மாதங்களாய்,

பல வருடங்களாய் பல நகரங்களை கிராமங்களை, ஆசிரமங்களை தாண்டப்போகிறீர்கள். பல புண்ணிய க்ஷேத்திரங்களையும் நதிகளையும் தரிசிக்கப் போகிறீர்கள். பல கோயில்களில் அமர்ந்து பூஜை செய்யப் போகிறீர்கள்.

ராமா... லட்சுமணா... உங்கள் பாதம் பட்ட இடங்களெல்லாம் க்ஷேத்திரமாகும். உங்கள் சரிதம் மிகப் பெரிய காவியமாகும். எனவே, இப்போது சற்றுநேரம் கண்ணயர்ந்து நாளை காலை, நீண்டநெடும் பயணத்திற்கு தயாராக இருங்கள்.'' முனிவர் கண்மூடி அமர்ந்தார். வலமும் இடமுமாய் அந்த ராஜகுமாரர்கள் படுத்துக் கொண்டார்கள்.

விடிந்து காலைக் கடன்கள் முடிந்து மிக உற்சாகமாய் அந்த முனிவரை ராஜகுமாரர்கள் பின்தொடர்ந்தார்கள். ஏகப்பட்ட கதைகள், ஏகப்பட்ட மந்திரங்கள், ஏகப்பட்ட தந்திரங்கள் அவர்களுக்கு சொல்லித்தரப்பட்டன. வெகு நிறைவாய் அவர்கள் இதை கற்றுக் கொண்டார்கள்.

உலகத்தில் நல்ல குரு கிடைப்பது என்பது மிக மிக கடினம். அந்த குரு சகலத்தையும் விரைவாய் சொல்லித் தகுவது என்பதும் எளிதில் நடைபெறுவதல்ல.

ராமருக்கும் லட்சுமணருக்கும் கௌசிகன் என்கிற அரசன், விஸ்வாமித்திர் என்கிற முனிவனாய் மலர்ந்து, சகல வித்தைகளும் மிக எளிதாக சொல்லிக் கொடுத்தார்.

அவர்கள் மிக ஆர்வமோடு கற்றார்கள்.

வேள்விக்கூடம் போய் அவர் அமர்ந்தார். கேள்வியைத் துவக்கினார். அவர்கள் காவல் காத்தார்கள்.

தாடகையின் வரவு அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. சுபாகுவும் மாரீசனும் தாடகையைப் பின்தொடர்ந்தார்கள்.



ராமன் சிறிது தயங்கினாலும் முனிவர் சொன்னதை நினைவில் வைத்து, தாடகையின் நெஞ்சை பிளந்து போட்டான். சுபாகுவை அடித்து வீழ்த்தினான். மாரீசனை ஒரு அம்பால் வீசியெறிந்தான்.

தாடகை வதம் நடைபெற்றதும் விஸ்வாமித்திரர், ராமனையும் லக்ஷ்மணனையும் தழுவிக் கொண்டு ஆசீர்வதித்தார். அவர்களோடு மறுபடியும் தொடர்ந்து பயணப்பட்டார்.

மிதிலை நகருக்குள் நுழைந்தார்.

மிதிலை நகரை ஜனகன் ஆட்சி செய்து வந்தார்.

சீதை என்கிற பெண் ஜனகனுக்கு பூமியிலிருந்து கிடைத்திருந்தாள். அவளை மிக ஆதரவோடு அவர் வளர்ந்து வந்தார்.

தன்னுடைய மகளான சீதையைத் திருமணம் செய்து கொள்பவன் மிகப்பெரிய வீரனாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அவரிடமிருந்த சிவதனுசுவை எவர் வளைத்து நாணேற்றுகிறார்களோ, அவர்களுக்கே தனது மகளைத் திருமணம் செய்வதாய் நிச்சயித்து சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ராமரும் லக்ஷ்மணரும் விஸ்வாமித்திரரோடு சுயம்வர மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். நுழைவதற்கு முன்பு பேரழகியான சீதையை நேருக்கு நேர் சந்தித்தார்கள்.

சபையில் அமர்ந்ததும் வில் கொண்டு வரப்பட்டது. வில்லை பல மன்னர்கள் தூக்கி நிறுத்தி முயன்றும் முடியாமல் தோற்றுப் போய் திரும்பி ஓடினார்கள்.

விஸ்வாமித்திரர் சைகை செய்ய, ராமர் விஸ்வா மித்திரரையும் சபையையும் நமஸ்கரித்துவிட்டு, வில்லை

நோக்கி நகர்ந்து, வில்லையும் நமஸ்கரித்துவிட்டு, அதை அழகாக தூக்கி நிறுத்தினார். வளைத்து நாணேற்றினார்.

நாணேற்ற வளைக்கும் பொழுது, வில் அந்த வளைத்தலைத் தாங்காமல் மூன்றாக முறிந்து கொண்டது.

வில் முறிந்த சத்தம் ஊர் முழுவதும் கேட்டது.

சீதை பரவசமானாள். கீழே இறங்கி ஓடிவந்து, ராமருக்கு மாலையிட்டாள்.

தசரதனுக்கு செய்தி போயிற்று. சத்ருக்கனன், பரதனோடு தசரதன் மிதிலை நோக்கி வந்தான்.

தன் உறவினர் பெண்களையும் மந்திரியின் மகளையும் ராமர் - சீதையின் திருமணத்தோடு விரைந்து முடிக்க ஏற்பாடு செய்து ஜனகர் அந்த விவாகங்களை சிறப்பாக நடத்தினார்.

விவாகம் முடியும் வரையில் விஸ்வாமித்திரர், ராமருக்கு அருகே நின்றிருந்தார். விவாகத்தை அவரே நடத்தி வைத்தார்.

விவாகங்கள் முடிந்து, விருந்து, முடிந்து, தசரதன் தன் மகன்களோடும், மருமகள்களோடும் அயோத்தியை நோக்கி ஊர்வலம் வந்தார்.

விஸ்வாமித்திரர் மிதிலையிலிருந்து ராமரை விட்டு விலகிக் கொண்டார்.

ராமரும் லக்ஷ்மணரும் கண்களில் நீர் கோக்க அவரை நமஸ்கரித்தார்கள்.

''எதற்காக இந்த வாழ்க்கைப் பயணத்தை துவக்கினேனோ. அந்த வேலை முடிந்துவிட்டது. இந்த விஸ்வாமித்திரன் எதன் பொருட்டு இங்கு வந்தானோ அந்த வேலை இனிதே நடந்தேறி விட்டது.



ராமா... என் வலிமை முழுவதும் உன் கரங்களுக்குத் தந்தேன். என் தவம் முழுவதும் உன் நெஞ்சிற்கு தந்தேன்.

ராமா... அரக்கர்களை அழிக்கவே நீ பிறந்திருக்கிறாய் தீயவைகளை ஒழிப்பதற்காகவே நீ இங்கு வந்திருக்கிறாய் எனவே, தீயவைகளை ஒழித்து, நல்லவைகளை நிலை நாட்டும் இந்த பெரும் யாகத்தில் என்னுடைய பங்கும் சிறிதளவு இருக்கும். அதற்காகத்தான் இந்த விஸ்வாமித்திரன் மேலும் கீழும், முன்னும் பின்னும், இடதும் வலமும் அலைந்து, பல துன்பங்களுக்கிடையே நல்ல விஷயங்களைத் தெரிந்து கொண்டான்.

என்னுடைய பிறப்பு நோக்கம் முடிவுற்றது. நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.''

என்கிற விஸ்வாமித்திரர் மெல்ல, கௌசிகன் இமயமலைச்சாரலை நோக்கி நடந்தார்.

ராமரும் லக்ஷ்மணரும் கை கூப்ப, அந்த மிகப்பெரிய மகானை வணங்கியபடியே நின்றிருந்தார்கள்.

ராமரும் லக்ஷ்மணரும் விஸ்வாமித்திரர் போவதை, வியப்போடு பார்த்தார்கள்.

''அடுத்தடுத்து பல தேசங்களில் ஜெயித்து, வெற்றி மாலை சூடி, மாற்றரசன் மணிமுடியைப் பறித்து, தன் தலையில் சூடிக்கொண்டு, அவன் சிம்மாசனத்தில் அமர்ந்து, அவன் தேசத்து ஆற்று நீரை தன் தலையில் ஊற்றச் சொல்லி, பட்டாபிஷேகம் செய்து கொள்ளாமல், இந்த அரசன் ஏன் துறவு பூண்டான்'' என்று லக்ஷ்மணன் ராமரைக் கேட்டான்.

ராமன் யோசித்தான்.

'லக்ஷ்மணா! இவர் தேடிய மணிமுடி மிக உயரத்தில் இருக்கிறது. இவர் ஆசைப்பட்ட பட்டாபிஷேகம் மிக

அபூர்வமானது. அரசர்களுக்கெல்லாம் அரசராக, எல்லா அரசர்களும் பணிகின்ற முனிவராக இருப்பதற்கு ஆசைப்பட்டார். அந்த பட்டாபிஷேகத்தை எல்லா தடைகளையும் மீறி நடத்திக் கொண்டார்.

லக்ஷ்மணா... நான் அயோத்திக்கு மன்னனா இருப்பதைவிட, இப்படி சடைமுடி தரித்து முனிவனா சுற்றவே ஆசைப்படுகிறேன். நானும் இவ்விதமாகவே பட்டாபிஷேகம் செய்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆனால், எல்லாம் வல்ல இயற்கை, என்ன நினை திருக்கிறது. என்னைப் பற்றி என்ன திட்டமிட்டிருக்கிற என்று தெரியவில்லை'' என்று மிருதுவாக பதில் சொன்னா

லக்ஷ்மணன் நிமிர்ந்து ராமரைப் பார்த்தான், சிரித்தா

அந்த சிரிப்பிற்கு தனியே ஒரு அர்த்தம் இருந்தது.

முற்றும்